# வன்னியில் வளர்ந்தவை

பொன் குலேந்திரன்

(கனடா)

**வன்னியில் வளர்ந்தவை**

**பொன் குலேந்திரன்**

***(கனடா)***

© ஆசிரியர் | முதல் பதிப்பு: செப்டம்பர் 2019

*Designed by*

மின்கவி
படித்திடு ! படைத்திடு !!

# *அணிந்துரை*

*திரு.பொன்.குலேந்திரன் அவர்களின் "**வன்னியில் வளர்ந்தவை**" சிறுகதைகள் தொகுதியில் 16 சிறுகதைகள் இடம்பெறுகின்றன. இக் கதைகள் அனைத்துமே வரலாற்றோடும், உண்மை நிகழ்வுகளோடும் தொடர்புடையன. தான் கண்டு, கேட்டு, படித்து அறிந்தவற்றை கதைகளாக உருவகித்துள்ளார் நண்பர் **பொன் குலேந்திரன்** அவர்கள்.*

*சிறுகதைத் தொகுதி நூல் ஒன்றை வாசிக்க முற்படும் போது வாசகர்களுக்கு நான்கு விடங்கள் முனைப்பை அல்லது அதனை வாசிப்பதற்கான ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன.*

*1.தலையங்கம் அல்லது நூலுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு என்னத்தை தோற்றுவிக்கின்றது.*

*2.முகப்புப் படம் அல்லது புத்தகத்தின் தோற்றம் என்ன கருத்தைத் தருகின்றது, கவர்; ச்சிகரமானதாக உள்ளதா?*

*3.முகவுரை, அறிமுகவுரை என்பன முக்கிய தகவல்களைத் தருகின்றனவா? அவை இந்தக் கதைகளை வாசிப்பதற்கு உந்துகொலாக அமைகின்றனவா?*

*4.நூலின் பொருளடக்கம் எவ்விதம் ஒழுங்க மைக்கப்பட்டுள்ளது? அந்தப் பொருளடக்கத்திலிருந்து எதனை அறிந்துகொள்ள முடிகின்றது.*

என்பன வாக அமைகின்றன. இவற்றை பொன். குலெந்திரன் அவர்களின் கதைகள் தந்துள்ளன. உண்மை நிகழ்வுகள் எப்பொழுதுமே வாசகர்களைக் கவர்கின்றது. வரலாற்றுக் கதைகளை அவற்றின் உண்மைத் தன்மை மாறாது தரும்போது எமது நாட்டில் அல்லது பிரதேசத்தில்; என்ன நடந்துள்ளது என்பதை அறிய வாசகர்கள் முற்படுவது இயல்பே.

இக்கட்டுரைத் தொகுதியில் வன்னியில் நான் கண்ட காட்சி, குமளமுனை அரியாத்தை, உயிருக்கு உயிர், துணுக்காய் மெலனி டீச்சர், ருத்திரபுரம் கொலை வழக்கு, தபால்காரன் தங்கராசு, அப்பாவைக் காணோம், வீரலட்சுமி, என் காணி நிலம் வேண்டும், குறிப்பம் புளியமரம், தூமகேது, முல்லைத்தீவு போராளி, போர்க் கைதி, சுமை என்பனவாகும்.

எடுத்த எடுப்பிலேயே வன்னியில் நான் கண்டகாட்சி என்னும் சிறுகதையில் இளமைக்காலத்தில் சிங்கள நண்பனோடு காட்டிற்குச் சென்ற கதையினூடாக தமிழ் சிங்கள திருமண உறவையும், நட்பையும் எடுத்தியம்பி பழமொழிகள், திருக்குறன் என்பனவற்றின் பொருளை வாசகர் அறியவைப்பது பாராட்டத்தக்கது. கொக்கு மனிதரைப்போல் வேட்டை யாடினாலும் அது உடனடியாக அதனை உணவாக்கிக் கொள்ளுகின்றது. அதுமட்டுமன்றி ஏனைய பறவைகள் விலங்குகளைப் போலன்றி கொக்கு வேட்டைக்காக மீனைத துரத்திச் செல்லுவதில்லை என்ற வேறுபாட்டை எடுத்துக்காட்டுவது வியப்பளிக்கின்றது. தாமரை மலரில்

தண்ணீர் தரிக்காததற்கான ஊசிப்பொறிமுறை பற்றியும அறிவியல் விளக்கம் தந்துள்ளார்.

குமுளமுனை அரியாத்தை என்னும் கதை நான் பிறந்து வளர்ந்த ஊரில் நடந்த கதை என்பதால் அக்கதை பற்றிய சிலவற்றை நான் நேரடியாகக் காணும் வாய்ப்பையும் பெற்றவன். 'யானை கட்டிய புளி' எங்கள் ஊர் சுடலைக்குப் போகும் வழியில் நின்றது. ஆனால் அது தோட்டச் செய்கைக்காக காடு வெட்டி தீயிட்டபோது அந்த மராமரமும் எரிந்து பட்டுப்;போனது துர்லபம்தான். சின்ன வன்னியனை நினைவுறுத்தக் கூடிய வன்னியன் வளவு, அக்காணியில் இருந்த செங்கல்லாலான கிணறு என்பனவற்றையும் பார்தத்துள்ளேன்.

உயிருக்கு உயிர் என்னும் கதை அண்மையில் இடம்பெற்றதாகவும் வயோதிப பருவத்தில் கருவுற்ற அக்கருவை ஊராரின் வசைமொழிக்கும், கேலிக்கும பயந்து அதனை சிதைக்க நினைந்ததையும் அந்தக் கரு ஆண்மகவாகப் பிறந்து தன்னைக் கருவில் அழிக்காது பாதுகாத்த கிராம வைத்தியரை இறுதிக்காலத்தில் பாதுகாத்த ஒரு இளம் மருத்துவரின் கதையாக தந்திருப்பது நகைச்சுவையாக இருந்தாலும் உண்மையை போட்டுடைத்த கதையாக உள்ளது. எனது வீட்டிற்கு அயலில் அம்மாவும், மகளும் ஒரே நேரத்தில் பிள்ளைகளைப் பெற்றெடுத்ததை ஊரவர்கள் பேசிக் கொண்டதனையும் அப்பிள்ளைகள் உறவு முறை சொல்லமுடியாமல் அண்ணை மாமா என உறவுமுறையைக் கூறி அழைத்ததையும் அறியமுடிந்தது.

துணுக்காய் மெலனி ரீச்சர் என்ற கதையில் ஆசிரியையின் அற்பண சிந்தையோடு செயற்பட்டு கிராமிய மாணவர்களின் கல்வியில் சாதனை படைத்ததையும் அக்கிராமத்தோடும், பாடசாலையோடும் ஒன்றிப் போனதையும் அழகாகப் பதிவிட்டுள்ளார். பல ஆசிரியைகள் வன்னியிலேயே தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளதும் நான் கண்டறிந்ததே.

''உருத்திரபுரம் கொா்லை வழக்கு'' கணவனுக்குத் துரோகம் செய்த மனைவியின் கதை. அது உயர்நீதி மன்றத்தில் நடந்த வழக்கு மட்டுமல்ல அதில் உடந்தையாயிருந்தவர் நீண்ட காலத்திற்குப் பின்னர் விடுதலை பெற்று வந்து எனது பாடசாலைக்கு அயலில் வசித்து வந்ததும் நான் அறிந்த விடயங்கள்.

'தபால்காரன் தங்கராசு' வன்னிப் பிரதேசத்தில் அனேகமான குக்கிராமங்கில் இடம்பெறும் நிகழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றது கதை. முள்ளியவளையைச் சேர்ந்த அரியான் பொய்கை செல்லத்துரை என்பவர் எங்கள் உருக்கு தபால் கொண்டுவருவார். அவர் எனது தந்தையாரின் நண்பர். ஆதலலால் எங்கள் வீட்டில் வந்து இளைப்பாறி நல்ல வெண்காயம், மிளகாய் போட்ட மோர்வாங்கிக் குடித்து விட்டுத்தான் செல்லுவார். எங்கள் வீட்டுத் திண்ணை ஆவரசம் இலைச்சாற்றால் மெழுகப்பட்டுக் குழு குழு என்றிருக்கும் அதில் வந்து படுத்தால் வெளியே சென்றுவந்த வெய்யிலின் கொடுமை தணிந்துவிடும். அதனை அனுபவித்துச் செல்லுவார் அவர். ஆதனை விட வார்லிஸ் என்னும் தமிழ் நன்றாகத் தெரிந்த

*சிங்களவர் ஒருவரும் பணியாற்றினார். 1958ம் ஆண்டுக் கலவரத்தின் பின்னர் அவரை நான் காணவில்லை.*

*"அப்பாவைக் காணோம்" அப்பாவிகளான விவசாயிகள் கொன்று குவிக்கப்பட்ட கதைகள் வன்னியில் ஒவ்வொரு குக்கிராமத்திலும் காணப்படுகின்து. அதன் ஒரு அங்கமாக இக்கதை விபரிக்கப்பட்டுள்ளது.*

*'வீரலட்சுமி' ஆலய வரலாற்றையும் பெண் உரிமையையும் எடுத்தியம்பும் ஒரு கதையாக அமைகின்றது. பெண்கள் அடிமைப்பட்டுக்;கிடந்த காலத்துக் கதையாகவும் தலிபான் இயக்கத்தால் பாகிஸ்தானில் சுடப்பட்டுத் தப்பிப் பிழைத்து பிரபலமான மலாலாவின் கதையைப் புனைவாக்கியுள்ளார் எனத் தெரிகின்றது,*

*"காணி நிலம் வேண்டும்" கேப்பாபுலவுக் கிராமமக்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்து காணிகளைக் கையகப்படுத்தி இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வெளியேற மறுத்துவரும் அநீதியை படம்பிடித்துக் காட்டுகின்றது இக்கதை.*

*'குறிப்பம் புளியமரம்' ஒரு உயர்ந்த மரத்தை குறிவைத்து காட்டில் சென்று திரும்பும் சுவையான கதை. இக்கதை கனடாவில் இன்று றொறன்ரோ நகரத்திற்கு சொந்த வாகனத்தில் செல்லுவொர் டொரன்டோவில் பலர் CN கோபுரத்தைக் குறித்து வைத்துச் செல்கின்றனர். சிலரிடம் கேட்டால் நான் CN கோபுரத்தை இலக்கு வைத்துத்தான் செல்லுவேன் என்று*

*கூறுவதை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். நிள அளவைத் திணைக்களம் 1958ல் தண்ணிமுறிப்புக் காடுகளை மூன்று ஏக்கர் காணிகளாக அளவிட்டுப் பிரித்து கல்லுநாட்டும் செயலின் ஈடுபட்டபோது எங்கள் ஊரில் கூடாரமடித்து தங்கியிருந்தார்கள்.*

*'அரசமரத்து ஆவி' பதவியாக் குளத்தின் வரலாற்றையும அதனோடு தொடர்பானவிடங்களையும் அரசமரங்களில் கீழ் புத்தர் சிலைகள் முளைப்பதைப் பற்றியும் எடுத்துக் கையாண்டள்ளது இக்கதை.*

*'கொள்ளிவால் பேய்' கடல்நீர் ஏரிகளின் சதுப்பு நிலப்பிரதேசங்களில் இக்கதையில் வரும் தீபந்தம் போல எரியும் காட்சிகள் இடம்பெறுகின்றன. எனது ஊரிலும் இந்நிகழ்வு இடம்பெற்றதாகக் கதைகள் உண்டு. சுடலை வைரவர் என்னும் பாரம்பரிய கதையை மறுதலித்து உண்மையைப் போட்டுடைத்துள்ளர் இந்தக் கதையில்.*

*'தூமகேது' வால் வெள்ளியென நாம அழைக்கும் நட்சத்திரத்தைப் பற்றிய உண்மையை எடுத்தியம்ப அதனை ஒரு உருவகக் கதையாக்கியுள்ளார்.*

*முல்லைத்தீவுப் போராளி' தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த காணியை மீளஒப்படைக்கவேண்டும் என்னும் கதையாக இன்றைய நில மீட்புப்போராட்டத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட ஒரு கதை. புனைவும், நிகழ்கால நிகழ்வும் இணைக்கப்பட்டுள்ளது.*

'சுமை' கிராமங்களில் இருந்து அல்லது வயல்நிலங்களிலிருந்து பொதிகளைச் சுமந்துவருபவர்கள் இறக்கி வைத்து ஆறதல் பெறுவதற்காக கட்டப்பட்டிருப்பவை சுமைதாங்கிகள். ஆனால் இக்கதையில் பழமையான றலிச் சயிக்கிளின் உறுதியையும் அதன் நீடித்த உழைப்பையும் எடுத்துக்காட்டி அதனை தொல்பொருளாக மதிப்பு மிக்கதாக அதன் உற்பத்தி நிறுவனமே பெருந்தொகை கொடுத்து வாங்க முற்பட்ட கதையைக்கிராமிய மணங்கமழத் தந்துள்ளார்.

மொத்தத்தில் இக்கதைகள் வன்னிநிலப்பரப்பில் உள்ள பல்வேறு இயற்கைச் சூழலையும், நடந்த நிகழ்வுகளையும் வைத்துப் பின்னிப்பிணையப்பட்ட வரலாற்றோடு தொடர்பான கதைகளாகக் காண்படுகின்றது. வன்னியல் நடந்தஉண்மை நிகழ்வுகளையும், மக்களால் நம்பப்பட்டுவந்த மூட நம்பிக்கைகளையும் எடுத்துக்காட்டுகின்றன கதைகள். எமது பழைய வராறு எழுதப்படாமல் அழிந்துபோனது போன்ற ல்லாது செவிவழிக் செய்திகளைப் பதிவில் தந்துள்ளதாகவும் திரு. பொன். குலேந்திரனின் கதைகள் அமைந்துள்ளன. அவரது முயற்சிகளைப் பாராட்டாமல் விடமுடியாது. அவரது முயற்;சி தொடர வாழ்த்துகின்றேன். இக்கதைகளில் பல அறியாத விடங்கள் தரப்பட்டள்ளன. வாசகர்களுக்கு இவை பயனுள்ளவையாக அமையும். எனக்கு அனுப்பப்பட்டுள்ள வரைபில் எழுத்துப்பிழைகள் மலிந்துகாணப்படுகின்றன. சில காலவழுக்களையும், கதைத் தொடர்புளையும் உண்மை நிலைமைகளிலிருந்து விலகிச்செல்வதும் அவதானிக் கப்பட்டள்ளது. அவற்றை அச்சேற்றும்போதும், பதிவேற்றும்

போதும் கருத்தில் எடுத்துக்கொள்ளுவார் என்னும் நம்பிக்கை எனக்குண்டு.

***நன்றி***

***த.சிவபாலு***

***(முன்னை கனடா எழுத்தாளர் இணைத்தினதும் தொல்காப்பிய மன்றத்தினதும் தலைவர்)***

## ஆசிரியர் பார்வையில்

அடங்காப்பற்று என அழைக்கப்படும் இவ் வன்னிப் பிரதேசத்தை வன்னி குறு நில மன்னர்கள் ஆட்சி செய்தபோது யாழ்ப்பாண மன்னர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோருக்குக் கப்பம் செலுத்தினர். இவர்களின் பின் வருகைதந்த ஆங்கிலேயர்களை எதிர்க்குமளவிற்கு வீரம் கொண்டவர்களாகப் பிற்காலத்தில் விளங்கினர். இத்தகை வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட வற்றாப்பளை அம்மன் இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் காலத்தில், போர்த்துக்கேய தளபதியாகிய நெவில் என்பவன் அழிக்க முற்பட்ட போது ஆலயத்தில் நின்ற பனிச்சை மரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது தடுத்தது. இவ்வற்புத வரலாற்றை ஆலயத்தில் இன்றும் படிக்கப்படும் பாடற்சிந்து மூலம் அறிய முடிகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு கண்ணகி அம்மன் ஆலயமாகும். முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களை அயற்கிராமங்களாகக் கொண்டுள்ளதோடு நந்திக்கடலும், வயல்வெளிகளும், பாலைமரச் சோலையும் சூழ்ந்த பசுமையான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தை தமிழர்கள் மாத்திரமன்றி சிங்களவர்களும் பத்தினி தெய்யோவை வழிபட்டு வருகின்றனர். கஜபபாகுமன்னன் நிறுவிய பத்தாவது பத்தினி அம்மன்

கோவில் இதுவவுனியா முதல் ஆனையிறவு வரை 86 கி மீ கிழக்கு கரைமுல்லைதீவில் இருந்து வவுனியா ஊடாக முதல் மேற்க்கு கரை யில் உள்ல மன்னாருக்கு 150 கி மீ உள்ள பெரும்பாலும் காட்டுப் பகுதி அடங்கிய பகுதி வன்னி சோழர் ஆட்சி காலத்தில் முன்னைய சோழ தளபதிகள் குறுநில மன்னர்களாக ஆட்சி செய்த நிலம். வரலாறு உள்ள நிலம் பாயும் புலி பண்டார வன்னியன் ஆண்ட பகுதி . ஈழத்தின் இறுதி போர் நடந்த இரத்தம் தோய்ந்த "முள்ளிவாய்கால்" இனப்படுகொலை நடந்த இடம். சரித்திர வரலாற்றுக்கு மரபுக் கதைகளுக்கும் குறைவில்லை. மழை கால நதிகளும். பொன் விளையும் வயல் வெளிகளும். குன்றுகளும். யானை பாம்பு சிறுத்தை நரி கரடி போன்ற வன விலங்குகள் வாழும் காடுகளும்,ஒரு காலத்தில் இலங்கையின் நெற்ற களஞ்சியம் என்று போற்றிய நிலம் வன்னி. நாததம்பிரான். கணபதி அம்மன் வைரவர் முருகன் கோவில்க்ளுக்கு வன்னியில் குறைவில்லை இதில்A9 என்ற கண்டி யாழ்ப்பாணம் பெரும் பத்தியில் கிளிநோச்சிக்கு தேற்கே உள்ள முருகண்டி பிள்ளையார் கோவில் குறிப்பிடத்தக்கது. பாம்புகள் வன்னியில் அதிகம் என்பதால் நாததம்பிரான் கோவில்களும் உண்டு. யானைகள் வன்னியில் அதிகம் என்பதால் பிள்ளையார் கோவில் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு. பால குளங்கள் மழைக் காலத்தில் நீரைத் தேக்கி வைத்து விவசாயிகளுக்கு உதவுகிறது

வன்னியர்களுக்கு என ஒரு கலாச்சாரம் உண்டு ஒரு காலத்தில் பின் தங்கிய பகுதியான மலேரியா நோய்க்குப் பிரபலமான

வன்னி இப்போது ஈழத்துப் போருக்குப் பின் படிப்படியாக முன்னேறி வருகிறது.

பிரசித்தமான பல கோவில்கள் உண்டு . பூநகரி ஊடாக அசோக சக்கரவர்த்தியின் பிள்ளைகள் புத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தார்கள்.

இந்த கதை தொகுப்பு வன்னியில் நடந்த சம்பவங்களைக் கருவாக வைத்து வளர்ந்தவை இந்நூலுக்கு அணிந்துரை எழுதியவர் வன்னி மண்ணில் பிறந்து, வளர்ந்து. படித்து தமிழ்ப் பற்றுள்ள எம் ஏ பட்டதாரி தனபாலு மாஸ்டர் அவர்கள் அவரும் குவியத்துக்கு எழுதியவர். இந்த கதைகளில் சில மரபுக் கதைகளைக் கருவாக வைத்து. புனைவும் கலந்து எழுதப்பட்டவை. போர்துகேயர். ஒல்லாந்தர் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வெகுவாக பாதிக்கப்பட்ட பகுதி வன்னி . போரின் போது .யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி அருகே உள்ள கிலாலி ஏரி வழியே முஸ்லீம்களும் தமிழர்களும் புலம் பெயர்ந்து வாழ அபயம் கொடுத்த பூமி வன்னி .

தொகுப்பில் உள்ள கதைகளை. வாசித்து அதோடு பயணியுங்கள். சிந்தியுங்கள் இந்த நிலத்தின் முன்னேற்றத்துக்குப் புலம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழ் ஈழ மக்கள் உதவுவது கடமை

**பொன் குலேந்திரன்**

***மிசிசாகா, ஒன்றாரியோ***

***கனடா***

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | வன்னியில் நான் கண்ட காட்சி | 1 |
| 2 | குமுளமுனை அரியாத்தை | 23 |
| 3 | உயிருக்கு உயிர் | 30 |
| 4 | துணுக்காய் மெலனி டீச்சர் | 42 |
| 5 | ருத்திரபுரம் கொலை வழக்கு | 59 |
| 6 | தபால்காரன் தங்கராசு | 79 |
| 7 | அப்பாவைக் காணோம் | 95 |
| 8 | வீரலட்சுமி | 102 |
| 9 | என் காணி நிலம் வேண்டும் | 113 |
| 10 | குறிப்பும் புளிய மரம் | 121 |
| 11 | அரசமரத்து ஆவி | 130 |
| 12 | கொல்லி வாய் பிசாசு | 138 |
| 13 | தூமகேது | 146 |

| | | |
|---|---|---|
| 14 | முல்லைத்தீவு போராளி | 156 |
| 15 | போர்க் கைதி | 166 |
| 16 | சுமை | 177 |

## கதை 1

## வன்னியில் நான் கண்ட காட்சி

*முன்னுரை : ஐம்பூதங்களை உள்ளடக்கி மனிதனுக்கு இறைவன் தந்த வரப்பிரசாதம் இயற்கை. இயற்கையின் சில அடிப்படைக் கொள்கைகள் இயற்கையின் இயல்பைப் பற்றிக் கூறுகின்றன. இந்த வழியில் இயற்கையின் அங்கங்கள் மனிதனுக்கு பாடம் புகட்டுகிறது*

*நான் இலங்கை வட மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டதில் அமைந்த குருமண்காடு என்ற கிராமத்தில் பிறந்தவன். எனக்கு என் பெற்றோர் வன்னிராசன் என்று பெயர் சூட்டி ராசன் என்று செல்லமாக அழைத்தனர். இக் கிராமம் வவுனியாவில் இருந்து மன்னாருக்குப் போகும் A30 பெரும் பாதையில் 6 கி மீ தூரத்தில் உள்ளது இக் கிராமத்தைச் சுற்றி உள்ள குளங்களில் பாவற்குளம் மிகப் பெரிய குளம் . அக்குளத்தை சுற்றிலும் காடு.*

*எனக்கு வசதி இருந்ததால் வவுனியா மத்திய கல்லுரியில் படித்து கொழும்பு பல்கலைகழகத்தில் தவரஇயலில் பட்டம் பெற்றேன். என்னோடு படித்த கண்டியைச் சேர்ந்த குணசெகர (குணா) என்ற சிங்கள மாணவன் விலங்கியலில் பட்டம்பெற்றவன் . இருவரும் பல்கலைகழக அறிவியல் மாணவர் சங்கத்தின் செயற்குழுவில் அங்கத்தினர்கள், அதனால் நண்பர்கலானோம். எங்கள் சந்திப்புக்கு முக்கிய காரணம்*

நாங்கள் இருவரும் இயற்கை விரும்பிகள். தாவர இயலும், விலங்கியலும் இயற்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. என்பதையும் இயற்கையில் புதைந்துள்ள இரகசியங்களையும் அதோடு மனித வாழ்வுடன் உள்ள தொடர்பினை கண்டு பிடிப்பதே எமது இருவரின் நோக்கம், ஆகவே இரகசியங்களின் சிறப்பைப் பற்றி நாம் இருவரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டோம். . அதோடு மட்டுமல்ல எமக்கிடையே இன்னொரு ஒற்றுமையும் இருந்தது . எனது தாய் மல்லிகா பதவியாவை சேர்ந்த சிங்களப் பெண். என் தந்தை முருகையா ஒரு வன்னித் தமிழன். அவர் பிறந்தது வவுனியாவில். என் தந்தையும், தாயும் ஆசிரியர்கள். வவுனியாவில் ஓரே கல்லூரியில் படிப்பித்த போது, சந்தித்து, காதலித்து, திருமணம் செய்தவர்கள்.

என்னைப்போல் குணசெகராவின் தாய் சுமனாவதி கண்டியைச் சேர்ந்த சிங்களத்தி. தந்தை இராமசாமி மாத்தளையை சேர்ந்த மலை நாட்டுத் தமிழர். அவர் அப்போதிக்கரியாக கடுகஸ்தொட வைத்தியசாலையில் வேலை செய்த போது நேர்ஸ் சுமனாவை சந்தித்து ,காதலித்துத். திருமணம் செய்தவர் . ஆகவே எனக்கும் குணாவுக்கும் மூன்று மொழிகளும் சரளமாக பேச வரும். இருவரும் இருவரின் இனத்தையும் இந்து, புத்த மதங்களை மதித்தோம்.

எனது வேண்டுகோளை ஏற்று வன்னியின் இயற்கை காட்சிகளைப் பார்த்து, ரசித்து ,அவை மனித வாழ்வோடு எப்படி இணைந்தது என்பதை ஆராய என்னோடு வவுனியாவுக்கு குணா வந்தான் . எனது தந்தை வன்னியில் துனுக்காய்,

மாங்குளம் , ஒட்டுசுட்டான் , முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஆசிரியராக வேலை செய்ததால் வன்னியில் உள்ள கிராமங்களில் உள்ள குளங்களுக்கு வெளி நாட்டில் இருந்து சில காலம் வருகை தரும் பறவைகள் பற்றி அறிந்து வைத்திருந்தார் . அவரும் ஒரு இயற்கை விரும்பி .

மழை காலத்தில் மட்டும் பெருக்கெடுத்து ஓடி குளங்களை நிறப்பும் பாலி. அருவி, அக்கராயன் போன்ற ஆறுகளைப் பற்றியும், காட்டு மூலிகைகள், மலர்கள். பழங்கள் பற்றி அறிந்து வைத்திருந்தார் என் கிராமத்தில் உள்ள பாவற்குளம் விவசாயத்துக்கு பெரிதும் உதவும் குளமாகும்

சிறு வன பூங்காக்களில் வாழும். சிறுத்தைகள், நரிகள் கரடிகள் யானைகள், பாம்பு வகைகள் காட்டுச் சேவல்கள் நிறைந்தது வன்னிக் காடு. விவசாயம் வன்னி மக்களின் முக்கிய தொழில். தம்மை யானைகளிடம் இருந்தும், பாம்புகளிடம் இருந்து, காப்பாற்ற பல வன்னிக் கிராமங்களில் கணபதி , நாகதம்பிரான், காட்டு வைரவர் கோவில்கள் இருகின்றன . வருடா வருடம் அக் கோவில்களுக்கு விவசாயிகள் பொங்கிப் படைப்பார்கள் .

****

நானும் குணாவும் எமது வன்னிக் காட்டு பயணத்தை தற் பாதுகாப்புக்கு கையில் அனுமதி பெற்ற என் தந்தையின் துவக்குடன் நடந்து சென்ற போது இருவரும் முதலில் பாவற்குளத்தில் கண்ட காட்சி ஒரு அழகிய நிற நீண்ட கால்களைக் கொண்ட வெள்ளை நிற நாரை. அது தன் ஒரு

காலை மடக்கி மறு காலில் நின்று தவம் புரிந்து கொண்டு நின்ற காட்சி என்னை கவர்ந்தது. உடனே எனது புகைப்பட கருவியால் படம் எடுத்தேன். என்ன நடக்கப் போகுது என்று சில நிமிடங்கள் நின்று பார்த்தோம் . யானையின் பிளிறல் சத்தத்தில் கூட கொக்கு அசையவில்லை

"அதோ பார் குணா "ஓடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடி இருக்குமாம் கொக்கு. என்று ஔவையார் சொன்னது என நினைவுக்கு வருகிறது" என்றேன் நான் .

"அதன் அர்த்தம் என்ன ராசன"? குணா கேட்டான்

"பொறுமை பெரிது என்பதாகும். சரியான சந்தர்ப்பம் வரும் வரை அவசரப்படாமல் அமைதியாக காத்திரு என்பதை அந்தப் பறவை அந்த செயல் மூலம் எமக்கு சொல்லுகிறது . திருவள்ளுவரும் அதை வேறு விதமாக சொல்லுகிறார்"

"அவர் என்ன சொல்லுகிறார் ராசன் "?

"கொக்கொக்கக் காத்திரு!

அதன் குத்து ஒக்கச் செயலை முடித்திடு:"

என்கிறார் வள்ளுவர்

"நீ சொல்வது ஏனக்கு புரியவில்லையே ராசன் "

துள்ளி ஓடிடும் சிறு மீன்கள், கரையில் உள்ள கொக்கு கண்ணற்றது, செயல் திறனற்றது என்றுதான் எண்ணிக்

கொண்டிருக்கிறோம் , ஏன்? கொக்கு, தான் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கிறதே அதனால்.

இத்தனை மீன்கள் துள்ளி ஓடியும் , கொக்கு ஏதும் செய்திடவில்லை, இனி நமக்கென்ன பயம் என்று எண்ணிக் கிளம்புகிறது, பெரிய மீன்! என்ன ஆகிறது? கொக்கு கொத்திக் கொள்கிறது! கொக்கு அங்கே வெகு நேரம் காத்திருந்து இருந்தது அதற்குத்தானே?

இரைதேடிக் காத்திருப்பதும், கிடைத்ததும் பற்றிக் கொள்வதும் கொக்குக்கு மட்டும்தானா இயல்பு? மற்றப் பலவற்றினுக்கும் உண்டுதானே ! ஏன் கொக்கினை மட்டும் குறிப்பாகக் காட்டுகிறார் வாக்குண்டாம் பாடிய ஔவையார் என்று கேட்கத் தோன்றுகிறதா? காரணத்தோடுதான், காட்டியிருக்கிறார்.

புலிகூட இரை தேடிக் காத்திருக்கிறது, பதுங்கிக் கொள்ளக் கூடச் செய்கிறது.

வல்லூறு கூடப் புறாவைத் தேடி வட்டமிடுகிறது.

ஆனால், பதுங்கி இருந்திடும் புலி, மானைக் கண்டதும் பாய்கிறது, மான் ஓடுகிறது, புலி துரத்துகிறது, பல மைல்கள் கூட அலுப்பு மேலிட ஓடி ஓடி வேட்டையாடிய பிறகே மானைக் கொல்ல முடிகிறது புலியினால்; ஒரு போராட்டம் நடைபெறுகிறது.

வல்லூறு பாய்ந்து வருவது கண்ட புறா தப்பித்துக் கொள்ளப்படும் பாடு, கொஞ்சமல்ல. கொக்கு மீனைக் கொத்துவது அவ்விதமல்ல! என்ன நடக்கப் போகிறது என்று

தெரியாமல் மீன் துள்ளி வருகிறது. கொக்கு அதைக் கொத்தப் போக, மீன் தப்பித்து ஓட, கொக்கு விடாமல் துரத்திச் சென்று கொத்திடும் முறை இல்லை. மீன் வருவதும் கொக்கு கொத்துவதும், மீன் சிக்கிக் கொள்வதும் உடனே இரையாகிவிடுவதும் எல்லாம் கண் மூடிக் கண் திறப்பதற்குள். மீன் வருவதற்கும், மீன் சிக்குவதற்கும் உள்ளே இரையாகிச் செல்லுவதற்கும், இடைவெளிகளே இல்லை. எல்லாம் ஒரே நேரத்தில் நடைபெற்று விடுகிறது. அதனால்தான் கொக் கொக்கக் கொத்திட வேண்டும் என்றார். பாம்பு கூட, ஓசைப்படாமல் தீண்டிவிடுகிறது. ஆளை வேட்டையாடிக் கடிப்பதில்லை. ஆனால், மனிதனைத் தீண்டித் தீர்த்துக் கட்டுமேயன்றித் தின்பதில்லை. கொக்கு தீண்டித் தீனியாக்கிக் கொள்கிறது மீனை. அவ்வளவு கூர்மையான பார்வை. அத்தனை நேர்த்தியான குறிபார்த்திடும் திறன், அவ்வளவு வேகமான கொத்தும் தன்மை, கொக்குக்கு! அத்தனை திறமையாக இரை தேடிக் கொண்ட கொக்கு, புலிபோல உறுமுவதில்லை, இரத்தம் குடித்த மகிழ்ச்சியில் புலி படுத்துப் புரள்கிறதே, அதுபோலவும் இல்லை, ஏதும் அறியாததுபோல, எப்போதும் போல இருக்கிறது கொக்கு, காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு! இவற்றினை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் வள்ளுவர், "கொக்கொக்க' என்று கூறினார்'' என்றேன் நான்

''ராசன் அந்த வானத்தைப் பார். குளத்தை நாடி முக்கோண வடிவில் பறந்து வரும் வாத்து இனத்தின் அழகைப் பார் எத்தனை ஒழுங்கை கடை பிடிக்கிறது அவை கூட அறிவில் பாடம் நமக்கு புகட்டுகிறது'' குணா சொன்னான்

''அதனால் அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்'' எனக் கவிஞர் கண்ணதாசன் இயற்றிய சினிமாப் பாடல் இன்றும் எமது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரமாய், தமது விருப்பத்திற்கேற்ப கூட்டமாகவும, ஒற்றுமையாகவும் வானில் பறந்து, குடிவரவு, மொழி, பாதுகாப்பு போன்ற கட்டுப்பாடுகளின்;றி, தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவைகளைப் போல மனிதன் வாழ நினைப்பதில் தவறில்லை. அந்த நிலை மனிதனுக்கு வருமா என்பது சந்தேகம். பொருளாதார, அரசியல் காரணத்தால் நாடுகளுக்கிடையே பயணக் கட்டுப்பாடுகள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. தன் சொந்த நாட்டுக்குள்ளும் ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்குப் போவதற்கும் பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் தடைகளுண்டு. இத்தகைய தடைகளுக்கு அப்பாற்பட்டவை மற்றைய ஜீவராசிகள். அதிலும் பறவைகள் தாம் நினைத்த மாதிரி எங்கு வேண்டுமென்றாலும் பறந்து செல்லக் கூடியவை. அதன் மேல் பொறாமைப் பட்டோ என்னவோ துப்பாக்கி ஏந்தி தமது ஊருக்கு விருந்தாளிகளாக வரும் அப்பறவைகளை மனிதன் வேட்டையாடி மகிழ்கிறான். பறவைகள் போன்று மொனாக் (Monac) என்ற இனத்தைச சேர்ந்த வர்ணத்துப் பூச்சிகள், மற்றும் தத்துக்கிளிகள் கூட வட ஆபிரிக்காவில், வெகு தூரம் பாலைவனத்தினூடாக பயணம் செய்கின்றன. மொனாக் வர்ணத்துப் பூச்சிகள், பெரும் கூட்டமாக வட அமெரிக்கா, தென் கனடா பகுதியிலிருந்து சுமார் 3000 மைல்கள் வாரக்கணக்கில் பறந்து சென்று மெக்சிக்கோ, கலிபோர்னியா போன்ற இடங்களை அடைகி;ன்றன. சில வேளைகளில் திசை மாறி

அட்லான்டிக் சமுத்திரத்தையும் கடந்து ஐரோப்பாவை அடைகிறது என்றால் சிலர் நம்புவதற்கு தயங்குவார்கள். இவ்வாறே தண்ணீரும் உணவும் தேடி, ஆபிரிக்காவில் வன விலங்குகள் கூட்டமாக இடம் பெயர்கி;ன்றன. அதனால் ஆறுகளைக் கடக்கும் போது சக்தி குறைந்த விலங்குகள் பல பலியாகின்றன. அதுவுமல்லாமல் சக்தியிழந்து மேலும் பயணத்தைக் கூட்டத்துடன் தொடரமுடியாமல் வேறு விலங்குகளுக்கு இரையாகின்றன.

"முக்கோண வடிவத்தில் பறந்து வருகிறது வாத்துகள் நாம் சொல்வது போல் வாத்து மடையர்கள் அல்ல அவை அந்த வடிவமைப்பின் மூலம் காற்றின் எதிர்ப்பை எதிர்த்து பயணம் செய்கிறது. இறைவன் அவைக்கு கற்றுக் கொடுத் பாடம். அதில் இருந்து அறிவியல் கற்று விமானம் படைதான் மனிதன் இன்னும் எவ்வளவோ பறவைகளில் இருந்து மனிதன் கற்க வேண்டியிருக்கு. முக்கியமாக எடுத்த காரியத்தை ஓய்வின்றி செயல்பட்டு .. செய்து முடிக்க வேணும் என்ற உறுதியை அந்த பறவைகள் எமக்கு எடுத்து சொல்கிறது குணா"

"அங்கே பார் அந்த மரத்தில் தொங்கும் தூக்கணாம் குருவிக் கூட்டை அதன் கட்டிடக் கலைத் திறன் பிரமாதம். நாம் வீட்டுக்கு அத்திவாரம் போடுவது போல் அது கூட்டை கட்டும்போது ஆரம்பத்தில் தாவர நூல்கலாள் அவிழாத முடிச்சு போடுகிறது . இதை பார்த்து வீடு கட்ட நிலம் இல்லாவிட்டால் . மரத்தில் வீடு கட்டி வன பூங்காவில் இருப்பது போல் வாழலாம் அல்லவா"? ராசன் சொன்னான்

“ஊஞ்சல் போல் குஞ்சுகளுக்கு கூட்டை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறது குருவிகள். தன் குரலால் தாலாட்டும் பாடுகிறது. எந்த வேகமாக வீசும் காற்றிலும் தொங்கும் கூடு பாதிப்டைவதில்லை என்ன வினோதம் ராசன்” குணா சொன்னான்

“என் கிராமத்தில் சில பெண்கள் மரத்தில் சேலையை ஏனையாக கட்டி அதில் குழந்தையை போட்டு தாலாட்டு பாடுவது எனக்கு நினிவுக்கு வருகிறது. அது தாய் பாசத்தின் எடுத்துக் காட்டு குணா.”

” அங்கேபார் ராசன் அந்த காகக் கூட்டை. அதில் முட்டைடுவது காகம் போல் கருப்பு பறவை அல்லவே:” குணா ராசனைக் கேட்டான்.

“காகத்தின் கூட்டில் அது இல்லாத நேரம் முட்டை இடுவது குயில். இது எம் சமூகத்தில் நடக்கும் சம்பவங்களில் ஒன்று. காலியாக இருக்கும் வீட்டுக்குள் அனுமதி இன்றி போய் இருந்து இலவசமாக வாழ்வது சிலர் பழக்கம் காலப்போக்கில் இருந்த வீட்டுக்கு சொந்தம் கொண்டாடுவார்கள். மனிதன் அதை குயிலில் இருந்து கற்றான் போலும்”

“சரி வா நாம் மேலே நடப்போம் காட்டில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம் அதென்ன டோக் டோக் என்ற சத்தம் அந்த மரத்தில் இருந்து கேட்கிறதே. யாரவது தச்சன் வேலை செய்கிறானா”?:

*“இல்லை அது மரம் கொத்தி பறவை கருங்காலி மரத்தில் தச்ச வேலையை செய்கிறது. :*

*“இந்த காட்டில் கருங்காலி மரம் உண்டா? அது அதிகம் விலை பெறுமதியான மரமாச்சே அது”*

*“இந்த கருங்காலி மரத்தில் இருந்து பெறப்படும் பலகைகளை, கருங்காலி பலகை என்பர். இவை மிகவும் பெறுமதிமிக்க பலகை வகையாகும். இப்பலகை கருப்பு நிறம் கொண்டவை. நூற்றாண்டுகளாக இரும்பை ஒத்த உறுதியுடன் கூடிய பலகைகள் இம்மரத்தில் இருந்து பெறப்படுகின்றன. குறிப்பாக இந்த மரத்தின் நடுப்பாகமான கருமை நிறம் கொண்டப் பகுதியை வைரம் என்பர். அநேகமாக கருங்காலி மரத்தில் இருந்தே "உலக்கை" செய்யப்படுகிறது. சில இடங்களில் கருங்காலி அல்லாத பலகைகளில் இருந்து உலக்கை செய்யப்பட்டாலும், கருங்காலி உலக்கைகளுக்கான பெறுமதியை மற்றையப் பலகைகள் பெறுவதில்லை.*

*“சரி. ராசன் இந்த மரத்துக்கும் இனத்துக்கு துரோகம் செய்தவனை இனத்தின் கருங்காலி என்பதுக்கும் என்ன தொடர்பு: ராசன் ?*

*“நல்ல கேள்வி குணா. மரம் வெட்டும் கோடரியின் கைப்பிடியாக கருங்காலி மரத்தை பாவிப்பார்கள் , காரணம் அ\து உறுதியானது. ஒன்றாக இருந்து தம் இனத்துக்கு துரோகம் செய்பவனை கருங்காலி என்பர். . காரணம் கருங்காலி மரம் மற்றைய மரங்களை வெட்டும் கோடரிக்கு கைபிடியாக இருந்து*

உதவுவதால் இனத் துரோகிக்கு இனத்தின் கருங்காலி என்பர்'' ராசன் விளக்கம் கொடுந்தான்.

''அந்த மரத்துக்கு கேட்ட பெயர் வந்தாலும் விலை மதிக்க முடியத மரம் கருங்காலி. அதன் பட்டை, பிசின், வேர் அதிக மருத்துவப் பயன் கொண்டவை. துவர்ப்புத் தன்மை மிக்கது. நீரிழிவு நோய், பெருவயிறு, வயிற்றுப்புழு நோய் ரத்தக் குறைவால் உருவாகும் திமிர் வாதம், பெருநோய், அழல் குன்மம் போன்றவை நீங்கும் கொழுப்பை குறைக்கும்''.

கருங்காலி வேரை எடுத்து சுத்தப்படுத்தி நீரில் ஊறவைக்க வேண்டும். பின்பு அந்த நீரைக் கொதிக்க வைத்து வடிகட்டி அருந்தினால் வயிற்றுப்புண் ஆறும். வயிற்றில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றும் கிருமி நாசினியாகவும் செயல்படுகிறது.

இரத்தத்தில் இரும்புச்சத்தை அதிகரிக்கும். பித்தத்தைக் குறைக்கும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் இருவேளை இதைக் குடித்து வந்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும்.'' குணா சொன்னான்

''சர்க்கரை வியாதி உள்ள என் தந்தைக்கு அவசியம் இந்த கருங்காலி மூலிகை மருந்தைக் கொடுக்க வேண்டும் குணாவுக்கு தான் இந்த பறவைகள் பற்றி அதிகம் தெரியுமே, என் இந்த பறவை இப்படி அதிசயமான முறையில் நடக்கிறது''? ராசன் கேட்டான்.

*“அதுதான் வன்னிக் புதைந்து இருக்கும் இயற்கையின் இரகசியம் மரப் பட்டைகளை கொத்தும் ஒலியும் மரங்களை துவாரம் செய்யும் போது உருவாகும் ஒலியும், சில கூவும் குயில்கள் எழுப்பும் ஒலியை போல் இனச்சேர்க்கைகு அழைப்பு ஆகும். பூச்சிகளை கொன்று உண்டு மரம் கொத்தி பறவை மரத்துக்கு வைத்தியம் செய்து மரத்தின் ஆயுளை நீடிக்கிறது.. அதாவது டாக்டர் வேலை பார்க்கிறது” :*

*“எவ்வளவு காலமாக இந்த டாக்டர் வேலையை செய்கிறது இந்தப் பறவை”?*

*“இவை பல ஆயிரம் ஆணடுகளுக்கு முன் தோன்றியவை:*

*:” அதோ பார் பக்கத்தில் உள்ள மரத்தில் வளரும் இன்னொரு குருவிச்சசை செடியை “*

*“அந்த செடி. ஒரு மனிதனை போல் இன்னொரு உயிரை அண்டி வாழ்கிறது” .:*

*“இதை ஒட்டுண்ணி செடி என்பர். குருவிகள் விட்ட எச்சத்தில் உள்ள விதைகளில் இருந்து வளருவது குருவிச்சசை செடி . இது மரத்தின் சத்தில் பங்கு எடுக்கிறது .. அதனால் குருவிச்சை என்ற பெயர் பெற்றது. இதுவும் மனித உடலில் உள்ள வைரஸ் போன்றது தூத்துமக் கொத்தான் என்ற ஒட்டுண்ணியை ஆங்கிலத்தில் கஸ்குட்டா (Dodder). இது இதன் நுகரியிலிருந்து உணவையும் நீரையும், கனியுப்பையும் எடுத்துக் கொள்கின்றது.”. அடேயப்பா இயற்கையின் விசித்திரம் தான் என்ன .”?*

“ராசன் நாம் இதுவரை கண்ட காட்சிகளில் இருந்து எனக்கு ஜோன் லுப்போக் என்பவர் இயற்கையை பற்றி சொன்ன வார்த்தைகள் என் நினைவுக்கு வருகிறாது” குணா சொன்னான்

“என்ன குணா அவர்சொன்னார் “?

“பூமி மற்றும் வானம், காடுகள், நெற்ற காணிகள் ஏரிகள் ஆறுகள், மலைகள், பரவிகள், விலங்குகள். மலர்கள் மற்றும் கடல் ஆகியவை மிகச்சிறந்த பள்ளி ஆசிரியர்களாகும், மேலும் புத்தகங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் விடயங்களைக் காட்டிலும் இன்னும் சிலவற்றை இயற்கையில் இருந்து நாம் கற்கிறோம் என்றார் அவர் "

“அது உண்மாயி இயற்கையில் புதைந்துள்ள அறிவியல் ரகசியங்கள் ஏராளம் உனக்கு தெரியும் சார் இசைக் நியூட்டன் என்ற என்ற பௌதீக விஞ்ஞானி

விஞ்னை கண்டு பிடித்த புவி ஈர்பு சக்தின் தத்துவம் ஒரு அப்பில் மரத்தில் இருந்து கீழே விழுந்த பழத்தில் இருந்து உருவானது

பாவற் குளம் நிறம்ப வெண்தாமரை பூக்களும் அழகிய தாமரை இலைகளும் இருந்தன .

“தாமரை இலையில் நீர் ஒட்டாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

“நாம் தாமரை இலையின் மீது தண்ணீர் ஊற்றும் போது, அது அந்த நீர்த்துளிகள் இலையின் மீது ஒட்டுவதில்லை.

ஏனெனில் தாமரை இலை மீது, மிக நுண்ணிய அளவில், கூர்மையான ஊசி போன்ற அமைப்புகள் உள்ளன. எனவே நீர்த்துளி, தாமரை இலையின் மீது வந்து விழும் போது, அந்தத் துளி, மூன்று நான்கு நுனிகளின் முகட்டில் படிகிறது தாமரை இலையில் இருக்கும் ஊசி போன்ற அமைப்புகள், மெழுகு போன்ற ஒரு பொருளினால் ஆனது

மேலும் தாமரை இலையில் இருக்கும் அந்த ஊசி அமைப்புகள் நீரை விலக்கும் தன்மையை பெற்றுள்ளதால் தான் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் முத்து போன்று தரையின் மீது விழுகின்றது.

சிறிய நீர்த்துளியானது, தனது சொந்த பரப்பு இழுவிசையால்*(Surface Tension)* திரண்டு, முத்துபோன்ற நீர்த்துளியாக இருக்கும். ஈரம் ஆகக்கூடிய தரை பரப்பின் மீது, அந்தத் துளி விழுந்தால், அதன் மீது இரண்டு விதமான ஆற்றல்கள் எதிரும் புதிருமாகச் செயல்படும். நீரின் பரப்பு இழு விசை, நீர்த் துளியைக் கட்டிப்பிடித்து வைக்க முயற்சி செய்யும். அதே சமயத்தில், பூமியின் கவர்ச்சி ஈர்ப்பு விசை, நீர்த்துளியைக் கீழ் நோக்கி அழுத்தும். இறுதியில், நீர் படிந்து, பரப்பின் மீது படரும்.

தாமரை இலை மீது, நனோ*(Nano)* அளவில், மிக மிக நுண்ணிய கூர் ஊசி போன்ற அமைப்புகள் உள்ளன. நீர்த் துளி, இலையின் மீது வந்து விழும்போது, அந்தத் துளி, மூன்று நான்கு நுனிகளின் முகட்டில் படிகிறது. இந்த ஊசி அமைப்புகள், மெழுகு போன்ற ஒரு பொருளினால் ஆனவை. எனவே, இவை நீரை விலக்கும்

தன்மையை பெற்றுள்ளன. இதன் காரணமாக, ஊசி அமைப்பின் மீது நீர் ஒட்டுவதில்லை. துளியின் பரப்பு இழு விசை சிதையாத நிலையில், நீரானது, துளியாகவே இருக்கிறது. அந்தத் துளி, இலையின் மீது ஒட்டாமல், துளி வடிவிலேயே உருண்டு ஓடுவதுடன், தூசு தும்புகளையும் தன்னுடன சேர்த்து அடித்துச் செல்லும். எனவே, 'தாமரை இலை சுத்தமாகவும் இருக்கிறது', என்ற தகவல், எலக்ட்ரான் நுண்ணோக்கி கொண்டு செய்யப்பட்ட சமீபத்திய ஆய்வில் வெளிந்துள்ளது.

தாமரை இலையின் மகா நீரொட்டா தன்மை இயற்கையின் புராதானமான ஒரு நானோடெக்னாலஜி *(Nano Technology )* வெளிப்பாடு.. சரி, தாமரை இலையில் எப்படி நேனொடெக்னாலஜி?

ஒரு பரப்பு ஈரமாக இருக்கிறதென்றால், நீர்த் திவலைகள் பரப்பினோடு ஒரு கோணத்தில் உட்கார்ந்திருக்கிறது எனலாம். பரப்பிலிருந்து இது குறுங்கோணமெனில், திவலைகள் பரப்பின் மீது படர்ந்திருக்கும். ஈரமான தரை என்போம். விரிகோணமெனில், பரவி, பரப்பினை ஈரப்படுத்தாமல், திவலை திரண்டு, உருண்டையாக, பரப்பின் மீது பட்டும் படாமலும், தாமரை இலைத் தண்ணீர் போலிருக்கும்.

தாமரை இலை ஒரு மகா நீரொட்டா பரப்பு என்றோம். மகா நீரொட்டா என்று நாமகரண தகுதிக்கு கோணம் 150திற்கு மேல் இருக்கவேண்டுமாம். தாமரை இலையில் நீர்த் திவலைகள் 140 முதல் 170 வரை விரிகோணமாய் அதன் மீது உட்கார்ந்திருக்கும். நன்கு பாலிஷ் செய்யப்பட்ட கண்ணாடி பரப்பு மற்றொரு

*நீரொட்டா பரப்பு. ஆனால் தாமரை இலையளவு மகா இல்லை. நம் சருமமும் நீரொட்டா பரப்புதான். மகா இல்லை, சாதா. தாமரை இலையுடன் ஒப்பிடுகையில் நீர்-அமர்ந்த-திருக்கோணம் 90 டிகிரிக்கு அருகேயே நின்றுவிடுகிறது. அதனால்தான் தினமும் குளித்தாகவேண்டியுள்ளது.*

*சரியாக சொல்லவேண்டுமெனில், தாமரை இலைப்பரப்பின் மீது நீர் மட்டுமில்லை; காற்றும் உடனிருக்குமே. அதனால், காற்று, நீர் பரப்பு மூன்றும் சந்திக்கும் இடத்தில், அதாவது பரப்பின் மேல் நீர்த் திவலையின் விளிம்பில், நீர்-காற்று, காற்று-பரப்பு, பரப்பு-நீர் என மூன்று தொடர்புடைய இழுவிசைகள் செயல்படும். ஒன்றுக்கொன்று அடித்துக்கொண்டு மிச்சமிருக்கும் விசையே முன்கூறிய கோணத்தை நிர்ணயிக்கும்.*

*எப்படி இந்த இழுவிசை ஏற்படுகிறது என்பதை, பரப்பு இழுவிசை (சர்ஃபேஸ் டென்ஷன், தாமஸ் யங் 1805இல் புரியவைத்தது), ஓரிண ஒட்டுதல் (கொஹெஷன்) வேற்றிண ஒட்டுதல் என்று நம் இயற்பியல் புரிதல்களைவைத்து விரிவான விளக்கமளிக்கலாம். தொடர்புடைய சில சுட்டிகளை மட்டும் சான்றேடுகளாய் கட்டுரையின்கீழ் கொடுத்துள்ளேன். தற்போது சில சுவாரஸ்யமான சமீப ஆராய்ச்சிகளைக் கவனிப்போம்.*

*“என்ன ராசன் இலையை பிடுங்கி சாப்பிடுகிறாய்”?*

*“இந்தக் காட்டுத் தாவரங்கள் மூலிகை குணம் உள்ளவை. ருகுண காட்டில் வாழும் வேடவர்களுக்கு சர்க்கரை வியாதி இல்லை. காரணம் அவர்கள் உண்பது தாவரங்களும் கிலழங்குகளும் .*

உணவுத் தாவரங்களுக்கு மிகவும் நெருக்கமானவைதான், அவற்றை உணவாக உண்ணவும் முடியும். ஆனால், இவை பல்வேறு வகையான சூழ்நிலைகளிலும் தாக்குப் பிடித்து வாழக்கூடியவையாகும்.

இருக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தி, அவற்றுக்கு அமைவாய் இவை வாழக்கூடியவை.

உலகில் இப்படியான காட்டுத் தானிய வகைகள் சிறப்பாக வளரக் கூடிய பல இடங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். அந்த இடங்களில் இவற்றை பராமரித்து வளர்த்தால், எதிர்கால உணவுத் தேவைக்கான மூலமாக இவை பயன்படுத்தப்படலாம்.

பலதரப்பட்ட தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உற்பத்தி தாவரங்களுடன் சேர்த்து விவசாயிகள் வளர்க்கிறார்கள். உள்ளூர் காலநிலைக்கு தாக்குப் பிடித்து வாழக்கூடிய தாவரங்களை வளர்ப்பது இவர்கள் நோக்கமாகும்.

வெறுமனே காட்டு உணவுத்தாவரங்களை வளர்ப்பது என்பது அல்லாமல், விவசாயிகளும், தாவரங்களை வளர்ப்போரும், காலநிலை மாற்றத்துக்கு தக்கதான தாவரங்களை உருவாக்க உதவுவதே தமது நோக்கம்.

காட்டுத் தாவரங்களில் பயனுள்ள உணவு வகைகளும், வரட்சியை தாக்குப் பிடிக்கும் வகைகளும் அடங்கும்.

*2050 அளவில் 9.6 பில்லியனாக அதிகரிக்கவுள்ள உலக மக்கள் சனத்தொகையின் உணவுத்தேவைக்கு இந்தக் காட்டு உணவுத் தாவரங்கள் மிகவும் அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.*

*"ராசன் உன் அப்பா அடிக்கடி வன்னிக் காடு வளம் நிறைந்த காடு என்று சொல்வாரே ஏன்"?*

*"பாலை, வீரை முதுரை. நாவல் விளா. காட்டு முந்திரிகை பழமும் வளம் போன்று . நோய்களை தீர்க்கும் தன்மை உள்ளவை. சுவையானவை . சிலமாதங்கள் மட்டுமே காய்த்து மறைந்து விட்டும். பாலை பழம கிடைகும் காலத்தில் காட்டுப் பன்றிக்கு கொழுப்பு அதிகம்.*

*பெரிய பரந்தன் குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களில். கோவிற் பொங்கல் நடவடிக்கைகள், ஈச்சங்குருத்து வெட்டியுண்ணுதல், தங்குவேட்டை, பேய் பிடித்தல், குறிப்பம்புளி போன்ற விடயங்கள் குறிப்பிடப் படவேண்டியவை .*

*"தங்குவேட்டைஎன்றல் என்ன ராசன்? கொஞ்சம் விளக்கமாய் தான் சொல்லேன் . நீ தான் வன்னியில் பிறந்தவன் ஆச்சே."*

*:" காலபோகம் முடிவுற்றுச் சிறுபோகம் ஆரம்பிக்க முதல் உள்ள இடைக்காலத்தில் வயல்களில் நீர் வற்றி மீன்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மணக்கும். எருமை மாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட குளங்கள், மோட்டைகள் தவிர ஏனைய நீர் நிலைகள் வற்றத் தொடங்கும்.*

அதே காலத்தில் காட்டிலும் நீர்ப்பஞ்சம் ஏற்படும். வெகுதூர இடைவெளிகளில் சில மோட்டைகளில் மட்டும் நீர் இருக்கும். யானைகள், குழுவன் மாடுகள், மரைகள், மான்கள், கரடிகள், சிறுத்தைகள், பன்றிகள், மந்திகள் யாவும் இம்மோட்டைகளை நாடி வரும்.

இக்காலமே தங்குவேட்டைக்கு உகந்த காலம் ஆகும்.

வேட்டையில் ஆர்வமுள்ள யாவரும் ஒன்று கூடித்திட்டமிடுவர். துப்பாக்கிகளுடன் வருபவர்களும் உண்டு. துப்பாக்கியை மட்டும் வழங்குபவர்களும் உண்டு. காட்டை நன்கு தெரிந்தவர், குறிபார்த்துச் சுடவல்லவர், துப்பாக்கிக்கு தோட்டா, ஐந்து பற்றி ரோச் லைற்களும், பற்றிகளும் வழங்குபவர்கள், வேட்டையாடிய மிருகங்களை உரித்து இறைச்சியை வார் வாராக வெட்டி வத்தலில் வல்லவர், சமையல் வேலை செய்பவர், தொட்டாட்டு வேலைகள் செய்பவர் என்று தங்குவேட்டைக்குச் செல்பவர் யார் யாரென முடிவு செய்வர். சமையல் பாத்திரம், பண்டங்கள், வேட்டை உபகரணம், கத்தி, கோடரி, மண்வெட்டி முதலியவற்றைத் தோளில் காவி எடுத்துச் செல்வர்.

நீர் நிலைகளிலிருந்து ஒரு மைல் தொலைவில் தற்காலிக தங்குமிடம் ஏற்படுத்தப்படும். அவ்விடம் காற்றுவீசும் திசைக்கு எதிர்த்திசையில் அமைந்திருக்கும். காற்று வீசும் திசையில் இருந்தால் விலங்குகள் மோப்பம் பிடித்துவிட்டால் நீர் நிலைகளுக்கு வராது தவிர்த்துவிடும்.

தங்குவேட்டை இரண்டுவிதமாக இடம்பெறும். நீர் நிலைக்கருகே காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் உயரமான மரங்கள் இருந்தால், அம்மரங்களில் பரண்கள் அமைத்து அவ்வுயரமான பரண்களில் 12ம் நம்பர், 16ம் நம்பர் துப்பாக்கிகளுடன் காத்திருந்து பொருத்தமான மிருகங்கள் வரும் போது வேட்டையாடுவர். யானைகள், கரடிகள், மந்திகள், சிறுத்தைகள், குழுவன் மாடுகளைத் தவிர்த்து விடுவர். மரை, மான், பன்றி என்பவையே வேட்டையாடுபவர்களின் விருப்பத் தெரிவாகும். மரை, மான் பெட்டைகளையும் குட்டிகளையும் தவிர்த்து விடுவர். கலைகளையே (ஆண்) தெரிவு செய்து வேட்டையாடுவர். வேட்டையில் அகப்படும் மிருகங்கள் பதப்படுத்தப்படுவதற்காக உடனுக்குடன் தற்காலிக தங்குமிடத்திற்குக் கொண்டு செல்லப்படும். மிருகங்களின் ஈரல் முதலிய நீண்டகாலம் பாதுகாக்கப்பட முடியாத உள்ளுறுப்புக்கள் நெருப்புத் தணல்களில் சுடப்பட்டு வேட்டையாடுபவர்களுக்கிடையே பங்கிடப்படும். உடனுக்குடன் சுடப்பட்ட ஈரல்களுக்கிணையான சுவையான வேறு உணவு இந்த ஈரேழு உலகத்திலும் கிடைக்காது.

மரம் இல்லாதவிடத்து தங்குவேட்டை சிரமம் வாய்ந்ததாகிவிடும். நீர் நிலையிலிருந்து சுமார் 75 அடி தூரத்தில் காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையில் 8 அடி நீளம், 8 அடி அகலம், 8 அடி ஆழமுள்ள கிடங்கு வெட்டப்படும். பலமான 10 அடி நீளமரங்கள் குழியின் வாயை மூடி அடுக்கப்படும். அதன்மேல் இலைகுழைகள் பரப்பப்படும். அவற்றை மூடி மண் போட்டுச் சமன்படுத்துவர். அதில் ஒரு பதுங்குகுழி

அமைக்கப்பட்டிருப்பது தெரியாதவாறு மண் முன்போலப் பரவப்பட்டுவிடும். ஒரு மனிதர் இறங்கி, ஏறுவதற்குரிய படியமைப்புகள் ஒரு மூலையில் இருக்கும். உள்ளிருந்தவாறே துப்பாக்கியை நீட்டிச் சுடத்தக்க இரு துவாரங்கள் நீர் நிலைப்பக்கமாக அமைக்கப்பட்டிருக்கும். இந்த இரண்டாவது முறையில் சில சாதக, பாதகங்கள் உண்டு.

பதுங்கு குழியிலிருந்து வேட்டையாடிய ஓர் வேட்டைக்காரரால் கூறப்பட்ட ஓர் உண்மைச் சம்பவம் மிகவும் சுவாரஸ்சியமானது. ஒருமுறை ஒரு அனுபவம் குறைந்த வேட்டைக்காரர் பன்றி என்று நினைத்து ஒரு கரடியைச் சுட்டு விட்டார். அது கரடியைக் காயப்படுத்தியதே தவிரக் கொல்லவில்லை. கரடி ஓங்கிக் குரலெடுத்துக் கத்தத் தொடங்கிவிட்டது. அதன் அபயக்குரல் கேட்டு ஒரு கரடிக் கூட்டமே நீர் நிலையில் கூடி விட்டன.

நரிகள் ஏதாவது வேட்டையின் மிச்சம் மீதி கிடைக்காதா எனச் சூழ நின்றன. ஆவேசமுற்ற கரடிகள் பதுங்குகுழியை நோக்கி உறுமியபடி வருவதும் போவதுமாயிருந்தன. தூரத்தில் ஓர் சிறுத்தை உறுமிய சத்தம் கேட்டது. வேட்டைக்காரர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர். பயந்து நடுங்கினர். அனுபவசாலியான வேட்டைக்காரர் மற்றவரை இறக்கிவிட்டுத் தாம் துப்பாக்கியை ஏந்தி நிதானமாகக் குறிபார்த்துக் காயப்பட்ட கரடியை நோக்கிச் சுட்டார். கரடியும் இறந்தது. சத்தமும் நின்றது. விலங்குகள் யாவும் நீர் நிலையை விட்டு விலகிச் சென்றன. விடியும் வரை காத்திருந்தே யாவரும் வெளியில் வந்தனர். செய்தி காடு முழுவதும் பரவியதுபோல அடுத்த இரு நாட்களும்

*விலங்குகள் எதுவும் அந்நீர்நிலையை நோக்கி வரவில்லை. பின்னர் ஒன்றிரண்டாக வரத் தொடங்கின.*

*ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று மாதங்களுக்கான இறைச்சி வத்தல்களுடனும் கடைசி நாள் வேட்டையாடிய உடன் இறைச்சியுடனும் தம் தம் வீடு போய்ச்சேர்வர். ]*

*''அப்போ குறிப்பம் புளி: என்றல் என்ன ''?*

*''குறிப்பம் புளி என்பது குறி வைத்து போக உதவும் புளிய மரம்''*

*''சரி இருட்டுது வாநாம் வீட்டுக்குப் போவோம்'' என்றான் ராசன்*

****

## *கதை 2*

## *குமுளமுனை அரியாத்தை*

*ஈழத்து வன்னியில் உள்ள ஒவ்வொரு ஊருக்கும், குளத்துக்கும் ஒரு காரணப் பெயருண்டு.*

*ஒரு காலத்தில் குளங்களும், வயல்களும்காடுகளும் சிறு குன்றுகளும் மழை கால நதிகளும் நிறைந்த வன்னி நிலத்தைச் சோழ தளபதிகள் குறு நிலா மன்னர்களாகப் பல பகுதிகளை ஆட்சி செய்தனர் அந்தக் குறு நில மன்னர்களின் ஒருவனே வன்னிப் பெரு நிலப்பரப்பை ஆண்ட பண்டார வன்னியன் என்ற மன்னன். ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்ததான். கண்டி மன்னனுக்கு உதவத் தானே படைநடத்திச்சென்று உதவினான். அதன்பின்னர் ஆங்கிலேயர் பண்டாரவன்னியனை அடக்க மன்னார். யாழ்ப்பாணம். திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்து படைநகர்த்தி கற்சிலை மடுவில் கப்ரின் வொன் றிபேக் என்பவனால் தோற்கடிக்கப்பட்டபோது தப்பிச் சென்று மீண்டும் படைதிரட்டி பனிக்கங்குளத்தில் 18ம் போர் (கொக்காவில்) மாங்குளம் வீதிக்கு அண்மையில் இடம்பெற்ற போரில் காயமடைந்தார். அங்கிருந்து தப்பிச் சென்று பனங்காமத்தில் நோய்வாய்ப்பட்டு1811ம் ஆண்டு இறந்தார்.. பனங்காமம் மாந்தை கிழக்கில் உள்ள கிராமம்.*

*முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கையெழில் கொஞ்சும் ஐவகை நிலங்களால் சூழப்பட்ட குமுளமுனைக்கிராமம்*

*தண்ணிமுறிப்புக்குளம், குருந்தனூர்க்குளம்,ஆறுமுத்தான்குளம், மறிச்சுக்கட்டிக்குளம் , நித்தகைக்குளம் ,ஆலடிக்குளம் என இயற்கையின் அங்கங்களைத் தனது எல்லைப்பரப்பாகக் கொண்டு காணப்படுகின்றது.*

*குமுள மரங்கள் காணப்படுவதால் இக்கிராமத்திற்குக் குமுளமுனை என்னும் பெயர் வழங்கப்பட்ட வந்துள்ளது ,குமுளமுனையில் இருந்து மூன்றரை மைல்கள் தொலைவில் தண்ணிமுறிப்புக் குளத்திற்கு இடப்பக்கமாகவும் புதுக்கண்டம் வயல்வெளியின் முடிவாகவும் குமளமுனைக்கிராமத்தின் எல்லையாகவும் கொண்டமைந்த இடம்தாம் " குருந்தனூர்மலை " இதன் பெயர் இன்று மருவி குருந்தூர்மலை என அழைக்கப்படுகின்றது. குருந்தனூர்மலை என அழைக்கப்படக் காரணம் " குருந்தமரம் " எனப்படும் ஒரு வகை மரம் அப் பகுதியெங்கும் காணப்பட்டமையாகும், இங்குதான் பழமைவாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று அமையப்பெற்றிருந்தது*

*இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர் , நாகர் காலத்தில் நாகுல மன்னர்களின் செல்வாக்கும் பரம்பலும் களனி மற்றும் யாழ்ப்பாணத்தின் நாகதீபம் போன்ற பகுதிகளில் காணப்பட்டுள்ளது என வரலாற்று நூல்கள் ஆய்வுகள் குறிப்பிடுகின்ற போதும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் அவர்களின் செல்வாக்கு காணப்பட்டதை குருந்தனூர் சிவாலயத்தினூடாக காண முடியும். நாகர் குல மன்னன் நாகராஜன் குருந்தனூர்மலை உச்சியில் சிவாலயம் ஒன்று அமைத்து வழிபட்டதாகவும் இக் கோவிலில் இருந்து ஏழு*

வீதிகளால் தேர் ஓடப்பட்டிருப்பதாகவும் இன்றும் தண்ணிமுறிப்பு வீதியொன்றிற்கு தேரோடும் வீதி என்ற பெயர் அங்கு புழக்கத்தில் காணப்படுகின்றமை இதற்குச் சான்றாகும்.

அக்காலத்தில் பணிக்கார்மார் யானையை பிடித்து அதன் தந்தம் எடுப்பதில் வல்லவர்கள் . வன்னி யானைகள் நிறைந்த வனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுளமுனைக் கிராமத்தில்தமிழ் நாட்டின் வேலு நாச்சியார் போல் ஒரு வீராங்கனை பிறந்தாள் அவள் பெயர் அரியாத்தை. மென்மையான குணமுள்ளவள் என்பதால் தங்கள் மகளுக்கு அரியாத்தை என்று அவளின் பெற்றோர்கள் பெயர் வைத்தனர். அரியாததைக் கற்பு நெறி தவறாதவள். வற்றாப்பளை கண்ணகி அம்மன் அவள் வணங்கும் தெய்வம் . வேலப்பணிக்கர் மனைவி அரியாத்தை கணவன் மேல் அளவற்ற பற்றுதல் வைத்திருந்தாள்

தாமரைக் கேணிப்பகுதியில் உள்ள காட்டிலே மதங்கொண்ட கொம்பன் யானையொன்று வயல்களிலுமம் ஊருக்குள் வந்து அழிவு செய்கிறது. என்று மக்கள சின்னவன்னியன் என்ற குறு நில மன்னனிடம் முறையிட்டனர் அவன் ஏழு ஊர்ப் பணிக்கர்களை அழைத்து ஆலோசனை செய்தான். சபையில் ஒருவன் எழுந்து வேலப்பணிக்கனே இந்த யானையைப் பிடித்துப் கட்டக் கூடியவன் எனக் கூறுனான். பொறாமை கொண்ட இன்னொரு பணிக்கன் “வேலப்பணிக்கனால் முடியாது, அவன் மனைவி அரியாத்தையால்தான் முடியும்’’ எனக் கேலி செய்தான். அவமானப் பட்டு கவலையோடு வேலப்பன் வீடு திரும்பினான்.

*: ஏன் மச்சான் என்றும் இல்லாதவாறு கவலையோடு இருக்கிறாய்? என்ன உனக்கு அரச சபையில் நடந்தது சொல்? என்றாள் அரியாத்தை கணவனும் கண்களில் கண்ணீர் தளும்ப அரசசபையில் தான் அவமானப் படுத்தப்பட்ட பற்றிய முழு கதையையும் மனைவிக்கு சொன்னான்.*

*"இதுக்கு நீ கவலை படாதே மச்சான். நான் போய் அந்த மத யானையை அடக்கி அவர்கள் விட்ட சவாலை எதிர் நோக்குகிறேன்:" என்றாள் அரியாத்தை*

*": நீ ஒரு பெண் உன்னால் முடியுமா அந்த மத யானையை அடக்க அரியாத்தை"? வேலப்பன் கேட்டான்.*

*" என்னால்: முடியும். நீ நடப்பதை இருந்து பார் மச்சான் " வீரத்தோடு அரியாத்தை சொன்னாள்,*

*மதம் கொண்ட யானையை அடக்க கையில் ஒரு கோலுடனும் கையிற்றுடனும் காட்டுக்குள் அரியாத்தை சென்றாள். தேடினாள் மதம் கொண்ட யானையை , மத யானையால் முறிக்கப் பட்டு கிடந்த மரங்கள் இருந்த பாதை வழியே யானையை தேடி சென்றாள்*

*"எடியே: அறியாத்தை நீ ஒரு பெண், அதை மறந்திடாதே. உன் கணவனால் செய்ய முடியாததை உன்னால் செய்ய முடியாது" என்றார்கள் அவளைக் கண்ட ஊர் சனங்கள்.*

*அவர்கள் சொன்னது அவளின் காதில் விழவில்லை துணிவுடன் அரியாத்தை யானையைத் தேடிச் சென்றாள்.இரு நீண்ட வளைந்த தந்தங்களோடு பிளிரிக் கொண்டு நின்ற யானையை*

எதிர்க் கொண்டாள். அந்த யானை தன் தும்பிகையை தூக்கிய படி அவளை நோக்கித் தாக்க வந்தது, அவள் தன் கையில் உள்ள தடியை உயர்த்தி அதுக்கு காட்டி

‘‘கற்புடையாள் நானாகில் – உன் ஒரு பாதத்தை நீட்டு’’ என்றாள் உரத்த குரலில் அரியாத்தை.

அவள் சத்தம் கேட்டதும் யானையின் பிளிரல் நின்றது – அரியாத்தை யானையைக் கூர்ந்து தன் கண் வெட்டாமல் பார்த்து சொன்னாள்

‘‘உன்னைத்தான் களிறு (ஆண்) யானையே நான் ஒரு பெண்ண சொல்கிறேன் என் கட்டளை படி நட’’ என்று உரத்த குரலில் தன் கையில் உள்ள தடியை உயர்த்திக் காட்டி அரியாதை திரும்பவும் சொன்னாள்.

மத யானை அடங்கித் தன் முன் உள்ள ஒரு பாதத்தை நீட்டியது கண் சிமிட்டும் நேரத்தில் தன் கையில் இருந்த கையிற்றால் அந்த யானயின் இரு கால்களையும் கட்டி அருகில் இருந்த வளர்ந்த பெரிய புளியமரத்தோடு கட்டினாள். யானையும் அசையாது அடங்கி நின்றது. அரியாத்தை காட்டில் யானை விரும்பி உண்ணும் காட்டு இலைகளை அதற்கு உண்ண கொடுத்தாள் . அதன் அருகே சென்று அதைத் தடவி தும்பிக்கையில் முத்தம் கொடுத்தாள் அடங்கிய மத யானை அவளின் ஸ்பரிசத்தில் மயங்கி நின்றது. யானை சாந்தமானது.

அவள் மத யானையை அடக்கியதை கண்ட ஊர்வாசிகள் ஆரவாரப் பட்டனர். நடந்ததை அவர்களால் நம்ப முடிவில்லை செய்தி அரச சபைக்குப் போனது அவளுக்கு பரிசுகள் கொடுத்து கௌரவிக்க சின்னவன்னிய மன்னர் தீர்மானித்தார்.

கலைத்துப் போய் அரியாத்தை வீடு திரும்பினாள். அரியாத்தையின் மைத்துனிக்கு தன் மச்சாள் மேல் பொறமை. மக்கள் அரியாத்தையை புகழ்வதை அறிந்து மேலும் பொறமை அடைந்தாள் உணவில் விஷம் கலந்த உணவனோடு அவளிடம் வந்து

''அரியாத்தை நீ களைத்து வந்து இருக்கிறாய் இதைச் சாப்பிடு என்று அறியாத்தைக்கு கொடுத்தாள். உணவில் விஷம் கலந்தது அரியாத்தையின் கணவனுக்குத் தெரியாது.

உணவு உண்ட பின் தூங்கிய அரியாத்தை அதன்பின் கண் விழிக்கவில்லை. கலைப்பினால் அவள் இறந்து விட்டாள் என ஊர் வாசிகள் பேசிக் கொண்டனர். அவள் கணவனும் அவ்வாறே நினைத்தான்.

அவளின் உடலை தக்கமரியாதையையோடு தகனம் செய்தனர். அரியாத்தையை பிரிந்து வாழ முடியாத வேலப்பன் மனைவியோடு உடன் கட்டை ஏறினான்.

அரியாத்தை யானையை கட்டிய புளிமரத்தின் கீழ் அரியாத்தைக்கு கோவில் அமைத்து ஊர் சனங்கள் வணங்குவார்கள் என்பதை தவிர்க்க வீர பாண்டிய கட்டபொம்மனை தூக்கில் இட்ட புளிய மரத்தை எரித்தது

போல் அரியாத்தை யானையை கட்டிய மரத்தையும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் எரித்தனர்

****

***(புனைவும் உண்மையும் கலந்தது)***

## *கதை 3*

## *உயிருக்கு உயிர்*

*எட்டுமாடி ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் ஆறாம் மாடியில் உள்ள தீவிரச் சிகிச்சை பிரிவில, முப்பத்திநாலாம் நம்பர் கட்டிலில், படுத்திருந்த ஒரு வயோதிப நோயாளி மூச்சுவிடச் சிரமப் பட்டுக்கொண்டிருந்தார். மூக்கில் ஒக்சிஜன் டியூப் இணைக்கப்பட்டிருந்தது. கட்டிலுக்கு பக்கத்தில் உள்ள மின் திரையில் இருதயத்தின் துடிப்பு வண்ணக் கோலங்களாகத் தோற்றமளித்தன. மாரடைப்பினால் பாதிக்கப்பட்ட சித்த வைத்தியர் சிற்றம்பலம் அம்புலன்சில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட போது அவர் உயிர் பிழைப்பாரோ என்று எல்லோருக்கும் யோசனை. தீவிர சிகிச்சைப் பிரிவிக்கு வெளியே உள்ள பார்வையாளர்கள் அறையில், கவலை தோய்ந்த முகத்துடன், சிற்றம்பலத்தின் மனைவி செல்லம்மாவும் மூன்று பிள்ளைகளும் இருதய வைத்தியர் நிபுணர், டாக்டர் ஸ்மித் என்ன சொல்லப் போகிறாரோ என ஏங்கி நின்றனர். பலரின் உயிர்களை, தன் கைராசி மூலமும் சித்த வைத்தியத் திறமையாலம் பலரை காப்பாற்றிய கணவரை கடவுள் காப்பாற்றுவாரா? இது தான் செல்லம்மா மனதில் தோன்றிய கேள்வி.*

*பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏரிகளும், பூக்காடும் , நெல்வயல்களும்; நிறைந்த குக்கிராமம் பூனகரி, பூ + நகர் + ஏரி என்பதில் இருந்து பூனகரி என்ற பெயர் மருவியதாக*

கதையுண்டு. மல்லிகை, ரோஜா, செவ்வந்தி பொன்ற பல பூந்தோட்டங்கள் அல்லி ராணியின் அரண்மனைகளுக்கும் , கோயில்களுக்கும் தேவையான மலர்களை அந்தப் பூந்தோட்டங்கள் வழங்கிவந்தன. இன்று போரின் பாதிப்பினால் பல ஈழமக்களின்; சிதைந்த வாழ்வைப் போல் உருக்குளைந்து அப் பூத்தோட்டங்கள் இருந்த இடம் தெரியாமல் தோற்றமளிக்கின்றன.. சுற்றாடல் சிதைக்கப்பட்டாலும் கிராமத்தின் மண்வாசனையும் என்றும் நினைவைவிட்டு அகலாத கிராமவாசிகளின் அனுபவங்களும் இன்றும் மனதைவிட்டு பிரியாது.

அறுபது வருடங்களுக்கு முன் அந்த கிராமத்தின் முன்னேற்றத்துக்காக அரும்பாடு பட்டவர் ஆயுர்வேத சித்த வைத்தியர் சிற்றம்பலம். அவரின் தகப்பனார் பேரம்பலமும் ஆயுர்வேத வைத்தியத் தொழில் புரிந்தவர். அவர் சித்த வைத்தியத்தை முறைப்படி கற்றவர். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதற்கிணங்க, சிற்றம்பலம் தகப்பனைப்போல் தொட்டதெல்லாம் பொன்னாகும் கைராசி உடையவர். அவரைச் செல்லமாக வைத்தியர் சித்தர் என ஊர்வாசிகள் அழைத்தனர். காலையில், சூரியஉதயத்துக்கு முன்பே எழும்பி, தன் நிலபுலன்களை சுற்றிவந்து, பின் கிணற்று குளிர்தண்ணீரில் குளித்து அதன்பின் முருகனுக்குப் பூஜைசெய்து, நெற்றி நிறம்பிய திருநீற்றுடனும் சந்தனப் பொட்டுடனும் அரை மணி நேரம் தியானம் செய்தபின்னரே காலை நீராகாரம் அருந்துவார். அந்த கிராமவாசிகளின் உடல் நலம் சம்பந்தப்பட்ட சரித்திரம் அவர் மூளையில்

பதிவாகியிருந்தது. அதனால் மருத்துவத்துக்கு அவரை நாடி வரும் கிராமத்து மக்களிடம் பல கேள்விகள் கேட்காமலே கைநாடித்துடிப்பு, கண்கள் , விரல்கள் , நாக்கு ஆகியவற்றின் நிறம் பார்த்து மருத்துவம் செய்யும் திறமை உடையவர் சித்தர். தன் பாவிப்புக்குத் தேவையான மூலிகைச் செடிகளை வீட்டுதோட்டத்தில் வளர்த்தார்.

****

பூனகரி கிராம விதானையார் சிவலிங்கம் (சிவா) , சித்தரின் நெருங்கிய நண்பர். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். வழக்கத்துக்கு மாறாக, காலை நேரம் சிவா அவசரம் அவசரமாக மருத்துவமனைக்குள் உள்ளுடுவதைக் கண்ட சித்தருக்கு புதிராக இருந்தது. சிவாவின் முகத்தைப் பார்த்தவுடன் , அவருக்கு ஏதோ முக்கிய பிரச்சனை இருப்பது சித்தருக்கு தெரிந்தது.

"என்ன சிவா இந்த நேரம் அவசரம் அவசரமாய். ஏதாவது முக்கிய பிரச்சனையா? வழக்கத்திலை இந்த நேரத்திலை என்னை நீ சந்திக்க வருவது கிடையாது."

"ஓம் சித்தர். பிரச்சனைதான். உம்மோடை தனிய பேசவேண்டும். " சிவா சுற்றி உள்ளவர்களைப் பார்த்து ஒரு கண்ணோட்டம் விட்டார். அறைக்குள் தமிழ் வாத்தியார் முருகேசு இருப்பதை கண்டார். ஊர் வம்பு கதைப்பதில் பிரசித்தமானவர் முருகேசு என்று அவருக்கு நல்லாய் தெரியும். ஒன்றை இரண்டாக்கி ஊர்

முழுவதும் பரப்பக் கூடியவர் அவர். முருகேசுக்கு ஊரிலை "தினச் செய்தி" என்ற பட்டப்பெயர் வேறு.

"சித்தர். உமக்கு வசதியிருந்தால் நீரும் நானும் கொஞ்ச நேரம் அடிவளவுக்குள்ளை போய் கதைக்க முடியுமே:"? சித்தருக்கு சிவாவின் நிலை விளங்கிவிட்டது.

"அதுக்கென்ன சிவா. இவையள் மூன்று பேரையும் பார்த்து, மருந்து குடுத்திட்டு வாறன்.. அது மட்டும் கொஞ்சம் பொறும் ".

"சித்தர் நான் உதிலை இருக்கிறன், நீர் வேலையை முடிச்சிட்டுவாரும். ". சிவா பக்கத்தில் உள்ள கதிரையில் போய் அமர்ந்தார்.

சிவாவுக்கு சித்தரைப் போல் வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். அவர் சிவகாமியை திருமணம் செய்யும் போது வயது முப்பது. சிவகாமிக்கும் அவருக்கும் வயதில் பத்து வருஷ வித்தியாசம். சிவாகாமி தாயைப் போல் அழகானவள். செக்கச் செவேல் எனறு நல்ல நிறம். நீண்ட கரு கரு என்ற தலைமயிர். திருமணமான புதுதில், அவள் அழகைப்பார்த்து பலர் " பூநகரி ரோஜா" என்று விமர்சிப்பதைக் கேட்டு சிவாபெருமை படுவார். சீதனம் இல்லாமல் சிவாகாமியை திருமணம் செய்ய அவள் அழகும் ஒரு முக்கிய காரணம். கிட்டதட்ட இருபத்தைந்து வருஷத் திருமண வாழ்க்கையில் ஐந்து பெண்பிள்ளைகளுக்கு தாயாகியும் சிவகாமி இளமை குன்றாமல் பதினாறு வயது குமரியைப் போல் இருந்தாள். தங்களுக்குக் கடைசி காலத்தில் கொள்ளிவைக்க ஒரு ஆண் வாரிசு இல்லையே என்று சிவா

தம்பதிகளுக்கு பெரும் கவலை. அவர்கள் போகாத கோயில்கள் இல்லை. உள் ஊர் சாஸ்திரி கூட ஆண்வாரிசுக்கு சாத்தியமில்லை என்று சொன்னது அவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. மூத்த மகளை நல்ல இடத்திலை கட்டி குடுத்தாச்சு. இரண்டாவதும் மகளும் கலியாணம் செய்துகொண்டு இங்கிலாந்துக்குப் போயிட்டாள். மற்ற மூன்று பேரையும் குறையில்லாமல் நல்ல இடத்தில் கட்டி குடுத்திட்டால் நிம்மதியாய் கண்ணை மூடலாம் என்று நினைக்க தெய்வம் வேறுமாதிரி நினைக்கிறது.

"என்ன சிவா அப்படி யோசனை? வாரும், அடிவளவுக்குப் போய் கதைப்போம். ".சித்தரின் கணீர் என்ற குரல் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த சிவாவை சுயநிலைக்குக் கொண்டு வந்தது. இருவரும் மௌனமாக மாட்டுக் கொட்டிலடிப் பக்கம் போனார்கள்.

"சரி இனி விஷயத்துக்கு வாரும். உம்முடைய பிரச்சனை என்ன? உம்மையும் என்னையும் இந்த இரண்டு பசுமாடுகளையும் தவிர வேறு ஒருத்தரும் இங்கை இல்லை".

"சித்தர் உமக்கு எப்பவும் பகிடி. நான் சொல்லப்போகிற இந்த விஷயம் எங்கள் இரண்டு பேருக்குள்ளை இருக்கட்டும். உம்முடைய மனுசிக்கும் தெரியக் கூடாது"

"அப்படி என்ன என்றை மனுசிக்குக் நான் சொல்லக் கூடாத இரகசியம்? கெதியிலை விஷயத்துக்கு வாரும் "

“என்றை மனுசி சிவகாமி மூன்று மாசம் முழுகாமல் இருக்கிறாள் “. சிவா பதட்டத்துடன்  ஏதோ குற்றம் புரிந்தவர் போல் சொன்னார்.

“என்ன விசர் கதை கதைக்கறீர். இந்த வயசிலையா? “. சித்தருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

“நான் ஏன் விசர் கதை கதைக்க வேண்டும். கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலை போய் எல்லா பரிசோதனைகளும் செய்தபிறகு தான் இந்த செய்தியை உமக்குச் சொல்லுறன். “

“இனி என்ன.? சந்தோஷப்பட வேண்டிய விஷயம்தானே. எனது வாழ்த்துக்கள். இந்த முறை நிட்சயம் உமக்கு மகன் பிறக்கப்போகிறான்.  உங்கள் இரண்டு பேருடைய நீண்ட கால ஆசை நிறைவேறப்போகுது. “சிவாவின் கையைப்பிடித்து குழுக்கி தன் மகிழச்சியைத் தெரிவித்தார் சித்தர்.

“பகிடிவிடாதையும் சித்தர். ஆண் குழந்தை பிறக்கும் என்று என்ன நிச்சயம்? சாஸ்திரிமார் சொன்னது பிழைக்குமா? இந்த வயசிலை பேரப்பிள்ளைகள் இருக்கக்கை  எங்களுக்கு பிள்ளை பிறந்தால் ஊர்ச்சனம் என்ன நினைப்பினம். எங்களுக்கு இருக்கிற பிள்ளைகள் போதும். இனியும் வேண்டாம் “

“ஏன் சிவா. ஊரில் எத்தனை குடும்பங்கன் பிள்ளையள் இல்லாமல் கவலைப்படுகிதுகள். உங்களுக்குக் கடவுள் தந்தும் வேண்டாம் என்கிறியள். உங்களுக்கு வேண்டிய சொத்து, பணம் இருக்குது. பிள்ளையளை வளர்த்து விட்டால் கடைசிக் காலத்திலை உங்களை கவனிக்காமலே போகப் போகுதுகள்“

*"இல்லை சித்தர். உமக்கு தெரியும், எனக்கு வயசு ஐம்பத்தாறாகப் போகுது. இப்ப எங்களுக்கு பிள்ளை பிறந்தால் ஊர் சிரிக்கும். சொந்தக்காரரர் பகிடிபண்ணுவினம். இங்கைபார் இந்த வயசிலை உவருக்கு இளமை துள்ளிவிளையாடுது என்று. எப்படி நான் ஊரிலை தலைகாட்டமுடியும்? "*

*"இதெல்லாம் நடக்க முந்தி யோசிச்சிருக்க வேண்டும் " சித்தர் சிரித்தபடி சொன்னார்.*

*"ஏதோ எதிர்பாராத விதமாய் நடந்திட்டுது. இப்ப எனக்கு உம்முடைய உதவி தேவை. செய்வீரே? "*

*சித்தருக்கு சிவா என்ன உதவி கேட்கப்போறார் என்று விளங்கிவிட்டது.*

*"இப்ப என்னை என்ன செய்யச்சொல்லுறீர்? "*

*"மனுசியிண்டை வயிற்றில் உள்ள கருவைக் கலைக்க ஏதாவது மருந்து தேவை. தருவீரே ? "*

*சித்தர் அந்த கேள்வியை எதிர்பார்த்த படியால் சிவா கேட்ட உதவி அவரைத் திகைக்க வைக்கவில்லை. சற்று நேரம் சிந்தித்தார். தன் மருத்துவ துறையின் கோட்பாடுகளுக்கு எதிராக தான் எப்படி செயல் பட முடியும்? சிவாகாமியின் உயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அதன் பழி தன் மேல் விழும் என்பது அவருக்குத் தெரியும். துய்மையான கொள்கையுடன் வாழ்பவர் சித்தர். இதையெல்லாம் சிவாவுக்கு விளங்கப்படுத்தி உணரவைக்கமுடியாது என்பதும் அவருக்குத் தெரியும். அதுவுமன்றி மருந்தில்லாமல் சிவா இடத்தைவிட்டு*

நகரமாட்டார் என்றும் தெரியும்.. யோசித்து தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தார்.

''சரி என்னோடை வாரும். ''

சிவாவும் சித்தரும் திரும்பவும் மருத்துவமனைக்கு சென்றனர். மருந்து கையுக்கு வந்தவுடன் சிவாவின் முகத்தில் ஒரு மகிழச்சி. மருந்தை எப்படி பாவிக்க வேண்டும் என்பதை விளக்கினார் சித்தர்.

''சித்தர். இந்த உதவியை நான் எப்பவும் மறக்கமாட்டன். '' சிவா பூரணதிருப்தியுடன் போவதை பார்த்து சித்தர் புன்னகையுடன் வந்திருந்த நோயாளியை கவனிக்கத் தொடங்கினார்.

****

மாதங்கள் உருண்டோடின. சிவாகாமியின் வயறு பெருத்ததே தவிர வேறுமாற்றங்கள் அவளில் ஏற்படவில்லை. சித்தரின் மருந்து வேலை செய்யவில்லை என்று தெரிந்து கொள்ள சிவாவுக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. சித்தர் தன்னை ஏமாற்றி விட்டார் என்று தெரிந்தது. ஒரு நாள் தன் கோபத்தை ஒரு நாள் சித்தர் மேல் பொரிந்து தள்ளினார். நம்பிக்கைத் துரோகி எனத் திட்டினார். கரு கலைவதற்கு மாறாக குழந்தை குறையின்றி ஆரோக்கியத்துடன் வளர்வதற்கு தான் ''சிவனப்பிரகாச லேகியம்'' கொடுத்த காரணங்களை எவ்வளவோ சொல்லியும் சிவா ஏற்றுகொள்ளவில்லை. சித்தர், தன்னை ஊர் சனங்கள் ஏளனமாக பேசி அவமானப்படுத்தவே அவர் செய்ததாக சிவாவின் வாதம். சிவகாமிக்கு உள்ளுக்குள்

குழந்தை குறையின்றி வளர்வதையிட்டு சந்தோஷம். கணவனுக்குத தெரியாமல் கணவனின் செயலுக்கு சித்தரிடம் மன்னிப்பு கேட்டாள். தான் செய்யும் மருத்துவத் தொழிலின் தர்மத்துக்கு எதிராக அவளது உயிருக்கும் கருவில் வளரும் குழந்தையினது உயிருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு செயல்பட வேண்டியிருந்ததென விளக்கினார் சித்தர் . ஊர் சனங்களின் கருத்தை விட கருவின் உயிரே முக்கியம் என்ற அவர் கொள்கையை நினைத்து அவள் பெருமைப்பட்டாள்.

****

கொழு கொழு என்று ஒரு ஆரோக்கியமான அழகான ஆண் குழந்தை பிறந்த போது சிவா தம்பதிகள் பூரிப்படைந்தனர். தனக்கு கொள்ளி வைக்க ஒரு மகன் பிறந்திட்டான' என்ற சந்தோஷம் சிவாவுக்கு. குழந்;தைக்கு கஜேந்திரன் என்று பெயர் வைத்தார்கள். சிவகாமி மனதுக்குள் சித்தருக்கு நன்றி தெரிவித்தாள். ஆனால் சிவாவுக்கு சித்தர் தன்னை ஏமாற்றிய கோபம் மட்டும் விட்டுப் போகவில்லை. சித்தர் குடும்பம் குழந்தைக்குப் பரிசாக அனுப்பிய தங்கச் சங்கிலியைக் கூட ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஈழத்துப் போர் நிமித்தம் ஊரைவிட்டு புலம் பெயர்ந்த பூனகேரி குடும்பங்கள் பல. சித்தர் குடும்பமும் சிவா குடும்பமும் அக்குடும்பங்களில் ஒன்று. ஒவ்வொரு திக்கில் பிரிந்த அவர்கள் தொடர்பு விட்டு திரும்பவும் ஒன்று சேரும் சந்தாப்பம் கிட்டாமல் போய்விட்டது. அந்த இன்பகரமான , அமைதியான கிராமவாழ்க்கையை நினைத்தும் தன் கணவன் பொது

*சனத்துக்கு செய்த சுயநலமற்ற சேவையையும் தற்போது அவர் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருப்பதை நினைத்துப் பெருமூச்சு விட்டாள் செல்லம்மா.*

*''அம்மா , என்ன யோசிக்கிறியள் '' என்று தோளில் மகள் கைவைத்த போது செல்லம்மா சுயநிலைக்கு திரும்பினாள்.*

*''டொக்டர் என்னவாம் பிள்ளை ? செல்லம்மா பதட்டத்தோடு மகளைப் பார்த்து கேட்டாள்.*

*“டொக்டர் ஸ்மித்தோடை கதைத்தனான். அப்பாவுக்கு ஒரு மாதத்துக்கு முன் செய்த பரிசோதனையின் ரிப்போர்ட்டும் இப்ப செய்த பரிசோதனைகளின் ரிப்போர்ட்டுகளின் படியும் மூன்று இரத்தக்குழாய்களில் அடைப்புகள் இருக்காம். இருதய சத்திர சிகிச்சை செய்யவேண்டியது அவசியமாம். அதுவும் கெதியிலை செய்யவேண்டுமாம். அப்பாவுடைய நல்ல காலத்துக்கு பிரபல சேர்ஜன் ஒப்பிரேசன் செய்ய உடன்பட்டுள்ளாராம். உங்கடை ஒப்புதல் வேண்டுமாம்“.*

*அழுதாவாரே சத்திர சிகிச்சைக்கு ஒப்புதலை படிவத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்தாள் செல்லம்மா.*

****

*மறுநாள் சத்திர சிகிச்சை முடியும்மட்டும் சித்தர் குடுப்பத்தின் மனம் பதட்டப்பட்டுக்கொண்டிருந்தது. வெயிட்டிங் அறைக்குள் தலையில் கைவைத்தபடி இருந்த செல்லம்மா ஒப்பிரேசன் முடியுமட்டும் தண்ணீர் கூட குடிக்க மறுத்துவிட்டாள். காலை எட்டு மணிக்கு ஒப்பிரேசன்*

அறைக்குள் சித்தரை கொண்டு போய் ஐந்து மணி நேரம் ஆகியும் செய்தி ஒன்றும் வராதது அவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தது. என்ன செய்தி வருமோ என்று எதிர் பார்த்து கொண்டிருந்தார்கள். செல்லம்மா வேண்டாத தெய்வமில்லை. வருடா வருடம் கந்தசஷ்டி விரதம் பிடிப்பவள் அவள். தொடர்ந்து பிடிப்பதாக வேண்டிக் கொண்டாள்.

ஒருபடியாக ஐந்து மணித்தியாலத்துக்குப்பின் பச்சை உடுப்பும் வெள்ளை தொப்பியுடனும் ஒப்பிரேசன் செய்த சேர்ஜன் சிரித்த முகத்துடன் நடந்துவந்தார். செல்லம்மா மரியாதை கொடுத்து எழும்பி நின்றாள்.

''அம்மா நீங்கள் இருங்கள். ஒப்பிரேசன் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இனி அவர் உயிருக்கு ஆபத்து இல்லை. நாங்கள் நினைத்த மாதிரி அவ்வளவு ஆபத்தான கட்டத்தில் அவர் இருக்கவில்லை '' என்று சேர்ஜன் தமிழில் பேசியபோது எல்லோரும் வாயடைத்து நின்றனர். செல்லம்மா அவரை கை எடுத்துக் கும்பிட்டாள்.

''சீ இதென்ன செய்யிறியள். நீங்கள் என் தாய் மாதிரி. ஒரு காலத்திலை உங்கள் கணவர் பல உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார். அந்த உயிர்களில் என் உயிரும் ஒன்று . தன் செயல் மூலம் நல்ல கர்மாவை தேடிக்கொண்டார். அவர் என்னைக் காப்பாற்றிய படியால் தான் நான் அவர் உயிரைக் இன்று காப்பாற்றமுடிந்தது. அவர் உயிரை காப்பாற்ற இந்த சந்தர்ப்பம் கிடைத்ததிற்கு இறைவனுக்கு என் நன்றி. இன்னும் அரை மணி நேரத்தில் அவரை ஐ சி யூ க்கு கொண்டு வருவார்கள். அவர்

உடல் நிலையைப் பொறுத்து நாளை வார்டுக்கு மாற்றுவார்கள். இதோ என் பிஸ்னஸ் கார்ட். நான் அடிக்கடி அவரை வந்து பார்க்கிறேன். ஒன்றுக்கும் யோசிக்காதைங்கோ. எனக்கு இன்னொரு ஒப்பிரேசன் இருக்கு நான் போகவேணும் ". சேர்ஜன் பதிலை அவர்களிடம் இருந்து எதிர்பார்க்காமல் ஒப்பிரேசன் தியெட்டரை நோக்கிச் சென்றார்.

செல்லம்மா வார்த்தைகள் வராமல் வாயடைத்து மகளைப் பார்த்தாள்.

பிஸினஸ் கார்ட்டை வாசித்த அவள் மகள் "சேர்ஜன்டை பெயர் டொக்டர் சிவா கஜன். உங்களுக்கு அவரை தெரியுமா அம்மா ?" மகள் கேட்டாள்.

சேர்ஜன் சொன்ன வார்த்தைகள் திரும்பவும் பழைய கால நினைவுகளுக்கு செல்லம்மாவை அழைத்துச் சென்றது. "ஒருகாலத்தில் என் உயிரைக் காப்பாற்றியவர் உங்கள் கணவர்." என்று சேர்ஜன் சொன்ன வார்த்தைகள் அவள் நினைவுக்கு வந்தது. சிவாவின் மாகனா என் கணவரின் உயிரை காப்பாற்றியது. செல்லம்மாவால் நம்பமுடியவில்லை. மகளின் கேள்விக்கு புன்முறுவல் மூலம் பதில் அளித்தாள்.

****

## கதை 4

## துணுக்காய் மெலனி டீச்சர்

இலங்கையில் வடக்கே உள்ள வன்னிப் பகுதியில் விவசாயிகள் வாழும் கிராமம் துணக்காய். யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே மாங்குளம் என்ற ஊர் அறுபது மைல் தூரத்தில் உள்ளது. மாங்குளத்திலிருந்து மேற்கே பதினொரு மைல் தூரத்தில் துணக்காய் கிராமம் அமைந்துள்ளது. அக்கிராமத்துக்கு அருகே மூன்று மைல் தூரத்தில் சுமார் 6000 மக்களைக் கொண்ட மல்லாவி கிராமமுண்டு. விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ அப்பகுதி ஒருகாலத்தில் இருந்தது.

பழமைவாதிகளான அவ்வூர் மக்களின் பிரதானத் தொழில் விவசாயம்;. தமிழைத்தவிர பிறமொழிகளை விரும்பாதவர்கள். எவராவது வேறு கிராமங்களிலிருந்து தம் ஊருக்கு வந்து வாழ்வதை அதிகம் வரவேற்கமாட்டார்கள். தங்கள் கிராமத்துக் கலாச்சாரம் பாதிக்கப்படலாம் என்ற பயம் அவர்களுக்கு.

தினத்துக்கு மூன்று பஸ்கள் மாங்குளம் ஊடாக துணுக்காயிலிருநது யாழ்ப்பாணம் போய் வரும். சுமார் இரண்டு மணித்தியாலப் பயணம். வன்னிப் பிரதேசத்தில் பல கிராமத்துப் பாடசாலைகள் பின்னடைவுகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அதனால் உயர்கல்வியானது கிராமப் பிள்ளைகளுக்கு கிடைத்து, பல்கலைக் கழகம் செல்வது மிகக் குறைவு. துணக்காய் பாடசாலைக்குத் தமிழும் ஆங்கிலமும்

நன்கு தெரிந்த ஆசிரியர் ஒருவரை நியமிப்பது ஒரு சவாலாக இருந்தது. காரணம் யாழ்ப்பாணம் அல்லது வவனியா மன்னாரிலிருநது துணக்காயுக்கு மாற்றலாகி ஆசிரியராக வருவதற்கு ஆங்கில ஆசிரியர்கள் தயங்குவதேயாகும். அவர்கள் வன்னிப் பிரதேசத்தில் வேலை செய்ய மறுப்பதற்கு பல காரணங்கள் இருந்தன்.

கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் படிப்பிப்பதென்றால் அதற்கு பொறுமையும் எதையும் தாங்கும் மனநிலையும் தேவை. யாழ்குடாநாட்டில் வாழும் எல்லா ஆசிரியர்களும் வன்னிக்கு ஆசிரியராகப் போக விரும்புவதில்லை. அதுவும் ஆங்கிலம் கற்பிக்க போவதென்றால் அது ஒரு சவாலாக அமைகிறது. துணுக்காய் கிராமத்து மக்கள் தமிழ்; பற்று மிக்கவர்;கள். ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திரிருந்து துணக்காயுக்கு போய் கல்விகற்பிக்க மறுப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் மலேரியா காய்ச்சல். அதோடு மருத்துவ வசதிகள் அங்கு குறைவு. ஊர்வாசிகள் வேறு இடங்களில் இருந்து தங்கள் கிராமத்துக்கு வந்தவர்களோடு சிரித்துப் பழகுவதும் குறைவு.

“மெலனி” என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் ஜெயமணி டீச்சரின் தந்தை இரத்தினம் என்ற செல்வரத்தினம்; ஒரு இந்து. அவர் மனைவி நேசமணி கிறிஸ்தவ மதத்தவள்;. இருவரும் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஒன்றாக வேலை செய்த போது ஏற்பட்ட நட்பு காதலாகி மலர்ந்து திருமணத்தில் போய் முடிந்தது. இரத்தினத்தின் பெற்றோருக்கு தங்கள் மகன் ஒரு

கிறிஸ்தவப் பெண்ணை திருமணம் செய்தது அதிருப்தியைக் கொடுத்தது. அவர்கள் எவ்வளவோ தடுத்தும் இரத்தினம்; அவர்களின எதிர்பபை மீறி நேசமணியைத் திருமணம் செய்தார். அதனால் மகன இரத்தினத்தோடு அவர்கள் பேசுவது கிடையாது.

உடுவில் கிராமத்தில் பெரும்பாலும் கிறிஸ்தவர்களே வாழ்ந்தார்கள். கிராமத்தில் நேசமணியின் பெற்றோர் சொந்த வீட்டில் வாழ்ந்தவர்கள். நேசமணியின் தாய் பூமணி உடுவில் மகளிh கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றி ரிட்டையாரனவள். நேசமணியின தந்தை உடுவில்லில் விதா்னையராக இருந்தவர். அக்கிராமவாசிகள் பலரை அவருக்குத் தெரியும்.; தன்னைப் போல் தன் பேத்தியும் ஆங்கில ஆசிரியையாக வர வேண்டும் என்பது பூமணியின் ஆசை. பூமணி தான் படிப்பித்த உடுவில் மகளிh கல்லூரியிலேயே மெலனியையும் கல்வி பயில வைத்தாள்.

மெலனி எல்லாப் பாடங்களையும் விட ஆங்கிலப்பாடத்தில் திறமையான மாணவியாக திகழ்ந்தாள். ஆங்கலப் பேச்சு கட்டுரைப் போட்டிகளில் பரிசுகள் பல பெற்றவள். ஆங்கிலப் புத்தகம் வாசிப்பதே அவளது பொழுது போக்கு. தன் பேத்தி விரும்பிக் கேட்கும் ஆங்கில நூல்களை வாங்கிக் கொடுக்க பூமணி தயங்கமாட்டாள். மெலனிக்கும் பூமணிக்கு மிடையே இறுக்கமான உறவு இருநது வந்தது. எதையும் பாட்டியாரோடு கலந்து பேசி முடிவெடுக்க மெலனி தயங்கமாட்டாள்.

ஆரம்பத்தில் மல்லாகம் இராமனாதன் கல்லூரியில் ஆசிரியையாக சேர்ந்த மெலனி பலாலி ஆசிரியர் பயற்சிக்

கல்லூரியில்; ஆங்கில ஆசிரியையாகப் பயிற்சி பெறும் வாய்ப்பு கிட்டியது. இரு வருட பயிற்சிக்குப் பின்னர் தனது பாட்டியார் படிப்பித்த உடுவில் மகளிர் கல்லூரிக்கே அவள் ஆசிரியையாகப் போக விரும்பினாள். ஆனால் அவள் விரும்பியது ஒன்று நடந்து வேறொண்டு. துணுக்காயில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு ஆங்கில ஆசிரியையாக நியமனக் கடிதம் கல்வி இலாக்காவில் இருந்து அவளுக்கு வந்தபோது என்ன செய்வது என்று மெலினுக்குத்; தெரியவில்லை. துணுக்காய் கிராமம் எங்கிருக்கிறது என்பதே அவளுக்குத் தெரியாது. யாழ்ப்பாணமும் வலிகாமம் பகுதிக் கிராமங்களையும்; தவிர தெற்கே உள்ள வன்னிப் மாவட்டத்தைதைப் பற்றி அவள் அறிந்திருக்கவில்லை.

கிளிநொச்சியில் அசிரியராக வேலை பார்த்து உடுவிலுக்கு மாற்றலாகி வந்த மெலினியின உறவினர் ஒருவர் துணுக்காய் கிராமத்தைப்பறறி முழு விபரமும் அவளுக்குச் சொன்ன பி;ன்னரே அக்கிராமம் எங்கிருக்கிறது, அவ்வூர் வாசிகள் எப்படிப் பட்டவர்கள் என்பது அவளுக்குத் தெரியவந்தது. தனது பாட்டியாரிடம் துணுக்காயுக்கு ஆசிரியர் பதவியை ஏற்றுப் போவதா இல்லையா என்று ஆலோசனை கேட்டாள் மெலனி.

"மெலனி நீ ஒரு பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியை என்பதை மறந்துவிடாதே. துணுக்காய் கிராம மக்கள் தமிழ்பற்று உள்ளவர்கள். ஆங்கில அறிவில் சற்று குறைந்தவர்கள். இந்த நியமனத்தை நீ ஒரு சவாலாக ஏற்று துணக்காயுக்குச் செல்வது தான் நல்லது. சில வருடங்கள் அங்கு வேலை செய்து, அக்

கிராமத்துப் பிள்ளைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப் போதித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை ஒரு புனித சேவையாக நீ கருத வேண்டும். அதனால் அப் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மாதம் ஒரு முறை உடுவிலுக்கு நீ வந்து போகலாம். தயங்காமல் நியமனத்தை ஏற்றுக் கொள்'' என்றாள் மெலனி என்ற ஜெயமணியின் பூமணி பாட்டியார். தன் பாட்டியார் சொன்னபடி நியமனத்தை ஏற்று துணுக்காயுக்குப் போக மெலனி முடிவுசெய்தாள்p.

****

கையில் ஒரு சூட்கேசுடன் துணக்காயுக்கு பஸ் ஏறினாள் மெலனி. துணுக்காயில் எங்கு தங்குவது என்பதை அவள் முடிவெடுக்க வில்லை. பாடசாலை தலைமை ஆசிரியர் மூலம் அவருக்குத் தெரி;ந்த ஒரு குடும்பத்தின் வீட்டில் தங்க திட்டமிட்டிருந்தாள் . பஸ் மாங்குளம் ஊடாகத் துணக்காயுக்கு போய் சேர இரு மணித்தியாலங்களுக்கு மேல் எடுத்தது. மாங்குளம் துணக்காய் பாதையின இருபக்கங்களிலும்; பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகள். இரண்டொரு குளங்கள். வயலை உழும் விவசாயிகளின் காட்சி அவளுக்குப் புதியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளை நிற கொக்குகளின்; கூட்டம். கிராமத்து இயற்கையின் தோற்றம்; அவளை வெகுவாகக் கவர்ந்தது. போகும் பாதையில இரு பாம்புகள் வாகனங்களால் அடிபட்டு இறந்து கிடந்ததை கண்டதும்

அவளுக்க தன் உறவினர் சொன்ன எச்சரிககையே நினைவுக்கு வந்தது.

"மெலனி துணுக்காயில் பாம்புகள் அதிகம். பலர் பாம்பு கடியால் இறந்து போயிருக்கினம். கொஞ்சம் கவனமாயிரு." இது அவர் சொன்ன எச்சரிக்கை.

****

பாடசாலை தலமை ஆசிரியர் சிவராசா அதிகம் பேசமாட்டார். இருபத்தைந்து வருடங்களாக ஆசிரியராக சேவை செய்து வருபவர். வன்னியில் முல்லைதீவு உருத்திரபுரம் நெடுங்கேணி பூனகரி அகிய இடஙகளில் ஆசிரியராக வேலை செய்து இறுதியாகத் தன் சொந்த ஊரான துணுக்காயுக்கு மாற்றலாகி அவா வந்து இரு வருடங்களாகிவிட்டது. தமிழ் பற்று மிக்கவர். அவருக்கு ஆங்கிலம்; ஓரளவுக்குத் தெரிந்திருந்தாலும் பேசுவதற்கு பி;ன் வாங்குவார்.

சுமார் 400 மாணவர்களைக் கொண்ட பாடசாலையில் பெரும்பாலும் துணுக்காய் மலாவி கிராமத்;து மாணவர்களே கல்விபயின்றனர். அம்மாணவர்களின் பெற்றோரை அவர் நள்கு தெரிந்து வைத்திருந்தார். வேட்டியும் அரைக்கை வெள்ளை நிறச் சேர்ட்டோடும் நெற்றியில் திருநீறுறோடும் செருப்பணிந்தே அவர் தினமும பாடசாலைக்குச் செல்வார். சிவராசா ஒரு நேர்மையான மனிதர். பிறருக்கு உதவும் மனம் உள்ளவர். எளிமையானவர் ஆனால் கண்டிப்பான பேர்வளி.

பத்தாம் வகுப்பு வரை பாடசாலையில் படிக்கும் வசதியிருந்ததால் மாணவ மாணவிகள் உயர் கல்வி கற்கு;ம் வசதி அங்கு இருக்கவிலலை. வசதி படைத்த மாணவர்கள் வவுனியா,, கிளிநொச்சி. அல்லது மன்னாருக்கோ சென்று உயர் கல்வி பயின்றனர். மற்றமாணவர்கள் தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டனர். தலமை ஆசிரியர் உற்பட பாடசாலையில் பத்து ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் வன்னிப் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதிகம் ஆங்கிலம் பேச மாட்டார்கள். பாடசாலைக்கு ஒரு ஆங்கிலம் படிப்பிக்கும் டீச்சர் உடுவில் இருந்துவருகிறதாகக் கேள்விப்பட்டு, எப்படி அவவோடு தமிழில் பேசிப் பழகுவது என்று தங்களுக்கிடையே கதைத்துக்; கொண்டார்கள்.

தலமை ஆசிரியரின் அறைக்கதவை " உள்ளே வரலாமா சேர்" என்ற நல்ல தமிழ்; உச்சரிப்போடு தட்டினாள் மெலினி.

"தாராளமாய் உள்ளே வரலாம்" என்று பதில் அளித்தார் சிவராசா மாஸ்டர். அவருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். தலை சற்று நரைத்து இருந்தது. அறைக்குள் ஒரு கையில சூட்கேசும் கையும் மறுகையில் கைப்பையுமாக நுலைந்த மெலனியை மேலும்கீழுமாக ஒரு கண்ணோட்டம் விட்டார் சிவராசா. அவர் எதிர்பார்த்த தோற்றம் வேறு. ஆங்கல ஆசிரியை என்ற படியால் பரங்கிப் பெண்ணைப்போல் கவுன் போட்டிருப்பாள் என்று நினைத்த அவருக்கு, இளம் மஞ்சள் நிற கறுப்புக் கரை வைத்த பருத்திச் சேலை அணிந்து, நீண்ட பின்னலோடு ஒரு அசல் தமிழ்

பெண்ணைப் போல் மெலனி தொற்றமளித்தது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''அமருங்கள் டீச்சர்'' என்று தனக்குள் முன் இருந்த கதிரையைக் காட்டினார் சிவராசா.

''நன்றி சேர். இதோ எனக்கு கல்வி இலாக்காவில் இருந்து வந்த நியமனக் கடிதம்'' என்று நியமனக்; கடிதத்தைக் கொடுத்தபடி பணிவோடு சூட்கேசைத் தன்னருகே வைத்தவாறு கதிரையில் மெலனி அமர்ந்தாள்.

''டீச்சர் உங்கள் முழுபெயர் என்ன?'' சிவராசா கேட்டார்.

''செல்வரத்தினம் ஜெயமணி. ஆனால் மெலனி என்று என்னை பெற்றோர்கள் அழைப்பார்கள். எனது தாயரின் அம்மா உடுவில் மகளிர் கல்லூரியில் ஆங்கிலம் படிப்பித்து ரிட்டையரான பூமணி டீச்சர். என்னை நீங்கள் மெலனி என்றே சுருக்கமாகக் கூப்பிடலாம்.''

''மெலனி நீங்கள் நல்லாகப்; பாடக் கூடிய பூமணி டீச்சரின் பேத்தியா? எனக்கு அவவை நான் முல்லைத்தீவில் படிப்பித்த போது தெரியும். அது சரி எப்படி பஸ் பயணம் இருந்தது?. காலை போசனம் சாப்பிட்டீர்களா''? கரிசனையோடு சிவராசா கேட்டார்.

''யாழ்ப்பாணத்திருந்து இங்கு வர சுமார் இரு மணித்தியாலங்கள் எடுத்தது. கிளிநொச்சியில்; சில நேரம்; காலை உணவுக்காக பஸ் நின்றது''

''அப்போ உங்கள் காலை உணவு கிளிநொச்சியிலா?''

''இல்லை சேர். என் அம்மா காலை உணவு செய்து தந்தவ. கடைகளிலை சாப்பிடக் கூடாது என்று சொன்னவ'' என்றாள் மெலனி.

''அது நல்லது. துணக்காயில் நீர் எங்கு தங்கப் போவதாக உத்தேசம்?. உமக்குத் தெரிந்தவர்கள எவராவது இருக்கிறார்களா ''?

''இல்லை சேர். உங்களைத்தான் தங்குவதற்கு உதவி கேட்கயிருக்கிறன்'' பதில் சொன்னாள் மெலனி..

''மெலனி நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும்; மாற்றலாகி நீர் இங்கு வருவதைத் தெரிந்து, நீர் தங்குவதற்கு என் சகோதரி வீட்டில் ஒரு அறை ஒழுங்கு செய்திருக்கிறன். அவவுடைய வீட்டில் நீர் தங்கலாம். அவவி;ன் கணவர் ஒருவருடத்துக்கு முன்பே இறந்துவிட்டார். என் அக்கா ஆசிரியையாக பல வருடங்கள் வேலை செய்தவ. இப்போ ரிட்யைராகிவிட்டா. கிடைக்கும் பென்சனோடு டியூசன் கொடுத்து வரும் வரும்படி அவவுக்குப் போதுமானது. அவவுடைய வீடு இரண்டு அறைகளைக்கொண்டது. பாடசாலையில் இருந்து வீடு வேகு தூரத்தில் இல்லை. அவ வீட்டுக்கு இங்கிருந்து நடந்தே போகலாம். நான் அவவோடு ஏற்கனவே நீர் அங்கு தங்குவதைப் பற்றிப் பேசிவிட்டேன்'' என்றார் சிவராசா.

''அவவுக்குப் பிள்ளைகள் இல்லையா சேர்''?

"இல்லை. என் மூன்று பிள்ளைகளும்; என் குடும்பமும் தான் அவவுக்கு எல்லாம். சொல்ல மறந்திட்டன். உங்கள் உணவை அவவுடைய வீட்டில் வைத்துக் கொள்ளலாம். என்ன சொல்லுகிறீர் மெலனி?"

தலமை ஆசிரியர் தனக்கு முன்கூட்டியே தங்குவதற்கும் தனது உணவுக்கும் தேவையான ஒழுங்குகள் செய்வார் என்று மெலனி எதிர்பார்த்திருக்கவில்லை.

"உங்களிண்டை பெரிய உதவிக்கு மிகவும் நன்றி சேர். எவ்வளவு பணம் நான் மாதம் மாதம் அவவுக்கு கொடுக்கவேண்டும?" மெலினி; கேட்டாள்.

"முதலிலை அவவைச் சந்தியும் மெலினி அதன் பிறகு அவ கேட்கும் தொகையைக் கொடும்;. அக்கா உம்மிடம் அதிக பணம் கேட்க மாட்டா. அவவுக்கும் வீட்டுத்;; துணைக்கும் ஒருபெண்தேவை" என்றார் சிவராசா.

"அவவுடைய பெயரை சொல்ல மறந்திட்டியளே சோ.;"

"அவவை கமலா அக்கா என்றுதான் நான் கூப்பிடுவன். அவவுடைய முழுபெயர் கமலாதேவி. அவவுடைய இறந்த கணவன் பெயர் செல்லத்துரை. கிளிநொச்சியிலை அப்போத்திக்கரியாக இருந்தவர். முதலில் என்னோடு வாரும் மற்றைய டீச்சர்களை அறிமுகப் படுத்துகிறன். இப்பாடசாலையில் என்னைத் தவிர பத்து டீச்சர்கள் இருக்கிறார்கள். அதில் ஆறு பேர் பெண் டீச்சர்கள். அவர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் அவ்வளவுக்குப் பேச வராது.

அவர்களோடு ஆங்கிலத்தில் பேசாதையும். நீர் நல்லாய் தமிழ் பேசுகிறீரே. அது போதும்" சிவராசா மாஸ்டர் சிரித்தபடி சொன்னார். அவரது சிரிப்பிலிருந்து அவருக்குச் மெலனி டீச்சரை வெகுவாக பிடித்துக் கொண்டது என்பதைக்காட்டியது. சிவராசா மாஸ்டர் மெலனியை மற்றைய ஆசியர்களுக்கு அறிமுகப் படுத்த அழைத்துச் சென்றார்.

****

மேலனி ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியையாக கடமையாற்றித் தொட்கிய மூன்று மாதத்துக்குள் வெல்கம் *(Welcome)* எக்ஸ்கியூஸ் மீ *( Excuse me)*, பிளீஸ் *(Please)* தங்கியூ *( Thank You)*. ஐ ஆம் வெரி சொரி *( I am Very sorry)*, டோன்ட் மென்சன் பிளீPஸ் *( Don't mention please)* கான் ஐ ஹெல்ப் யூ பிளீஸ் *(Can I help you please)* போன்ற கண்ணியமான ஆங்கில வார்த்தைகளை மாணவர்களுக்கு பேசக் கற்றுக்கொடுத்தாள்;. மாணவர்களுக்கு ஆங்கிலப்புத்தங்களை வாசிக்கும் ஆவலைத் தூண்டுவதறகாக தன் செலவில் ஆங்கில கொமிக்ஸ் புத்தகங்களை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தினாள். படிப்படியாக மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலப் கதைப்புத்தகங்கள் வாசிக்கவேண்டும் என்ற ஆசை உருவாகியது. தலமை ஆசிரியரோடு கலந்தலோசித்து ஒரு ஆங்கில தமிழ் நூல்களைக் கொண்ட வாசக சாலையை பாடசாலையில் உருவாக்கினாள். வாசிப்பு அறிவுப் பெருக்கத்தின் அத்திவாரம் என்பது மெலனியின் கருத்து. வாசகசாலைக்குப் பொறுப்பாக பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனை நியமித்தாள். உடுவிலில் தன்னிடம்

இருந்த ஆங்கில நூல்களை வாசகசாலைக்கு இனாமாகக் கொடுத்தாள். மறறைய ஆசிரியர்களும் அதற்கு ஆதரவு அளித்தனர்.

ஒரு வருடத்துக்குள் ''எனது கிராமம்'' என்ற தலைப்பில் ஒரு ஆங்கிலக் கடடுரைப் போட்டியொன்றை வைத்தாள். மெலனியின் ஆர்வத்தைக் கண்ட தலமை ஆசிரியர் சிவராசாவும் மற்;றைய ஆசிரியர்களும் முதல் மூன்று பரிசுகளுக்காக நிதி உதவி செய்ய முன்வந்தனர். மாணவர்கள் தமிழ் ஆங்கில டிக்சனெரியை பாவிக்கும் முறையைச்; சொல்லிக் கொடுத்தாள.; ஒருவருடத்துக்குள் மெலனியின் வருகையால் மாணவர்களும் ஆசிரியர்களும் கூச்சமின்றி ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டனர். மாணவர்களின் பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளில் ஏற்பட்ட மாற்றம் அதிசயப்படவைத்தது. நாளடைவில் ஆங்கில டீச்சர் மெலனி என்ற ஜெயமணி இரத்தினத்தின் பெயர் துணுக்காய் கிராமவாசிகளின் மனதில் ஒரு இடத்தைப்பிடித்துக் கொண்டது. மாலை நேரங்களில் வயல் வெளிகளில் மெலனி உலாவி வருவாள். சில மாணவர்கள் வயலில் தந்தைமாரோடு வேலை செய்வதைக் கண்டு பெருமைப்பட்டாள்.

ஆரம்பத்தில் ''மிஸ்ஸியம்மா'' என்று மெலனியை கேலியாக அழைத்த சில மாணவர்கள் மனம் மாறி மரியாதையாக '' மெலனி டீச்சர்'' என்று அன்போடு அழைக்கத் தொடங்கினார்கள். எப்போதும் ஒரு ஆ;ஙகிலப் புத்தகத்தைத் தன் கைபையுக்குள் மெலனி எடுத்துச்செல்வது வழக்கம். நேரம்

கிடைத்த போது அப்புத்தகம் தான் அவளுக்குத் துணை. சிவராசாவின் அக்கா கமலாவுக்கு மெலனியை வெகுவாக பிடித்துக்கொண்டது. தனது ரேடியோவை பாவிப்பதற்கு அனுமதித்தாள். மெலனிக்கு விரும்பிய உணவை சமைத்துக்கொடுத்தாள். நேரம் கிடைத்த போதெல்லாம் கமலாவுக்கு சமையலறையில் மெலனி உதவி செய்தாள். வீட்டை கூட்டிப் பெருக்கினாள். வீட்டுக்குப் பின்னால் இருந்த மரக்கறி தோட்டத்தில் கமலாவுக்கு உதவினாள்

****

ஒரு நாள் கல்வி இலாக்காவில் இருந்து அமைச்சின் செயலாளரும் இன்னும் இரு அதிகாரிகளும் பாடசாலையின் தேவைகளைக் கண்டறிய வரப்போவதாக தலைமை ஆசிரியர் சிவராசா மெலனியை அழைத்துச் சொன்னார்.

"டீச்சர், வரும் அதிகாரிகள் மூவரும் சிங்களவர்கள். அவர்களுக்குத் தமிழ் பேச வராது. சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே பேசத் தெரியும். அதனால் அவர்களோடு உரையாடி எமது பாடசாலையின் தேவைகளை ஆங்கிலத்தில் எடுத்துச்சொல்ல உமது உதவி எனக்குத் தேவை" என்றார் சிவராசா..

"இந்த உதவியை நான் பாடசாலை முன்னேற அவசியம் செய்வேன்" என்று சிவராசாவுக்கு வாக்குறுதி அளித்தாள் மெலனி.

*“மெலனி உமக்கு சிங்களமும் ஓரளவுக்கு விளங்கும். அதுவும் உதவியாக இருக்கும்;”*

*“சிங்களம் அவ்வளவுக்கு பேச மாட்டேன் ஆனால் சொல்வது விளங்கும்” என்றாள் மெலினி*

*கல்வியிலாக்கா அதிகாரிகள் பாடசாலைக்கு வந்தபோது சிவராசா அவர்களுக்கு மெலனியை பாடசாலையில் ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியையென அறிமுகப்படுத்தி வைத்தார். அதிகாரிகள் உரையாடியபோது மெலனியின் அடக்கமான பேச்சும், ஆங்கில உச்சரிப்பும் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது? பாடசாலையின் தரத்தை உயர்த்தி உயர் வகுப்புகள் நடத்தவும்; விஞ்ஞான லப்போரட்டரி ஒன்றை ஸ்தாபிக்கவும் மூன்று கொம்பியூட்டர்களை மாணவர்களுக்கு பாவிப்பதற்கு தேவையெனவும் வேண்டுகோள்களை அதிகாரிகளுக்கு விடுத்தாள்.*

*“கொம்பியூட்டர் பாடசாலைக்குத் தந்தால் அதைப் பாவிகும் முறையைக் காட்டி கொடுக்க ஒரு ஆசிரியர் தேவை. அதற்கு அதிக பணம் செலவாகுமே?” என்றார் வந்திருந்த செயலாளாளர்.*

*“கவலைப்படாதையுங்கோ சேர். நான் பலாலி டிரெயினிங் கொலேஜ்ஜில் படிக்கும் போது கொம்பியூட்டரைப் பாவிப்பது எப்படி என்று பழகிவிட்டேன். அதனால் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கத் நான் தயார். “என்றாள் மெலனி.*

மெலனியின் ஆர்வத்தைக் கண்டு செயலாளர் பெருமைப்பட்டார்.

“என்னால் இயன்றளவுக்கு பாடசாலை முன்னேற நீர்கேட்ட தேவைகளை அமைச்சரோடு பேசி தர முயலுகிறேன்” எனறார் செயலாளர்.

கல்வி அமைச்சு அதிகாரி வாக்குறுதி கொடுத்த படி இரு மாதங்களில் மூன்று கொம்பியூட்டர்கள் பாடசாலைக்கு கிடைத்தையிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் மெலனியின் கெட்டித்தனத்தை மெச்சினர். மாதம் ஒரு முறை சனி ஞாயிறு தினங்களில் உடுவிலுக்குப் போவதைக் மெலனி குறைத்துக் கொண்டாள். மாணவர்களுக்கு கொம்பியூட்டர் பாவிகதும் முறையைக் கற்றுக்கொடுத்தாள். சில ஆசிரியர்களும் மாணவர்களோடு சேர்ந்து கற்றனர். ஒருவருடத்துக்குள் பாடசாலையில் உயர்தர வகுப்புகள் நடக்கும் அளவுக்குத் தரம் உயர்த்தப்பட்டு விஞ்ஞானப் பாடங்களும் உயர் கணிதமும் சொல்லிக் கொடுக்க இரு ஆசிரியாகள் நியமிக்கப்பட்டனர். மெலனியின் துணுக்காய் பாடசாலை சேவை காலத்துக்குள் இருமாணவர்கள் யாழப்பாணம் பல்கலைக்ழகத்தில் பொறியியல் துறைக்கும் விஞ்ஞான துறைக்கும் தெரிவு செய்யப் பட்டனர். ஆனால் அது மெலனிக்கு பூரண திருப்தியைக் கொடுக்கவில்லை. எப்படியும் ஒரு மாணவனாவது மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே அவளது குறிக்கோள். அவள் விரும்பியபடி அவளது துணுக்காய் சேவை காலத’துக்குள் மாணவன் ஒருவன்

கொழும்பு வைத்தியக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டான். தலமை ஆசிரியருக்கோ கட்டுக்கடங்காத சந்தோஷம். தன் அறைக்குள் மெலனியை அழைத்து பாரட்டினார்.

''மெலனி நீர் இவ்வூருக்கு மாற்றலாகி வந்த ஐந்து வருட காலத்துக்குள் இநத பாடசாலைக்குச் நீர் செய்த சாதனைக்ள் பாராட்டுக்குரியது. இனி அதிக மாணவர்கள் அக்கிராமத்தில் இருந்து கல்விமான்களாக வரக்கூடிய சந்தாப்பத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர். இக்கிராம மக்கள் உமது சேவையை ஒரு போதும் மறக்க மாட்டார்கள். ஆனால் இன்னொரு ஒரு செய்தியை உமக்கு சொல்ல விரும்புகிறேன்'' என்றார் கண கலங்க. சிவராசா.

சிவராசா கண் கலங்குவதை மெலனி கவனித்துவிட்டாள்.

''ஏன் சேர் கண் கலங்குகிறீர்கள்''? மெலனி கேட்டாள்.

''மெலனி உமக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு டிரான்ஸ்; பர் ஓடர் வந்திருக்கு. அடுத்தமாதம் முதற் கொண்டு உமக்கு உடுவில் மகளிர் கல்லூரியில்; ஆங்கில ஆசிரியையாக மாறுதல் ஓடர் வந்திருக்கு'' என்றார் பேச்சு தழும்ப. சிவராசா.

''எனக்கு உடுவிலுக்கு டிரான்ஸ்பரா? இந்தப் பாடசாலையையும் மாணவர்களையும் துணுக்காய் கிராமத்தையும் விட்டு நான் எப்படி உடுவிலுக்குப் போக முடியும் சேர்? எனக்கு டிரான்ஸ்பரில் உடுவிலுக்குப் போக விருபமில்லை'' என்றாள் மெலனி.

“மெலனி எனக்குத் தெரியும் நீர் உமக்கும் துணுக்காயுக்கு இடையே ஒரு பலமான உறவை உருவாக்கிவிட்டீர் என்று. ஆனால் நீர் இனி; உமது வருங்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்;டும். சொந்த ஊருக்கு நீர் போனால் உமக்குத் திருமணம்செய்து வைத்து நல்ல குடும்ப வாழக்கையை உமது பெற்றோரும் ; பூமணி டீச்சரும் ஒழுங்கு செய்து கொடுக்கமுடியும். மறுக்காமல் டிரான்ஸ்பர் ஓடரைப் பெற்றுக் கொள்ளும்” என்று சொல்லி ஓடரை மெலனியின் கையில் கொடுத்தார் தலைமை ஆசிரியர் சிவராசா. கண்களில் கண்ணீPர் மல்க கடிதத்தை வாங்கிக் கொண்டள் மெலனி.

****

*கதை 5*

# ருத்திரபுரம் கொலை வழக்கு

*இன்ஸ்பெக்டர் சிவலிங்கத்தை (சிவா) தன் அலுவலகத்திற்கு உடனே வரும்படி யாழ்ப்பாணம் போலீஸ் அத்தியட்சகர் (Superintendent) ஹரி வாட்சன் அவசரமாக அழைத்தார். பறங்கி அதிகாரிகள் இலங்கை போலீசில் வேலை செய்த காலத்தில் ஹரி வாட்சனும் அவர்களில் ஒருவர் . வாட்சன் கண்டிப்பான அதிகாரி. இன்ஸ்பெக்டர் சிவா எந்தவொரு கடினமான கொலை வழக்கையும் கையாளக் கூடியவர் என்று ஹரி நம்பியதால் அவருக்கு இன்ஸ்பெக்டர் சிவா மேல் நல்ல மரியாதையும் நம்பிக்கையும் இருந்தது. தொழிலதிபர் தங்கராஜா மற்றும் அவரது மகன் ஜெயராஜா கொலை வழக்கில் கொலையாளிகளைக் கண்டுபிடித்த கெட்டித்தனம் இன்ஸ்பெக்டர் சிவாவுடையது .*

*அளவெட்டி கிராமத்தில் சாதி சம்பந்தப்பட்ட பிரச்சனையில் ஒரு சாரயக் கடை உரிமையாளர் மார்கண்டும் மற்றும் அவருடைய ஒரே மகள் வனிதாவும் படுகொலை செய்யப்பட்ட வழக்கை இன்ஸ்பெக்டர் சிவா கையாண்டு வெற்றியும் கண்டவர்..*

*சில நேரங்களில் கொழும்பில் உள்ள பொலீஸ் தலைமையகம் கடினமான கொலை வழக்குகளைத் தீர்ப்பதில் சிவாவின் உதவியை நாடியதுண்டு. இங்கிலாந்தில் உள்ள ஸ்காட்லாந்தில்*

யார்ட் (Scotland Yard) பொலீஸில் ஆறு மாதங்கள்வரை சிவா பயிற்சிபெற்றிருந்தார். மேலும் அவருக்கு நகைச்சுவையுணர்வு உண்டு. விசாரனையின் பொது பகிடி விட்டு விசாரிப்பார். அவர் மனதில் என்ன இருக்கிறது என்று விசாரணைக்கு உற்பட்டவர் அறிவது கடினம்

****

இன்ஸ்பெக்டர் சிவா யாழ்ப்பாண போலீஸ் சுப்ரீண்டேண்டன் (Superintendent) ஹரி வாட்சனின் ஆபீஸ் அறைக்கதவைத் தட்டினார்.

'' ப்லீஸ் கம் இன் (Please come in) ''. ஹரி இடம் இருந்து அழைப்பு வந்தது.

மரியாதையோடு சிவா அறைக்குள் நுழைந்தார். ஹரி வாட்சன் பெயர், அவர்.பெற்ற பட்டம், பதவி, ஆகியவற்றைப் பதிவு செய்த ஒரு பெயர்ப் பலகை அவர் மேசையில் இருந்தது . ஹரி ஒரு பறங்கியன் என்பதால் , அவருக்குக் கீழ் வேலை செய்தவர்கள் மத்தியில் அவருக்குச் சிறப்பு மரியாதை இருந்தது.

" சிவா, அமரும். ஒரு முக்கிய கேஸ் விசயமாக உம்மை எதிர் பார்த்துக் கொண்டு இருந்தனான். இது ஒரு சிக்கலானக் கொலை வழக்கு. நீர் திறமையான பயிற்ச்சி பெற்ற துப்பறியும் அதிகாரி என்று நான். அறிவேன். இந்த பைலில் (File) கேஸ் பற்றிய முழு விபரம் இருக்கிறது'' பைலை சிவாவிடம் கொடுத்தபடி ஹரி சொன்னார்.

"சேர். தயவுசெய்து வழக்கைப் பற்றி சுருக்கமாக சொல்லுங்கள். கொலை பின்னணியை அறிவதற்கும், கொலைகாரர்களை தெளிவான ஆதாரங்களுடன் அடையாளம் காட்டுவதற்கும் முழு நம்பிக்கையுடன் நான் விசாரணையை மேற்கொள்வேன். எனக்கு கான்ஸ்டபிள் பொன்னையா அவர்களை உதவியாளராக தாருங்கள். இரண்டு கேஸ்களில் என்னோடு வேலை செய்து குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க அவர் உதவி இருக்கிறார்.

’’ அது பிரச்சனை இல்லை. விரைவில் கொலையாளிகளைக் கண்டு பிடியும். உயர் அதிகாரிகள் இந்தக் கேஸ்சில் அதிக அக்கறை காட்டுகிறார்கள்’’ என,: ஹரி சொன்னார்

‘‘ஊர் வாசிகள் என்னோடு விசாரணையின் போது உதவுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு சேர்’’

"எனக்கு அது தெரியும், இந்தக் கேஸ் அந்த ஊருக்கு அவமானத்தை கொண்டு வந்துவிட்டது. அதனால் தான் நான் உம்மை அழைத்தேன். கிளிநொச்சியில் இருந்து பூனகரிக்குப் போகும் பாதையில் மூன்று மைல் தூரத்தில் உள்ள ஊர் ருத்திரபுரம் அக் கிராமத்தில் நடந்த இந்த கொலை வழக்குத் தொடர்பாக ஒரு உயர் ஜாதிப் பெண்ணை ஊர் வாசிகள் சந்தேகப்படுகின்றனர். கொலை செய்யப்பட்டவர் 48 வயதுடைய கணேஷ சர்மா ஐயர் என்பவர் . ருத்திரபுரம் பிள்ளையார் கோவிலின் பிரதம அர்ச்சகரும் உரிமையாளரும் ஆவர் அவரை சில நாட்களாக காணவில்லை என்று அவரின் மனைவி மோகனாம்பாள் கிளிநொச்சி போலீசில்

முறையிட்டுள்ளார். தன் கணவன் சொந்த ஊரான நெடுந்தீவுக்கு அவரின் தந்தை சிவசர்மாவைச் சந்திக்கப் போனவர் திரும்பி வரவில்லை என்று கிளிநொச்சி பொலீசுக்கு மோகனாம்பாள் முறையிட்டு உள்ளார் கணேஷ சர்மாவின் தந்தை சிவசர்மா தன் மகனைக் காணவில்லை என்று பொலீசுக்குச் சொல்லிக் கவலை பட்டு முறையிட்டுள்ளார் அவருக்கு ஒரே ஒரு மகன் மட்டுமே கணேஷ ஐயர், . அது சரி சிவா, ருத்திரபுரம் எங்கே இருக்கிறது என்று உமக்குத் தெரியுமா “? ஹரி கேட்டார் .

"தெரியும் சேர். கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ளது இந்த கிராமம் . இது முக்கியமாக காடுகளாலும் வயல்களாலும் சூழப்பட்ட கிராமம் . அந்த கிராமத்தில் சக்தி வாய்ந்த ஒரு பிள்ளையார் கோவில் உள்ளது. அந்த பிள்ளையார் யானைகள் கிராமத்தைத் தாக்காமல் மக்களை பாதுகாத்து வருகிறார் நான் அந்த பிள்ளையார் கோவிலுக்கு ஒரு முறை போய் வந்திருக்கிறேன் . அக் கிராம மக்களுக்கு அக்கோவிலின் விசேஷ சக்தி பற்றித் தெரியும்".

சிவாவிடம் ருத்திரபுரம் பற்றிய விபரம் சொன்ன போது ஹரி புன்னகைத்தார் . " நீர் சரியான முறையில் வழக்கை அணுகுறீர் என்று நான் நினைக்கிறேன். உங்கள் உதவியாளர் கொன்ஸ்டபிள் பொன்னையாவோடு பைலை படிக்கவும். வழக்கின் உள்ளடக்கங்கள் மிகவும் ரகசியமாக வைக்கப்பட வேண்டும். கணேஷ் ஐயரின் மறைவு தொடர்புள்ள சந்தேக நபர்களை நீங்கள் விசாரிக்க வேண்டும். . அவர்கள் மூலம் வழக்கின் சில உண்மைகள் தெரிய வரும். முதலில் முக்கியமாக .மறைந்த

கணேஷ ஐயர் இறந்து இருந்தால் அவர் உடலைக் கண்டு பிடித்து பிரேத பரிசோதனை நடத்த வேண்டும். அப்போதுதான் அவரின் மறைவுக்கு காரணமும், அவர் கொலை செய்யப் பட்ட விதமும் தெரிய வரும்.

"சேர், நான் முன்பு கையாண்ட, ஜாதி பிரச்சினை சம்பந்தப்பட்ட வழக்கின். தீர்ப்பு இறுதியாக குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையில் முடிந்தது. ஒரு கிராமத்தில் இந்த கொலை நடந்தது என்றால், அது பல மக்கள் விசாரணை செய்யப்பட வேண்டும். ருத்திராபுரம் கிராமவாசிகள் பல்வேறு விளக்கங்கள் தருவார்கள். வழக்கை திசை திருப்ப முயற்சிப்பார்கள் . பலர் வதந்திகளில் வாழ்கின்றனர். அவர்கள் தாங்கள் போலீஸாரால் விசாரணை செய்யப்படுகிறார்கள் என்பதை அறிந்தால் உண்மைச் சொல்லப் பயப்படுவார்கள்''.

". அந்த கிராம சபையின் சேர்மன் சுந்தரத்தையும், கிராம அபிவிருத்தி அதிகாரி ராஜனையும், பள்ளிகூட தலைமை ஆசிரியர் சிவராசனையும், நான் ஏற்கனவே கூப்பிட்டு விசாரித்ததில் கிராமவாசிகளின் மனநிலையைப் பற்றி அவர்கள் என்னிடம் கூறினார்கள். கிராமத்துக்கு இந்த கொலை அவமானத்தை கொண்டு வந்து விட்டதாம். நீர் வழக்கை நன்கு படிக்கவும். இந்தக் கொலை, கிளிநொச்சி பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் நடந்த முதல் கொலை கேஸ் . உமது புலன் விசாரனை வெற்றியாக அமைய வாழ்த்துகிறேன். ", ஹரி சிவாவுக்கு கைகுலுக்கி வழியனுப்பினார்

****

கேஸ் பைலை சிவா முழுமையாக படித்து முடித்தபின் அதிர்ச்சியடைந்தார். கணேஷ் சர்மா .திட்டமிட்டு அவருக்கு தெரிந்தவர்களால் கொலை செய்யப்பட்டு, அவரின் உடல் போலீஸ் கண்டு பிடிக்க முடியாதவாறு காட்டுக்குள் மறைக்கப் பட்டிருக்கக் கூடும். அப்படி நடந்திருந்தால் இவ்வளவு நாட்களில் மிருகங்களும் பறவைகளும் அவரின் உடலை ருசி பார்த்து இருக்கும். அதனால் துர்மணம் வந்திருக்கலாம். அந்தப் பெரிய காட்டில் உடலை எப்படி தேடுவது.? ஒரு வேளை உடலை புதைத்து இருந்தால் புதைத்த இடத்தை தேடிக் கண்டு பிடிப்பது கடினம். பக்கத்தில் முதலைகள் உள்ள குளத்திலும் உடலை போட்டிருக்கலாம் . கணேஷ் சர்மாவின் உடலை மறைக்க கொலை செய்தவர்கள், பல வழிகளைக் கையாண்டு இருக்கலாம் என்று இன்ஸ்பெக்டர் சிவாவும் கான்ஸ்டபிள் பொன்னையாவும் தங்களுக்கு பேசிக் கொண்டார்கள் .

“சேர் ஒரு வேளை குருக்களை யாராவது பணத்துக்கு கடத்திச் சென்று இருப்பார்களோ”? பொன்னையா தன் சந்தேகத்தை வெளியிட்டார்.

“இருக்காது பொன்னையா, அப்படி இருந்தால் இந்த சில நாட்களுக்குள் பிணையப் பணம் கேட்டு யாராவது செய்தி அனுப்பி இருப்பார்கள்” என்றார் சிவா.

இன்ஸ்பெக்டர் சிவா ஒரு திறமையான துப்பறியும் ஆய்வாளராக இருந்தார். ஸ்ரீலங்கா குற்றவியல் சட்டத்தின் நுணுக்கங்களை தனது விரல் நுனியில் அவர் அறிந்திருந்தார் .

சிவா பொன்னையாவோடு கடவுளின் ஆசீர்வாதம் பெற ருத்திரபுரம் பிள்ளையார் கோவிலுக்கு போனார். அந்த கோவில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அதிசயங்கள் பல செய்த கோவிலாக விளங்கியது. யானைகள் கிராமத்தில் நுழைந்து விவசாயத்தை அழிப்பதினால் . கணபதிக்கு கோவில் அமைத்து அவ்வூர் மக்கள் பொங்கி, வணங்கி. வந்தார்கள் வைகாசி மாதத்தில் சில நாட்கள் திருவிழாவும் நடக்கும்.

இன்ஸ்பெக்டர் சிவாவும், கான்ஸ்டபிள் பொன்னையாவும் ஆலய வளாகத்தில் கொலை நடந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டதால் கோயிலுக்குள் விசாரணை நடத்தினார்கள்.

கணேஷ் சர்மாவின் உடலைத் தேடி மரங்கள், மற்றும் புதர்களால் சூழப்பட்ட காட்டு வயல் பகுதியான கோவில் காணியில் பொன்னையாவுடன் சிவா தேடினர். அவர்கள் இருவரோடு சேர்ந்து கோவில் வளவைப் பராமரிக்கும் வேலாயுதமும், அவனின் உதவியாளன் செல்லப்பாவும். கிராமத் தலைவர் சுந்தரமும்,. கிராம அபிவிருத்தி அதிகாரி ராஜனும்., பாடசாலை தலைமை ஆசிரியர் சிவராசன் ஆகியோரும் . இன்னும் சில ஊர் வாசிகளும் தேடுதல் நடத்தினார்கள் . .

****

முதலில் கணேஷ் சர்மாவின் மனைவி மோகனாம்பாளிடம் சிவா குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார் ஆரம்பிக்க முன் மோகனாம்பாளை மேலும் கீழுமாக ஒரு நிமிடம் கண்ணோடம்

விட்டார். ஐயர் அம்மாவின் அழகு அவரைப் பிரமிக்க வைத்தது நான்கு பிள்ளைகளுக்கு தாய் என்று மோகனாம்பாள் அம்மாவை பார்த்ததும் அவரால் நம்ப முடியவில்லை. ஐயர் அம்மாவுக்கு துரு துருத்த கண்கள். சிவப்பு மூக்குத்தி போட்டிருந்தாள். கழுத்தில் தாலியும் ஒரு சங்கிலியும், காது இரண்டிலும் சிவப்புக் கற்கள் பதித்த தோடுகள். . கையில் ஒரு சோடி தங்க வளையல். .நெற்றியில் .குங்குமப் பொட்டு.. அழகிய உதடுகள்,. சந்தன நிற உடல்.. ஒரு நிமிடம் இன்ஸ்பெக்டர் சிவா மோகனாம்பாளின் அழகில் தன்னை மெய்மறந்து நின்றார் .

பக்கத்தில் இருந்து குறிப்பு எடுத்த பொன்னையா "சேர் விசாரணையை ஆரம்பிப்போமா" என்று சொன்ன போது சிவா சுய நிலைக்கு வந்தார்

"உங்கள் பெயர் தானே மோகனாம்பாள் கணேஷ சர்மா"

"ஓம் சேர்:

"நீங்கள் தானே கிளிநொச்சி போலீசில் உங்கள் கணவர் கணேஷ சர்மாவை சில நாட்களாகக் காணவில்லை என்று முறையிட்டீர்கள்"?

"ஓம் சேர் "

"உங்களுக்கு எத்தனை வயசு"?

" எனக்கு இப்ப வயசு இருபத்தி எட்டு"

": எப்போ அம்மா உங்களுக்கு திருமணம் நடந்தது"?

*“பத்து  வருஷங்களுக்கு முன் இராமேஸ்வரத்தில்”*

*“அப்ப பதினெட்டு வயதில் உங்களுக்கு திருமணம் நடந்தது என நினைக்கிறேன் அப்படித்தானே”?*

*“ஓம் சேர் “*

*“நீங்கள் பிறந்தது இராமேஸ்வரத்திலா “?*

*“ஓம் சேர் “*

*“அதெப்படி நெடுந்தீவில் பிறந்த உங்கள் கணவர் கணேஷ சர்மா இராமேஸ்வரத்தில் உங்களைத் திருமணம் செய்தார்”?*

*“அவரின் இனத்தவர் ஒருவரின் திருமணத்துக்கு அவர் இராமேஸ்வரம வந்திருந்த போது என்னைக் கண்டு. விரும்பி என் பெற்றோரிடம் என்னைத் திருமணம் செய்யக் கேட்டார். அவர்களும் சம்மதித்து என்னை அவருக்கு திருமணம் செய்து வைத்தனர். அதன் பின் நான் அவரோடு நெடுந்தீவு வந்து, அங்கு இரு வருடங்கள் வாழந்து, அதன் பிறகு இங்கு ருத்திரபுரம் பிள்ளையார் கோவிலுக்கு அவரோடு  வந்திட்டன்”*

*“உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?*

*“எனக்கு நாலு பிள்ளைகள் மூத்தவள் என் மகள் பரமேஸ்வரி அவளுக்கு. ஒன்பது வயது: மற்ற மூன்றும் ஆண் பிள்ளைகள்”.*

*“உங்கள் கணவர் காணமல் போகும் பொது அவருக்கு என்ன வயசு இருக்கும்”?*

*“நாற்பத்தி எட்டு”*

*" உங்கள் தாம்பத்திய வாழ்க்கை எப்படி இருந்தது"?*

*:" மகிழ்ச்சியாக இருந்தது சேர். நான் கேட்டதை அவர் வாங்கிக் கொடுத்தார். இதோ இந்த நகைகள் எல்லாம் அவர் எனக்கு வாங்கிக் கொடுத்தவை "*

*" உங்கள் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏதும் இருக்கவில்லையா"?*

*"இல்லை சேர் "*

*"அவர் குடித்துப் போட்டு வந்து உங்களை அடித்தது உண்டா"?*

*"அவர் பிராமணர், அதனால் அவர் குடிப்பதிலை சேர்:"*

*"உண்மைதான் சொல்லுகிறீர்களா"?*

*"உண்மை தான் சொல்லுறன் சேர். ஒரு வேலை எனக்குத் தெரியாமல் அவர் குடித்திருக்கலாம் " :*

*"கோவில் வளவுக்குள் உள்ள உங்கள் வீட்டில் எத்தனை அறைகள் உண்டு*

*"இரண்டு அறைகள். ஒரு ஹால். ஒரு சமையல் அறை. ஒரு ஸ்டோர் அறை. இரண்டு வாசல்கள் "*

*"நீங்கள் எப்படி குடும்பத்தில் அறைகளைப் பங்கு போடுவீர்கள்"*

*" நானும் கணவரும் ஒரு அறையைப் பாவிப்போம் பிள்ளைகள் இரண்டாம் அறையைப் பாவிப்பார்கள்":*

“அவர் காணமல் போனது எப்படி என்று சொல்ல முடியுமா”?

“: சென்ற வெள்ளிக்கிழமை பூசை முடித்து சனிக்கிழமை காலை தன் தந்தையை காணி விசயமாக் சந்தித்துப் பேச நெடுதீவுக்குப்போய் திங்களுக்கு முன் வருவாதக சொல்லிப் போனவர், திரும்பிவரவில்லை. நான் செவ்வாய்கிழமை என் மகளோடு போய் கிளிநொச்சி போலீசில் முறையிட்டேன்”

“போலீசில் முறையிட முன் உங்கள் கணவரின் தந்தைக்கு போன் செய்து அங்கு உங்கள் கணவர் வந்தாரா என்று நீங்கள் விசாரிதீர்களா”?

“ஓம் விசாரித்தேன் சேர். ஒரு வேளை பணத்தோடு ஊருக்கு போன அவரை யாராவது கடத்தி இருக்கலாம் எண்ட பயத்தில் . போலீசில் முறையிட்டேன்.”.

“உங்கள் கோவில் வளவையும் கோவிலையும் துப்பரவு செய்வது, மரக்கரித் தோட்டத்தையும் பசு மாடுகளையும் கவனிப்பது. . கோவில் பிரசாதம் செய்வது யார் “?

“அந்த வேலைகளுக்கு என் கணவர் இரண்டு பேரை வேலைக்கு அமர்த்தி இருந்தார்”

“அவர்களின் பெயர்களை சொல்ல முடியுமா”?

“அவர்களில் ஒருவர் வேலாயுதம் மற்றவர் செல்லப்பா. அந்த இருவரில் பொறுப்பானவர் வேலாயுதம் “:

“எவ்வளவு காலம் வேலை செய்கிறார்கள்”? சிவா கேட்டார்

''எனக்குத் தெரிந்த மட்டில் நான் ருத்திரபுரம் வந்த காலத்தில் இருந்து வேலை செய்கிறார்கள். முதலில் தனியாக வேலாயுதம் வேலை செய்து, இரண்டு வருடங்களுக்கு பின்னர் தன் உறவினன் செல்லப்பாவை உதவிக்கு வைத்து கொண்டார்''

''நான் உங்கள் வீட்டை பார்க்கலாமா''

''நிட்சயமாக சேர்''

சிவாவையும். பொன்னையாவையும் மோகானம்பாள் அழைத்து சென்று கோவில் வளவுக்குள் உள்ள தன் வீட்டைக் காட்டினாள். கணேஷ் சர்மாவின் திருமணப் படம் சுவரில் இருந்தது. அதில் தொற்றறமளித்த மோகானம்பாள் பதினெட்டு வயதில் எவ்வளவு அழகி என்பது தெளிவாக சிவாவுக்கு தெரிந்தது. அவளின் அழகில் மயங்கி வயது வித்தியசம் பாராமல் கணேஷ் சர்மா அவளைத் திருமணம் செய்தார் என்று அவருக்கு தெரிய வெகு நேரம் எடுக்கவில்லை.

வீட்டுக்கு வெளியே வந்ததும் இரகசிமாக ''சார் அழகு இருக்கும் இடத்தில ஆபத்தும் இருக்கும்.'' என்றார் பொன்னையா

'' இருக்கலாம். ஒருவரின் தோற்றத்தைக் கண்டு நாம் முடிவு எடுக்கக் கூடாது பொன்னையா. மேலும் விசாரணைகளைத் தொடர்ந்து மர்மத்தைக் கண்டு பிடிப்போம்'' என்றார் சிவா

****

அடுத்து சிவா குறுக்கு விசாரணை செய்தது வேலாயுதம், செல்லப்பா,. சுந்தரம் , கிராம அபிவிருத்தி அதிகாரி ராஜன் ஊர்

பாடசாலை   தலமை ஆசரியர் சிவரராசன் மற்றும் கள்ளுக் கொட்டில் வைத்திருந்த பொன்னுத்துரை. இறுதியாக கணேஷ் சர்மாவின் தந்தை சிவசர்மா. விசாரணையில் இருந்து கணேஷ் சர்மாவுக்கு குடிப்பழக்கம் இருந்ததையும் அவர் வேலாயுதம் செல்லப்பா  ஆகிய இருவரோடு சேர்ந்து குடித்ததைக் தான் கண்டதாக பொன்னுத்துரை சொன்னான். கணேஷ் சர்மாவின் மகள் பரமேஸ்வரி தன் பாடசாலலையில் படிக்கும்  படு சூடியான பெண் என்று சிவராசன் சொன்னார். அவள் ஒரு நாள் தன் ஆபிசுக்குள் வந்து   தந்தை இல்லாத நேரம் தாயின் வேலாயுதத்தொடு உள்ள கள்ள உறவை பற்றியும், இரவில் தந்தை படுக்கைக்குப் போன பின் அடி வளவில் உள்ள கொட்டிலடியில் அவர்கள் இருவரும் சந்தித்து பேசியதைத் தான் கண்டதாகவும் எனக்குக கூறினாள் .  தன் தந்தை கோவில் விசயமாக யாழ்ப்பாணம் போயிருக்கும்  நேரம் பார்த்து வேலாயுதம் தன் வீட்டுக்கு வந்து பின் கதவை தட்டி உள்ளே வந்து தன் தாயின் அறைக்குள் போய் கதவை மூடிய  பின் இருவரும் வெகு நேரம் சிரித்துப் பேசியதைக் கேட்டதாக தனக்கு   சொன்னதாக சிவராசன் மேலும்  சிவாவுக்கு சொன்னார்.. மோகனாம்பாளுக்கும் வேலாயுதத்துக்கும் கள்ளக் காதல் உறவு இருந்தாக ஊர் வாசிகள் பேசியதாக சுந்தரமும், ராஜனும் சொன்னார்கள் கணேஷ் சர்மாவும் . வேலாயுதமும் செல்லப்பாவும் சில நேரம் ஒன்றக அடிவளவுக்குள் இருந்த குடிசைக்குள்  இருந்து குடிப்பதைப்  பலர் கண்டதாக சொன்னார்கள். அதை பொன்னுத்துரையும் உறுதி செய்தார்

****

வேலாயுதத்தை இன்ஸ்பெக்ட்ர் சிவா அடி வளவுக்குள் இருந்த குடிசைக்கு அழைத்து சென்று விசாரித்தார். அக்குடிசைக்கு ஐம்பது யார் தூரத்தில் காட்டின் ஓரமாக . குப்பை, மாட்டுச் சாணம் குவிக்கப்பட்டிருந்தது

"உன் பெயர் தானே வேலாயுதம்"?

"ஓம் சார்."

"உனக்கு எத்தனை வயசு "?

:" முப்பத்திரண்டு சேர்"

"சுமார் ஆறடி உயரம் உள்ள உன் உடலை இவ்வளவு கட்டுமஸ்தான தேகமாக வைத்திருக்கிறாயே அது ஏப்படி முடிகிறது"?

"தினமும் தேகப்பியாசம் செய்வேன். ஒரு மைல் தினமும் ஓடுவேன் சேர்"

"உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா"?

" ஓம் சேர். எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு" .

" உன் வீடு எங்கே இருக்கு"?

"கிளிநோச்சியில். தினமும் என் சொந்தக்காரன் செல்லப்பாவுடன் இங்கு வந்து வேலை செய்து போட்டு அவனோடு வீட்டுக்கு போய்விடுவேன்"

"உன்னையும் செல்லப்பாவையும் கணேஷ் சர்மாவின் குடும்பம் எப்படி நடத்தியது"?

*“எங்களை மரியாதையாக நடத்தினார்கள் சில சமயம் அவரின் மனைவி சமைத்த சாப்பாடு எங்கள் இருவருக்கும் தருவார்கள். அந்த ஐயர் அம்மா எங்கள் இருவரினதும் சகோதரி போல்”.*

*“விசாரித்ததில் உனக்கும் அந்த ஐயர் அம்மாவுக்கும் ஒரு உறவு இருந்ததாக சொன்னார்கள், அது உண்மையா”?’*

*“ஐயோ இல்லவே இல்லை சேர். அது பொய் . நான் பிள்ளை குட்டிக்காரன் எனக்கு என்று ஒரு குடும்பம் உண்டு. எனக்கு கிடைக்கும் ஊதியம் போதுமானது திருவிழா காலத்தில் கூடுதலாக ஊதியம் கிடைக்கும்”*

*“எப்போவாவது நீ கணேஷ் சர்மாவின் வீட்டுக்குப் போய் இருக்கிறாயா”?*

*“அந்த வீட்டில் வேலை ஏதும் இருந்தால் போய் செய்து கொடுப்பேன். சுவருக்கு வெள்ளை அடிக்கவும் வீட்டை சுத்தம் செய்யவும் சில நாட்கள் நானும் செல்லப்பாவும் போய் இருக்கிறோம்.”:*

*:” நீ உண்மைதான் சொல்லுறியா.? கணேஷ் சர்மா காணமல் போன தினத்துக்கு முன் எப்போ அந்த வீட்டுக்குப் போயிருக்கிறாய் “?.’*

*“ஒரு மாதத்தில் வரப் போகும் கோவில் திருவிழா பற்றி ஐயரோடு பேசப் போயிருந்தேன்:*

*''கணேஷ் சர்மா காணமல் போனதை ஐயர் அம்மா பொலீசுக்கு போய் முறையிட்டபோது நீயும் கூடவே அவ்வொடு போய் இருந்தாயா''?*

*''ஓம் சேர். துணைக்கு ஐயர் அம்மாவோடும் அவவின் மூத்த மகளோடும் போனேன். வீட்டையும் ஐயர் அம்மாவின் பிள்ளைகளையும் கவனிக்கும படி செல்லப்பாவுக்கு சொல்லிவிட்டு போனேன்''.*

*''நீ இனி போகலாம். இந்த ஊரை விட்டு எனக்கு சொல்லாமல் நீ எங்கயும் போக கூடாது. தேவையானால் உன் வீட்டுக்கு மட்டும் போய் வரலாம். திரும்பவும் விசாரணைக்குத் தேவைப் பட்டால் நான் உன்னை அழைத்து விசாரிக்கிறேன்''*

*''சரி சேர்''*

****

*இன்ஸ்பெக்டர் சிவாவும் பொன்னையாவும் நெடுந்தீவுக்கு பயணம் செய்து சிவசர்மாவை சந்தித்த போது அவர் அவர்களை கண்டதும் அழத் தொடங்கினார் மகனின் மறைவுக்குப் பின் அவர் சரியாக உணவு உண்பதில்லை என்று அவரின் மனவி ராஜம்மாள் சொல்லிக் கவலைப்பட்டாள்*

*''வணக்கம் ஐயா. உங்கள் அன்பு மகனைப் பிரிந்த சோகம் உங்களை வாட்டுகிறது போல எனக்குத் தெரிகிறது. அவரின் உடலை இன்னும் நாங்கள் கண்டு பிடிக்கவில்லை எப்படியும் கண்டு பிடித்து விடுவோம் கவலை வேண்டாம்'' என்றார் சிவா.*

“சேர் நான் ஒரு கனவு கண்டேன். என் குல தெய்வம் கணபதி வழிகாட்டி விட்டான் “ சிவசர்மா சொன்னார்

“என்ன கனவு ஐயா”?

“உன் மகனை எங்கும் தேடாமல் போய் குப்பையிலை தேடு அவன் அங்கு துயுலுகிறான் என்றது கனவில் என் தெய்வம்”

சிவாவும் பொன்னையாவும் அவர் சொன்ன கனவைக் கேட்டு அதிசயப் பட்டனர்.

“உங்கள் கனவில் உண்மை இருகிறதா என்று பார்ப்போம் உண்மையாக இருந்தால் இன்னும் சில நாட்களில் உங்கள் மகனின் உடலையும் கொலை செய்தவர்களை கண்டு பிடித்து விடுவோம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் . ஐயா. நீங்கள் கணபதி மேல் வைத்த நம்பிக்கை வீண் போகாது” என்று அவருக்கு ஆறுதல் சொல்லி இருவரும் அவரிடம் இருந்து விடை பெற்றனர்

****

ருத்திரபுரம் திரும்பி வந்த உடனே சிவாவும் பொன்னையாவும் சுந்தரம், ராஜன், சிவராசன் சில ஊர்வசிகள் உதவியோடு கோவில் வளவில் இருந்த குப்பைமேட்டை சில அடிகள் தோண்டிய போது கணேஷ் சர்மாவின் சிதைந்த உடலையும் . இரத்தக் கறை உள்ள அவரின் வேஷ்டியும், இரத்தக் கரையோடு ஒரு கொடுவாக் கத்தியையும் கண்டு எடுத்தனர் . பிரரேதத்தின் உடல் அழுகிய நிலையில் இருந்தது. உடனே சிவா பிரேத பரிசொதனைக்கு ஒழுங்கு செய்தார். இரு நாட்களில் பிரேத

பரிசோதனை நடந்து .இறந்தவரின் கழுத்து வெட்டப் பட்டு கொலை செய்யப் பட்டார், அதோடு இறந்தவரின் உடலில் மது அருந்திய அறிகுறிகள் இருந்தது என்று பிரேத பரிசோதனை அறிக்கையை டாக்டர் சமர்பித்தார்.

தாமதியாமல் உடனே மோகனாம்பாள். வேலாயுதம் செல்லப்பா ஆகிய மூவரையும் சிவா கைது செய்து ரிமாண்டில் வைத்தார் மேலும் விசாரணையின் போது .

தானும் செல்லப்பாவும் கணேஷ் சர்மாவுக்கு வெள்ளி இரவு குடிக்க மது கொடுத்து அவர் மயக்கத்தில் தூங்கும் போது மோகனாம்பாளின் உதவியோடு வீட்டின் பின் கதவால் இருவரும் வீட்டுக்குள் புகுந்து, மது போதையில் தூங்கிக் கொண்டிருந்த கணேஷ் சர்மாவின் வாயை மோகனாம்பாள் துணியால் பொத்த . செல்லப்பா அவரின் கால்களைப் பிடிக்கத் தான் அவரின் கழுத்தையும் உடலின் சில இடங்களை வளவு சுத்தப் படுத்தும் கொடுவாக் கத்தியால் வேடியதாக வேலாயுதம் குற்றத்தை ஒப்புக் கொண்டான். தானும் செல்லப்பாவும் வெட்டிய உடலை ஒரு சாக்குக்குள் போட்டு, கட்டி., நள்ளிரவில் இருவரும் சுமந்து கொண்டு அடி வளவில் உள்ள குப்பை மேட்டில் புதைத்து மேலே குப்பைகளையும் மாட்டு சாணத்தை போட்டதாக தம் குற்றத்தை ஒப்புக் இருவரும் கொண்டார்கள். வேலாயுதத்தின் மேல் உள்ள தன் கள்ள உறவு தன் கணவனுக்குத் தெரிய வந்து அதனால் குடும்ப வாழ்கைக்கு இடையூராக இருந்ததால் அவரை தானும் வேலாயுதமும் செல்லப்பாவின் உதவியோடு கொலை செய்ய முடிவேடுத்ததாகவும் அவர்கள்

இருவருக்கும் கோவில் உண்டியலிலும் பாதுகாப்பு பெட்டியிலும் இருந்த பணமும் நகையும் அவர்களுக்கு தான் கொடுத்ததாகவும், அவர்கள் இருவரையும் இந்தியாவுக்கு உடனே தோணியில் போக ஒழுங்கு செய்ததாக மோகனாம்பாள் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டாள் .அதோடு தன் கணவன் தன்னை தாம்பத்திய உறவின் போது திருப்தி படுத்தாதலால். தோற்றமுள்ள இளம் வயது வேலாயுதத்தை தான் நாடி சென்றதன் காரணத்தை விளக்கினாள். கணவருக்கு தன் கள்ளக் காதல் தெரிந்த பின் அவர் தன்னை அடித்து துன்பறுத்தியதாகவும்.. அதனால் அவரை கொலை செய்ய தான் வேலாயுதத்திதொடு சேர்ந்து முடிவு எடுத்ததாக மோகனாம்பாள் சொன்னாள். தன் செயலால் தன் பிள்ளைகளுக்கு இழிப் பெயர் வந்துவிடும் என்பதை உணர்ந்து , பிள்ளையாரிட்ம் மன்னிப்புக் கேட்டதாக இன்ஸ்பெக்டர் சிவாவுக்கு மோகனாம்பாள் சொன்னாள்

காலதாமதமின்றி மூவருக்கும் எதிராக யாழ்பாணத்து நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடந்தது ஒரு பிரபல அரசியல்வாதியான பிரபல வழக்கறிஞர் ஒருவர் மோகனாம்பாளுக்கு ஆஜரானர் ஆனால் மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தீர்ப்பு கொடுக்கப்பட்ட தினம் சுமார் 6000 மக்கள் நீதிமன்ற வளாகத்தில் குழுமி இருந்தனர் . மூவரினது அப்பீல் மனுவை உச்ச நீதிமன்றம் மறு ஆய்வு செய்து அவர்களின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது

*சுப்பீரின்டெண்டன் ஹரி வாட்சன் இன்ஸ்பெக்டர் சிவாவுக்கும். பொன்னையாவுக்கும் பதவி உயர்வுக்கு சிபார்சு செய்து மேல் இடத்துக்கு அறிக்கை அனுப்பினார்.*

***(யாவும் உண்மையும் புனைவும் கலந்தது)***

****

## கதை 6

## தபால்காரன் தங்கராசு

ஒல்லாந்தர் ஆட்சியின் போது 1798 ஆம் ஆண்டு தபால் சேவை இலங்கையில் அறிமுகப் படுத்தப்ட்டு, பிரித்தானியர் 1815 இல் முழு இலங்கையையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுந்த போது பல நகரங்களில் தபால் சேவையை விஸ்தரீத்தனர். கிராமங்களில் உப தபால் நிலையங்களும், ரயில்மூலம் யாழ்ப்பாணம், மட்டகளப்பு, கண்டி. பதுளை. மன்னார். மாத்தறை போன்ற நகரங்களுக்கு இரவில் டிரவலிங் போஸ்ட் ஒபீஸ் (TPO) ன்ற பெயரில் தபால் பொதிகளை அனுப்ப ஒழுங்குகள் செய்தனர். அதனால், தபால் பொதிகளை'ச் சுமந்து சென்ற ரயிலுக்கு மெயில் டிரையின் என்று பெயரிடபட்டது.

வவுனியா மாவட்டத்தில், அந்த நகரத்திலேயே வன்னியில் பெரிய தபால் நிலையம்' அமைந்திருந்தது. அந்த நகருக்கு அருகாமையில் உள்ள ஊர்களில், மக்கள் தொகையை பொறுத்து சிறிய தபால் நிலையங்களும், கிராமங்ளில் உப தபால் நிலயங்களும் உருவாகின.

வவுனியாவில் இருந்து மேற்கே 20 கி மீ தூரத்தில் உள்ளது கணேஷபுரம் என்ற அழகிய குக் கிராமம்.. ஊருக்குள் நுழைந்தவுடன் குடியானவர்கள் வசிக்கும் பகுதியைக் காணலாம். உள்ளே வந்தால் வாய்க்காலும், குளத்தையும் காணலாம். அதைத்தாண்டி வந்தால் வடக்கு தெற்காக ஒரு தெரு.

இதுதான் அக்கிராமத்தின் மெயின் வீதி. அதில் இருந்து பிரிந்து செல்லும் சிறு ஆறு ஒழுங்கைள்.

வவுனியாவில் இருந்து மேற்கே மன்னாருக்கு போகும் A30 பெரும் பாதையில் உள்ள பூவரசங்குளம் தபால் நிலையத்துக்கு அருகே, வடக்கே எட்டு கிமீ தூரத்தில் அமைத்துள்ள கிராமம் கணேஷபுரம். பெயருக்கு பொருத்தமாக பிள்ளயார் கோயிலுண்டு. வன்னி குளங்கள் நிறைந்த பகுதி. பல கிராமங்களின் பெயர்கள் குளம் என்று முடிவடையும். விவசாயத்துக்கு பிரபல்யமானது வன்னி. ஒருகாலத்தில் இலங்கையின் அரிசி கிண்ணம் என்று வன்னியை அழைத்தனர். மழைக்காலங்களில் நீர் வீணாகாமல் தேங்கி நிற்க வன்னி முழுவதும் சிறிதும் பெரிதுமாக முன்னைய குறு நிலமன்னர்கள் கட்டிய குளங்களும், மழைக்காலத்து ஆறுகளும் பல இருந்தன. குளங்களை சுற்றி கிராமங்கள் உருவாகின. கிராமத்து மக்கள், குளத்து நீரை விவசாயத்துக்கும். தம் பாவனைக்கும் பாவித்தனர். இயற்கை வளம் நிறைத்த கிராமங்களில் கணேஷபுரம் ஓன்று. சுமார் இருநூறு குடும்பங்கள் வாழும் கிராமம். பாதைகள் நன்கு போடப்படாததால், பஸ் சேவை இருக்கவில்லை அக் கிரமத்தில் . போக்குவரத்துக்கு சைக்கிலையும், மாட்டு வண்டியையும். நடையையும். நம்பி அவ்வூர் மக்கள் வாழந்தனர்.

தபால்காரன் தங்கராசா பல காலம் அக்கிராமத்துக்கு தபால் விநியோகம் செய்ததால் அக்கிராமத்தில் வாழும் குடும்பங்களை நன்கு அறிந்திருந்தான். வவுனியா தபால் நிலயத்தில் வரும் தபால்கள் கிராமங்களுக்கு ஏற்றவாறு பிரித்தப் பின்னர்

தபால்காரர்கள் கிராமங்களுக்கு எடுத்து செல்வார்கள் தபால்காரர்கள். காலை எட்டுமணிக்கு வவுனியாவில் இருந்து சைக்கிளில் தபால்கள் நிரம்பிய பையோடு யுனிபோர்ம் அணிந்து செல்வது தங்கராசாவின் வழக்கம். சரியாக காலை 8 மணிக்கு தன் சைக்கில் பயணத்தை வவுனியாவில் இருந்து ஆரம்பித்து சுமார் 20 கிமீ தூரத்தை ஒரு மணித்தியாலத்தில் கடப்பது அவன் வழமை. அதுக்குத் தேவையான தேக ஆரோக்கியம் தேவை. ஒருகாலத்தில் சைக்கில் வரமுன் தபாலை ஓடிசென்று படட்டுவாடா செய்ததினால் அவர்களை "ரன்ன்ர்" என்றும் அழைத்தார்கள்.

****

அன்று, செல்லம்மா ஆச்சி, தேவகி டீச்சர், நேர்ஸ் வானதி, பலசரக்கு கடை வைத்திருக்கும் செல்லையா, வேலையில்லாமல் இருக்கும் வாலிபன் ராமலிங்கம், விவசாயி முருகையா, வவுனியா கச்சேரியில் வேலை செய்து ரிட்டயரான எழுபது கிழவன் ராசையா, ஆகியோருக்கு வந்திருந்த கடிதங்களோடு இன்னும் சில குடும்பங்களுக்குமாக முப்பது கடிதங்களைக் கொண்டுள்ள பையை சுமந்து கொண்டு அவன் பயணம் சைக்கில் அன்று இருந்தது.

தங்கராசு ஊர் மக்களில் ஒருவனாகி விட்டான். காரணம் அவன் கடிதத்தை உரியவருக்கு கொடுத்துவிட்டுப் பேசாமல் போய் விடாமல், சற்று நின்று, சுகம் விசாரித்து,, எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு தேவைப்பட்டால் அவர்களுக்கு வந்த கடிதத்தை வாசிக்கவும், எழுத தெரியாதர்களுக்கு தேவை

பட்டபோது கடிதம் எழுதி கொடுப்பது அவன் பழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

கணேஷபுரத்தில் உள்ள குளக்கரை மீது சைக்கிளை தங்கராசு ஓட்டிச் செல்ல விரும்புவதுக்கு காரணம், பயண நேரத்தை சுருக்குவற்கும், குளத்தில் மீன் பிடிக்க வரும் கொக்குளைப் பார்த்து ரசிப்பதுக்குமே. குளக் கரை மீது பயணம் செய்யும் போது அவனுக்குப் பிடித்த பழைய பாடலான " எரிக்;கரை போறவளே பெண் மயிலை" என்ற பாடலைப் பாடிய வாறு சைக்கிளை ஓட்டுவான்.

எழுபது வயதுக் கிழவி செல்லாட்சி. தன் பேரன் தேவனிடம் இருந்து மணியோடரும் கடிதமும் வருமென ஒரு கிழமையாக எதிர்பார்த்துக் கொண்டிருத்தாள் ஆச்சி. தங்கராசைக் கண்டவுடன் :

" என்னடா மோனே ராசு. எனக்கு ஏதும் கொண்டுவந்தனியே". ஆச்சி அவலுடன் கேட்டாள்

"ஓம் ஆச்சி உன்றை பேரன் தேவனிடம் இருந்து உனக்கு ஒரு கடிதம் இருக்கு"

"எங்கை இருந்து அவன் எழுதியிருக்கிறான்"?

"கொழும்பில் இருந்து"

"தங்கராசு நேற்று இரவு என் பேரன் தேவனை கனவிலை கண்டனான். அதுதான் அவனின் கடிதம் வந்திருக்கு. அவனுடைய அப்பாவும் அம்மாவும் இறந்தபிறகு நான் தான்

அவனை வளர்த்தவள். அவனுக்கு சகோதரங்கள் இல்லை. நான் இருக்கிற இந்தக் குடிசை விவசாயியாக இருந்த அவன்டை தகப்பனின் கடும் உழைப்பிலையும், மொஹிடீன் முதலாளியிடம் வட்டிக்கு கடன் வங்கியும் கட்டியவர். அந்தக் கடன் இன்னும் தீர்ந்த பாடாகயில்லை. மாதம் மாதம் 500 ரூபாய் மொஹிடீன் முதலாளிக்கு கொடுத்தாகவேண்டும். அதோடு என் செலவுக்கு மாதம் 500 ரூபாய் அனுப்புவான். இன்னும் மிகுதி காசு 1o,oooரூபாய் முதலாளிக்கு கொடுக்கவேண்டும். அதனால் தான் தேவனின் கடிதத்தையும் காசையும் எதிர்பரர்த்துக் கொண்டு இருந்தனான்'' செல்லாட்சி சொன்னாள் ,

''இப்ப விளங்குது ஆச்சி. தேவன் நல்ல பொடியன். கடனை கெதியிலை தீர்த்துபோடுவான். இந்தாருங்கோ லெட்டர்'' தங்கராசு கடிதத்தை நீட்டினான்

''உனக்குத் தெரியும் தானே எனக்கு எழுத வாசிக்கத் தெரியாது எண்டு. ஒருக்கா நீ நல்லபிள்ளை மாதிரி கடிதத்தை எனக்கு வாசித்துக் காட்டேன்'' ஆச்சி கெஞ்சிக் கேட்டாள்.

தங்கராசு என்வலப்பில் இருந்த கடிதத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்

''என்டா தங்ராசு மனிஓடர் தேவன் அனுபவில்லையே'' ஆச்சி கேட்டாள்

''இல்லை ஆச்சி கடிதம் மட்டும் தான் அனுப்பிருக்கிறான்''

''சரி வாசி கேட்பம்''

அன்புள்ள என் ஆச்சி செல்லம்மாவுக்கு தேவன் எழுதிகொள்வது.

எனக்குத் தெரியும் உனக்கு வாசிக்கத் தெரியாது எண்டு. தங்கராசு நபிக்கையானவன். அவன் கடிதத்தில் உள்ளதை உள்ளபடியே வாசிப்பான். நான் இப்ப கொழும்பிலை உள்ள ஒரு பெரிய கலதாரி ஹோட்டலிலை ரூம் போயாக வேலை செய்கிறேன். மாதம் 2000 சம்பளம். எனது மேனேஜர் ஸ்டீபன் நல்லவர். என்னை அவருக்குப் பிடிக்கும். ஹோட்டலிலை தங்க ஒரு ரூம் தந்திருக்குறார். ஒரு' அறைக்குள் மூன்று பேர் இருக்கிறோம். சாப்பாடு ஹோட்டல் தருகுது. இப்ப சுற்றுலா பயணிகள் வருவதால் வேலை அதிகம். அதனால் கடிதம் போட சுணங்கி விட்டது. கோபிக்காதே. போன கிழமை ஜேர்மனி., கனடா தேசங்களில் இருந்து வந்த இரு சுற்றுலாப் பயணிகளை நல்லாக கவனித்ததுக்காக ஆளுக்கு இருபது டாலர்கள் தந்தார்கள். அதையும் சேர்த்து பெரிய தொகை என்ற படியால் 5000 ரூபாய் வவுனியாவில் இருக்கும் என்னோடு வேலை செய்யும் ராஜன் மூலம் அனுப்புகிறேன். ஒரு கிழமையில் காசு உனக்கு கிடைக்கும்.

மொஹிடீன் முதலாளிக்கு 4000 ரூபாய் கொடு. கெதியிலை கடனை கட்டி முடித்து போடுவன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதே.

இன்னொரு நல்ல செய்தி. இங்கை துபாயிலை இருந்து வந்த அரேபியர் ஒருவர் தனது துபாய் ஹோட்டலில் எனக்கு வேலை செய்ய விருப்பமா என்று கேட்டார். நான் ஓம் என்றேன், ஒரு மாதத்திலை விசா அனுப்புவதாக சொல்லி போய் இருகிறார்.

அந்த உத்தியோகம் கிடைத்தால் முதலாளியின் கடனை கெதியிலை தீர்த்து போடலாம். உன் உடம்பை கவனித்துகொள். தங்கராசுவையும் நான் கேட்டதாகச் சொல். மிகுதி அடுத்த கடிதத்தில்

இப்படிக்கு

உன் பேரன் தேவன்

செல்லம்மா முகத்தில் பூரிப்பை தங்கராசு கண்டான்..

''முருகண்டி பிள்ளையாரே என் பேரனுக்கு நீண்ட ஆயுளைக் கொடும்'' என்று சுவரில் தொங்கிய பிள்ளையார் படத்தைப் பார்த்து கும்பிட்டாள்.

''சரி ஆச்சி உன்னோடு கன நேரம் செலவழித்து போட்டேன் நேர்ஸ் வானதிக்கும், தேவகி டீச்சருக்கும் கடிதங்கள் இருக்கு கொடுக்க, நான் வாறன்'' என்று புறப்பட்டான்.

****

''தபால்காரன்ன தங்கராசாவை இன்னும் வரக்காணோம், வழக்கத்திலை சரியாக காலை ஒன்பது மணிக்கு வந்திடுவான். இண்டைக்கு ஏன் இவ்வளவு சுணக்கமோ தெரியவில்லை அம்மா'', இப்படி முணுமுணுத்தபடி ஹாலுக்கும்; வாசலுக்குமாக அடிக்கடி போய்வந்து கொண்டிந்தாள் வானதி

வானதியின் தாய் மீனாட்சிக்கு மகளின் அவசரம் ஏன் என்று தெரியும். வானதிக்கு திருமணமாகி ஆறு மாதங்களாகிவிட்டது. கனேடியன் சிட்டிசன் காந்தனை கணவனாக பெற்றது தனக்கு

கிடைத்த அதிர்ஷடம் என்று வானதி நினைத்தாள். வானதியின் அக்கா காயத்திரி திருமணமாகி லண்டனுக் போய் நான்கு வருடங்களுக்குப் பின்னரே வானதிக்கும் காந்தனுக்கும் திருமணமாயிற்று. அதுவும் எதிர்பாராதவாறு நடந்த காதல் திருமணம். ஒரு வருஷத்துக்கு முன்பு வானதி நேர்சாக வவுனியா ஆஸ்பத்திரியில் வேலை. செய்தபோது தான் காந்தன் கனடாவில் இருந்து ஒரு மாத லீவில் வவுனியாவுக்கு] வந்திருந்தான். வந்து ஒரு கிழமையில் அவனுக்கு வருத்தம் வந்து வவுனியா ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு போனபோது ஒரு கிழமை. வைத்தியத்துக்கு அங்கு தங்க வேண்டி வந்தது. அப்போது காந்தனுக்கு அந்த வார்டில் நேர்சாக் வேலை செய்த வானதி அறிமுகமானாள். அதுவே காதலாக மாறி திருமணத்தில் முடிந்தது.

வானதியை தன்னால் வெகுகாலம் பிரிநது இருக்க முடியாது. வெகு விரைவில அவளுக்கு கனடாவுக்கு வர விசா எடுக்க ஒழுங்குகள் செய்து வருவதாக கடிதத்தில் காந்தன் எழுதியிருந்தான். மாதங்கள் ஆறாகியும் விசா கிடைக்கவில்லை எப்போ விசா கிடைக்கும் என்று எதிர்பார்த்தபடியே வானதி காத்து இருந்தாள்

தங்கராசு வானதிக்கு வந்த கடிதத்தோடு அவள் வீட்டு வாசலுக்கு போன போது.

“தங்கராசு உன்னைத் தான் பார்த்துகொண்டு இருக்கிறேன். எதாவது கனடா முத்திரையோடு கடிதம் எனக்கு இருக்கே” வானதி கேட்டாள்.

"ஓம் இருக்கு தங்கச்சி. ஒரு வெளிநாட்டு கடிதம் மட்டுமே போதியிலை இருக்கு, காந்தனின் கடிதம் தான் அது. இந்தாரும்" கடிதத்தை கொடுத்தான் தங்கராசு

வானதி அவசரமாக கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அவள் முகம் பூரிப்பதைக் கண்ட தங்கராசு. " என்ன தங்கச்சி ஏதும் நல்ல நியூஸ் காந்தன் எழுதியிருகிறாரே"

சிரித்தபடி "ஓம் எனக்கு விசா தருவதாக கனடா அரசு சொல்லியிருக்காம். நான் மெடிக்கல் டெஸ்ட்டுக்கு போக வேண்டுமாம். அதோடை கொழும்பு கனேடியன் ஹைகொமிசினுக்கு போகவேண்டுமாம். அவையள் என்னை இன்டர்வியூ செய்வார்கலாம்." வானதி சொன்னாள்.

"உமக்கு' அது பிர்ச்சனை இல்லை உமக்குத் தானே ஆங்கிலம் நல்லாகப் பேச. எழுத வாசிக்கத் தெரியுமே". சரி பிள்ளை நீர் கனடா போகமுன் நான் உம்மை சந்திக்கிறன் தேவகி டீச்சருக்கு ஒரு கடிதம் இருக்கு கொடுக்கவேண்டும். நான் வாறன்" தங்ககரரசு வானதியிடம் விடைபெற்று. சைக்கிலில் ஏறி மிதித்தான்

****

இப்ப நேரம் 9.30 ஆயிடுச்சு. அத்தான்டை கடிதம் இண்டைக்கு வர வேண்டும். மூன்று நாளைக்கு முந்தியே சம்பளம் எடுத்திருப்பார்." தேவி முணுமுணுத்தப்டியே வாசலுக்கு வந்தாள் தபால்காரனை எதிர்பார்த்து. அன்று அவள் லீவு.

அதே நேரம் சைக்கில் மணியை அடித்துக் கொண்டு தபால்காகர தங்கராசாவும் வர சரியாக இருந்தது.

தேவியை சிறுவயது முதல் கொண்டு தங்கராசாவுவுக்குத் தெரியும். தேவி படிப்பில் கெட்டிக்காரி என்று ஊரில் பலர் பேசிக் கொண்டனர். அவள் ஏ லேவல் சித்திபெற்று, அதன் பின் ஆசிரியை பயற்சிபெற்று தமிழ் ஆசிரியையாகி உள்ளூர் பள்ளிக்கூடத்தில் வேலை செய்வாள் என்று தங்கராசு எதிர்பார்க்கவில்லை. அவள் தன் சொந்த தாய் மாமன் மகன் சிவலிங்கத்தை திருமணம் செய்தபோது திருமணத்துக்கு தங்கரசுவுகும் அழைப்பிதழ் அனுப்ப தேவி மறக்கவில்லை. அழைப்பிதழ் வந்தபோது திருமணத்துக்குப் போகாமல் தங்கரசுவால் இருக்கமுடியவில்லை. கலியாணப் பரிசாக ஒரு சுவர் கடிகாரத்தொடு போனான்.

சிவா என்ற சிவலிங்கம் ஒரு அரசாங்க கிளார்க். தேவியை போல் கெட்டிக்காரன். யாழ்ப்பாணம், வவுனியா கச்சேரிகளில் வேலை செய்து. பதவி உயர்வு கிடைத்து' திருகோணமலை கச்சேரிக்கு மாற்றலாகி சிவா போனான். மாதம் ஒருமுறையாவது கணேஷபுரத்துக்கு வரத் தவறமாட்டான். திருமணமாகி இரு வருடத்தில் தேவகிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. தோற்றத்தில் சரியாக சிவாவைப் போலவே குழந்தை இருந்தது. சிவாவுக்கும் தன மகள் ரேவதி மேல் அளவுகடந்த பிரியம்.

இந்தாருங்கோ டீச்சர் உங்களுக்கு சிவாவிடம் இருந்து கடிதம் வந்திருக்கு தேவியிடம் கடிதத்தைக் கொடுத்தான் தங்கராசு. கடிதத்தை வாங்கி அவசரம் அவசரம்மாகப் பிரித்தாள் தேவகி.

*கடிதத்துக்குள் 4000 ரூபாயுக்கு மணிஓடர் இருந்தது. கடிதத்தை வாசித்த போது புரமொசனால் சம்பளம் கூடியததால் அரியர்ஸ் பணம் வந்ததாகவும் அதனால் 4000 அனுபுவதாக கடிதத்தில் சிவா எழுதி இருந்தான்.. இன்னும் ஒரு கிழமையில் ஊருக்கு வருவதாக எழுதியிருந்தான் .*

****

*தபால்காரன் தங்கரசு வேலை செய்து சோர்வாக இருந்ததால், செல்லையாவின் தேனீர் கடையில் சற்று இளப்பாறி ஒரு தேனீரோடு வடையும் உண்ணுவது' வழக்கம். செல்லையா அவனுக்குப் பலகாலம் அறிமுகமானவர். அவர் தனது கடையைப் பெரிதாக்கி பலசரக்கு கடையாக மாற்ற பாங் லோனுக்கு விணப்பிக்க கடிதம் எழுதி கொடுத்தது தங்கராசுவுக்கு நினைவில் இருந்தது. மக்கள் வங்கியில் இருந்து வந்திருந்த கடிதத்தை செல்லையாவுக்கு கொடுத்தபடியே,*

*"செல்லையா உமக்கு வங்கியில் இருந்து நீர் விண்ணப்பித்த லோனுக்கு கடிதம் வந்திருக்கு, இந்தாரும் கடிதம். வாசித்துப் பாரும்"*

*செல்லையா கடிதத்தை வங்கி வாசித்து முகம் மலர்ந்தார்.*

*"என்ன செல்லையா நல்ல செய்தியே வந்திருக்கு"?*

*"ஓம். நீர் எழுதி. நான் விண்ணப்பித்த 20,000 ரூபாயுக்கு' லோன் அனுமதித்து கடிதம் வந்திருக்கு. யாராவது வேலை செய்யும் ஒருவர் உத்தரவாதம் கொடுக்க வேண்டுமாம்"*

*“ஒண்டுக்கும் யோசிக்காதையும். அரச சேவையில் உள்ள நான் இருக்கிறேன் உமக்கு உத்தரவாதம் தர” என்றான் தங்கராசு தங்கராசு உனக்கு பெரிய மனசு. என்றார் செல்லையா.*

*தங்கராசு விவசாயி முருகையாவுக்கு வந்திருந்த கடிதத்தை கொடுக்கப் பயணத்தைத் தொடர்ந்தான்.*

****

*விவசாயி முருகையா கடும் உழைப்பாளி. பத்து ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரன், ஏர்பிடித்து வியர்வை சிந்த உழுபவன். ஊரே வியக்கும்’ வண்ணம் அவன் காணியில் பயிர் விளைந்தது. பத்து ஏக்காரில் ஒரு பகுதியில் காய்கறிகள் வளர்த்தான். அவன் தோட்டத்து காய்கறிகளுக்கு கிராமத்தில் நல்ல மதிப்பு. தங்கராசு தன் காய்கறிகள் தோட்டத்தைப் பார்த்து ரசித்து கொண்டு நிற்பதைக் கண்ட முருகையா அவனிடம் போனான்.*

*அவனைக் கண்டதும் “என்ன முருகையா நீ ஏதும் கடிதத்தை எதிர்பார்த்து’ கொண்டு இருக்கிறியே”? தங்கராசா கேட்டான்*

*“ஒம் தங்கராசு ஏதும் எனக்கு கடிதம் இருக்கே”*

*“நீ எதிர்பார்த்த மாதிரி உனக்கு வடமாகாண விவசாயஅமைச்சில் இருந்து கடிதம் வந்திருக்கு நீ ஏதும் கேட்டு எழுதினியா”?*

*“ஓம். தேவகி டீச்சர் உதவியோடு ஆறு மாதத்துக்கு முன் எனக்கு உழுவதுக்கு உதவி கேட்டு எழுதினனான். அதுக்கு பதில் வர .*

மூன்று மாதத்துக்கு முன்பு இரண்டு அதிகாரிகள் வந்து என் காணியின் விளைச்சலை பார்த்து போனவையள்''

''உன் மனுவுக்கு பதில் வந்திருக்குது. இந்தா கடிதம். என்ன எழுதி இருக்குது என்று வாசி''

முருகையா கடிதத்தை கவரில் இருந்து எடுத்து வாசித்தான்

மதிபுக்குரிய முருகையா அவர்கட்கு வடமாகாண விவசாய அமைச்சு எழுதிக்கொள்வது

உமது மனுவை அதிகாரிகள் விசாரித்ததில் நீர் ஒரு கடுமையாக உழைக்கும் விவசாயி என்றும்., உமது காணியில் காய்கறியும், நெல்லும் நன்றாக விளைவதாக அறிக்கை சமர்பித்துள்ளார்கள். வடமாகாணத்தில் அதிக விளைச்சல் உள்ள நிலம் உமது நிலம் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறோம்.அதனால் உமது வேலைச் சுமையை குறைப்பதுக்கும், உற்பத்தியை பெருக்கவும், அரசின்' செலவில் ஒரு உழும் இயந்திரம் (டிராக்டர்) உமக்கத் தரப்படும். இதை இயக்கும் பயற்சிக்கான செலவையும், காப்புறுதியையும் செலவையும், அரசு தரும்' என்பதை இக்கடிதத்தின் மூலம் அறிவிக்கிறோம்

இப்படிக்கு

வட மாகாண விவசாய அமைச்சர்

''முருகையா இது உமது உழைப்புக்கு கிடைத்த வெற்றி'' என்று பாராட்டிவிட்டு தன் பயணத்தைத் தங்கராசு தொடர்ந்தான்

****

தங்கராசா தான் கொடுக்கவேண்டிய அடுத்த கடித்தை கொடுப்பதுக்காக சுந்தரலிங்கம்' என்ற வாலிபனைத் தேடி அவன் வீட்டுக்குப் போன போது அவனின் தாய் “தங்கராசு, கொஞ்ச காலம் சுந்தரம் சரியான மனக் கவலையோடு' இருக்கிறான். பல வேலைகளுக்கு' விண்ணப்பித்து ஒரு பதிலும் வரவில்லை. அவனுடைய போதாத காலம். சில நேரம் அவன் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இருக்கலாம்” என்றாள்

தங்கராசு பிள்ளையார் கொவிலடிக்குப் போனபோது அங்கு உள்ள ஆல மரத்தின் கீழ் சிந்தனையோடு சுந்தரம் இருப்பதைக் கண்டன்

“என்ன சுந்தரம் யோசனையோடு இருக்கிறாய்”? தங்கராசு கேட்டான்.

“எதைச் சொல்ல. எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது: வெறுப்போடு சுந்தரம் பதில் சொன்னான்

“ஏன் அப்படி வெறுப்பு?

“நான் விண்ணப்பித்த வேலைகளுக்கு பதில் ஒன்றும்' வரவில்லை”

“யோசிக்காதே சுந்தரம். உனக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன். போலீஸ் டிப்பார்ட்மேண்டில் இருந்து வந்த கடிதம். இதோ கடிதம் பிரித்துப் பார்

சுந்தரம் ஆவலுடன் கடிதத்தை வாங்கி பிரித்து வாசித்த போது' சந்தோசத்தால் சத்தம்போட்டு " எனக்கு போலீசில் வேலை கிடைத்து விட்டது" என்று சொல்லி துள்ளிக்குதித்தான்.

"என்ன வேலை சுந்தரம்"? தங்கராசு' கேட்டான்

"போலீஸ் கொன்ஸ்டபிள் வேலை. யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேசனில் வருகிற திங்கள் கிழமை டிரெயினிங்குக்கு என்னை ரிபோர்ட் செய்யட்டாம்""

நல்ல மகிழ்ச்சியான செய்தி. நேர்மையாகவும், திறமையாகவும் இனி வேலை செய் கெதியிலை உனக்கு அடுத்த சார்ஜன்ட் புரமோசன் கிடைக்கும் என்று வாழ்த்தி விட்டு தன் சைக்கிலை நோக்கிப் போனான்.

****

வாயில் சுருட்டோடு திண்ணையில் அமர்ந்திருந்தார் வவுனியா கச்சேரியில் பியோனாக முப்பது வருடங்கள் வேலை செய்து ரிட்டையரான எழுபது வயது ராசையா. அவருக்கு தனித்த வாழ்க்கை. மனைவியை பத்து வருடங்களுக்கு முன் இழந்தவர். முன்கோபி அனால் நேர்மையானவர். தனது தகப்பன் விட்டுச்சென்ற குடிசையில் வாழ்பவர். அவருடைய ஒரே மகனான ஜெயராசா வவுனியா மத்திய கல்லூரியில் படித்து பின் கப்பல் ஒன்றில் மாலுமியாக வேலை செய்து, பாஙகொக், சிங்கப்பூர் வியாட்நாம். பிலிப;பைன் போன்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று, கேட்ட' நண்பர்களின் சகவாசத்தால், ஒரே குடியும் கூத்திக்கும் அடிமையானவன்.

கிராமத்துக்கு தகப்பனை பார்க்க அவன் வருவதில்லை. ஜெயத்தொடு வேலை செய்த வவுனியாவில் வளர்ந்த சிவராசா என்பவன் ராசையாவின் மகன் ஜெயாராசாவுக்கு ஈரலில் புற்றுநோய் முற்றி மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் இருப்பதாக ராசையாவுக்கு அறிவித்தான். அந்தக் கவலையோடு இருந்த ராசையாவுக்கு, தான் கொண்டுவந்திருந்த கடிதத்தை தங்கராசு கொடுத்தான்.

கடிதத்தைப் பிரித்து வாசித்து ராசையா மௌனமானார்

''என்ன செய்தி உங்கடை மகனிடம் இருந்து வந்திருக்கிறது ஐயா''? தங்கராசு கேட்டான்

''மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரில் இருந்து கடிதம் வந்திருக்கு. எல்லாம் எப்பவோ முடிந்து விட்டது '' எனறார்' கண்களில் கண்ணீரோடு சொன்னார் ராசையா.

தங்கராசு பேசாமல் அங்கிருந்து மற்றவர்களுக்கு வந்திருந்த கடிதங்களை கொடுக்க தன் பயணத்தை தொடர்ந்தான்.

பயணத்தின் போது அவன் சிந்தித்தான் நான் கொண்டுவரும் கடிதம் ஊர் மக்களுக்கு கொடுக்கும் போது சிலர் சந்தோசத்தில் முகம் மலர்வார்கள். சிலர் ஒன்றுமே பேசமாட்டார்கள். இன்னும் சிலர் கடிதத்தை வாசித்து விட்டு கண்ணீர் விடுவார்கள். இதுதான் மனித வாழ்க்கை. ஒரு தபால்காரன் கொண்டு வரும் செய்திகள் அப்படியானவை.

****

## *கதை 7*

# அப்பாவைக் காணோம்

*1993 ஆம் ஆண்டு நடந்த ஈழத்துப் போரில் விடுதலை புலிகள் தமது வீரத்தை நிலை நாட்டிய பிரசித்தமான கிராமம் பூநகரி. ஒரு காலத்தில் குதிரை முனையில் இருந்து ஆண்ட அல்லிராணியின் ,மாளிகைக்கு பூநகர் ஏரிக்கு அருகே இருந்த பூந்தோட்டத்தில் இருந்து பூக்கள் போனதால் அவ்வூருக்கு அப்பெயர் வந்தது என்று அவ்வூர்வாசிகள் சொல்வார்கள்.*

*அசோக சக்ரவர்த்தியின் மகன் மகிந்தாவும், மகள் சங்கமித்தா வெள்ளரசுக் கிளையோடும், கஜபாஹு மன்னன் சேரநாட்டில் இருந்து கண்ணகி சிலையோடும் யாழ் குடாநாட்டில் வடக்கே உள்ள மாதகலுக்கு அருகே உள்ள சம்புகோள துறைமுகத்தில் வந்து இறங்கி பூநகரி ஊடாக தென் பகுதிக்குச் சென்றதாக வரலாறு சொல்கிறது . இப்போது பூநகரில் இருந்து சங்குப்பிட்டி பாலத்தின் வழியே யாழ்குடாநாட்டுக்குப் போவது இலகு .*

****

*பூநகரி வாசிகள் பெரும்பாலோர் விவசாயிகலும் மீன் பிடி தொழில் புரிபவர்ககள் . மொட்டக்கருப்பன், முத்துச் சம்பா போன்ற உயர் தர அரிசிகள் விளையும் பசுமையான நெற் காணிகள் நிறைந்த ஊர். விவசாசிகளுக்கென ஒரு சங்கம் இருந்தது. அச் சங்கத்தின் தலைவர் சிவா என்று எல்லோராலும் அழைக்கப்படும் சதாசிவம் ஒரு விவசாயி. சிவாவுக்கு பூநகரியில்*

பத்து ஏக்கர் காணி இருந்தது. தன் கடும் உழைப்பால் வளர்ந்தவர். அவர் தாய் மாமனின் ஒரே மகள் பாக்கியலட்சுமியை திருமணம் செய்தவர் .

அவள் அவருக்கு மனைவியாக வரும்போது கூடவே பதினைந்து பரப்பு நெற் காணியை சீதனமாகக் கொண்டு வந்தாள். ஏர் பிடித்து உழுது நெல் விதைத்து ஊருக்கே சோறு போட்ட உழவன் சிவா. திடகாத்திரமான உடலமைப்பை கொன்டவன். சிவா ஒரு போதும் நோய் நொடி என்று படுத்ததில்லை. தன் விவசாயத்தின் திறமையினால் இரு காணிகளிலும் ஆரம்பத்தில் ஏர் பிடித்து உழுது காணியில் அதிக விளைச்சலைப் பெற்றார் . மாகாணத்தில் அவரின் காணியில் விளைச்சல் அதிகமானபடியால் அரசு அவரைப்பாராட்டி ''விளைச்சல் வீரன்'' என்ற விருதும், அதோடு பரிசாக உழுவதற்கு டிரக்டரும் அதை இயக்கும் பயிற்ச்சியையும் அரசு தன் செலவில் கொடுத்தது. தனது கடும் உழைப்பின் மூலம் விளைச்சலில் கிடைத்த வருமானத்தால் தன் ஒரே மகன் மகாதேவனை பட்டதாரியாக்கி, பூநகரியில் தன் சகோதரியின் மகள் சரஸ்வதிக்கு திருமணம் செய்து வைத்தார் . இரு பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டன் ஆனார். முழுக் குடும்பமே பூநகரி சித்தன் குறிச்சியில் உள்ள பூர்வீக வீட்டில் வாழ்ந்தது. மகாதேவன் தந்தையைப் போல் விவசாயத்தில் ஆர்வம் காட்டாது ஆசிரியர் தொழில் செய்தான். தன் தந்தை வெறும் மேலுடன் காணியில் உழுவதை அவன் விரும்பவில்லை.

பூநகரி சித்தன் குறிச்சி முருகன் கோவில் யாழ்நகரில் சித்தர்பரம்பரை உருவாக முன்னர் அங்கு இருந்த சித்தர்கள் ஞானிகள் வழிபட்ட முருகன் கோவில் என்பது கோவில் வரலாற்றின் தொன்மையாகும்

இலங்கை இராணுவம் பூநகரியை திரும்பவும் விடுதலை புலிகளிடம் இருந்து கைபற்றியது; அதன் விளைவால் சதாசிவத்தின் வயல்காணியில் முகாம் போட்டது. இந்த இராணுவ ஆக்கிமிப்பிபால் சொந்தக் காணியில் சிவாவால் விவசாயம் செய்ய முடியவில்லை.

அக்கோவிலும் இராணுவத்தால் சிதைக்கப் பட்டது. கோவில் இராணுவத்தால் சிதைக்முன் அக்கோவிலின் மெய்காப்பாளராக விவசாயி சதாசிவம் அக்கோவிலை தன் சொந்த செலவில் நடத்திவந்தான் வருடா வருடம் பொங்கிப் படைத்தான் . அக்கோவில் சிதைந்த சம்பவம் சதாசிவத்தை வெகுவாக பாதித்தது . வீட்டில் முடங்கிக் கிடக்க அவரால் முடியவில்லை . அவரின் மனதை அவரின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் வெகுவாகப் பாதித்தன.

தினமும் இடிந்த கோவிலையும், ஆக்கிரமித்த தன் காணியையும் போய் தூரத்தில் நின்று பார்த்து கண்ணீர் விட்டு அழுவார் அவரின் மகன் மாகாதேவன் ஒரு பலசரக்குக கடை அமைத்து தருகிறேன் அப்பா, நடத்துங்கள் என்று வேண்டியும் அவர் மறுத்து விட்டார். என்றோ ஒரு நாள் தன் காணி தனக்குத் திரும்பி வரும் என்று எதிர்பார்த்து இருந்தார் சிவா.

அதிகாலையில் எழும்பி, பல்தேய்த்து குளித்து விட்டு மனைவி கொடுத்த கோப்பியையும் பலகாரத்தையும் சாப்பிட்டபின் வெளியில் போய் வெகு நேரம் கழித்தே வீடு திரும்புவார். எவருடனும் அதிகம் பேசமாட்டார். அவர் முகத்தில் எதையோ இழந்தது போன்ற எக்கம் சதாசிவம் எங்கே போகிறார் என்பது எவருக்கும் புரியாத புதிர். குளத்தடியிலும், இராணுவ முகாம் இருந்த இடத்துக்கு அருகே உள்ள ஒரு சிறு பாழடைந்த குடிசையிலும். சிதைந்த முருகன் கோவிலடியிலும் சிவாவைக் சிலர் கண்டதாக மகாதேவனுக்கு சொன்னார்கள் .

"அம்மா அப்பாவுக்கு இராணுவ முகாமுக்கு அருகே உள்ள பாழடைந்த குடிசையில் என்ன வேலை."?

" இப்போ புரியுது மகன் உன் அப்பாவுக்கு பழம் சோறும் மீன் குழம்பும், பச்சை மிளகாய், ஊறுகாயோடும் பகல்; போசனதை வயல் வரம்பில் நடந்து அவருக்கு கொண்டு போய் அந்த குடிசையில் வைத்து என் கையால் கொடுப்பதை ரசித்து உண்பார். சில சமயம் அவருக்கு விரும்பிய பனம் கள்ளும் கொண்டு போய் கொடுப்பன் . நாங்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து சாப்பிடுவோம். அந்த நினைவில் அவர் அந்தக் குடிசைக்குப் போயிருக்கலாம் மகன்" மகாதேவனின் தாய் சொன்னாள்.

"அம்மா அது ஆபத்தான இடமாயிற்றே. அப்பாவுக்கு பல தடவை சொன்னேன் ஆர்மி முகாம் இருக்கும் பக்கம் போகவேண்டாம். சிங்கள ஆர்மிகாரனுக்கு தமிழர்களை பிடிக்காது என்று அவருக்கு தெரியாதா. ஆர்மிகாரன் நினைப்பு

*தமிழர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று. "*

*"ஏன் அப்படி சொல்லுறாய் மகன்? அப்பாவுக்கு விடுதலைப் புலிகள் சண்டை போடுவது பிடிக்காது. அவர் எப்போதும் சமாதானத்தை விரும்புபவர் . யாழ் குடாநாட்டில் இருந்து மக்கள் கிலாலி ஏரியூடாக புலம் பெயர்வு தேவை இல்லாதது என்று சொல்லுவார். பெடியங்கள் ஏன் சண்டை போடுறாங்கள் என்று தனக்கு தெரியவில்லை என்று அடிக்கடி எனக்குச் சொல்லி கவலைப் படுவார் "*

*"அந்தக் குடிசை இராணுவ முகாமுக்கு அருகே உள்ளது. அதனால் அப்பா அங்கே போவது ஆபத்து அம்மா "*

*"மகன் உன் அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அவர் சரியான பிடிவாதக்காரர் . தான் நினைத்ததை செய்வார். அவருக்கு அவரின் குடும்பத்தை அடுத்து அவரின் காணி மேல் மிக பற்றுதல் வைத்திருக்கிறார் . போருக்குப் பின் எங்கள் காணியை இராணுவம் ,ஆக்கிரமித்து விட்டது . நல்ல விளைச்சல் இருந்த காணியில் இராணுவ முகாம் அமைத்து விட்டது. அவர்களுக்கு எங்கே தெரியப் போகுது அந்த மண்ணின் பெருமையும். பெறுமதியும் . அதோடு அக் காணியில் புத்தர் சிலை ஓன்று தோன்றி விட்டதாக அயலார் சொல்லிக் கேள்வி . கொஞ்ச காலம் போனால் சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து குடியேற்றி விடுவார்கள். ஆர்மியை தட்டிக் கேட்க ஒருவரும் இல்லை. இதெல்லாம் அரசின் ஆதரவுடன் நடக்கிறது . அந்த குடிசையில் இருந்து தன் காணியைப் பார்த்து*

பழைய நினைவுகளை மீட்டு மனக் கவலையைப் போக்க அப்பா போயிருக்கலாம் அல்லவா''?

'' அம்மா இதேல்லாம் இராணுவத்துக்குப் புரியவாப் போகுது?

வீட்டில் இருந்து போன அப்பா இரண்டு நாட்களாக ஏன் வீடு திரும்பவில்லை என்று பூநகரி பொலீசுக்குச்கு முறையிட்டு அவர்களோடு போய் தேடிப் பார்க்கிறேன் . அவர் கிடைப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு அம்மா'' .

****

மாகதேவன் விதானையாரின் உதவியோடு போலீசில் தன் தந்தையை இரு நாட்களாக காணவில்லை என்று முறையிட்டான். ஒரு போலீஸ்காரனின் உதவியோடு மகாதேவன் சிவாவை பூநகரி முழுவதும் தேடி இறுதியில் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள குடிசையை நெருங்கிய போது ஒரு துர்நாற்றம் மூக்கை துளைத்தது . அங்கு அவர்கள் பார்த்த காட்சி அவர்களை அதிர வைத்தது. சதாசிவத்தின் உடல் அழுகிய நிலையில் நிலத்தில் கிடந்தது. தந்தை சூடு பட்டு இறந்தார் என்று புரிந்து கொள்ள பொலீசுக்கும் மகாதேவனுக்கும் அதிக நேரம் எடுக்கவில்லை. பொலீஸ்காரன், முகாமுக்கு பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியிடம் விசாரித்ததில் ஒரு வேளை அந்த குடிசைக்கு ஒரு மனிதன் அடிக்கடி வந்து போவதைக் கண்டு இராணுவத்தில் ஒரு சோல்ஜர் விடுதலை புலிகளின் ஒற்றன் என்ற சந்தேகத்தில் அவரை சுட்டிருக்கலாம்'' காரணம் சொன்னார். அதிகாரி.

தன் காணிமேல் மேல் உள்ள பற்றுதலால் தன் உயிரையும் பணையம் வைத்து தன் காணியின் நிலையைப் பார்க்க சென்ற தன் தந்தையின் துணிவை நினைந்து மகாதேவன் பெருமைப்பட்டான்.

****

காலப் போக்கில் பல பிற நாடுகளின் அழுத்தங்காளால் இராணுவம் அபகரித்த அந்தக் காணியை விட்டுச் சென்றது. காணிக்கு உருத்தான மகாதேவுனுக்கு இராணுவம் காணியை கையளித்தது .தன் தந்தை விரும்பிய காணி சீரழிந்து போகj கூடாது என்ற முடிவுக்கு வந்த மகாதேவன் தன் ஆசிரியர் தொழிலை விட்டு,.மீட்ட காணியில் தன் தந்தையின் விவசாயத் தொழிலில் ஈடு பட்டான். அவனின் மனவி சரஸ்வதியும் பழம்சோறும் மீன் குழம்பும் பனம் கள்ளும் மாமியார் மாமனுக்கு கொண்டு போனது போல் கணவனுக்கு எடுத்துச் சென்றாள்.

****

## கதை 8

## வீரலட்சுமி

இலங்கையில் உள்ள வன்னிப் பகுதியில், வவுனியா மாவட்டத்தில் கண்ணகிபுரம், ஒரு பின் தங்கிய குக் கிராமம். சுமார் அறுநூறு குடும்பங்கள் வாழும் அக் கிராமத்தின் மக்கள் தொகை அறுபதில் சுமார் 4500. ஒரு குடும்பத்தில் சராசரி ஆறு பேர் இருந்தனர். கணவன் மனைவியைத் தவிர நான்கு குழந்தைகள் , அதில் அனேகர் ஆண்கள் . ஒரு குடும்பத்தில் சராசரி ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளே இருந்தனர் . அதனால் அந்தக்கிராமத்தில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இந்த நிலையில் அக் கிராமம் கண்ணகியின் பெயரைக் கொண்டிருந்ததுக்கு மரபு வந்த கதைய்யொன்று உண்டு.

****

கிபி 113 முதல் 135 வரை ராஜரட்டவை ஆண்ட முதலாம் கஜபாகு மன்னன். சேரன் செங்குட்டுவனின் நண்பன் . சேரனின் அழைப்பினை ஏற்று கேரளாவில் நடந்த கண்ணகி விழாவில் கலந்து, அங்கு நடந்த அதிசயத்தை கண்டு கண்ணகி அம்மன் மேல் நம்பிக்கை கொண்டு கண்ணகி அம்மன் சிலையோடு யாழ் குடாநாட்டில், வடக்கே உள்ள மாதகல்ளில் உள்ள ஜம்புகோளம் துறைமுகத்தில் வந்து இறங்கி, பூநகரி ஊடாக அனுராதபுரம் சென்று அடைந்தான் . போகும் வழியில் பல

கண்ணகி கோவில்களை உருவாக்கிச் சென்றான். அவன் அப்படி உருவாக்கிய பத்தாவது கண்ணகி கோவில் முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில். கஜபாகு. வன்னி கிராமம் ஒன்றின் வயல் வெளியில், ஒரு மரத்தின் கீழ் உருவாக்கிய கோவில் கண்ணகிபுரம் கிராமத்தில் உள்ள பழமை வாய்ந்த சிறு கண்ணகி அம்மன் கோவிலும் ஒன்று. கண்டியில் நடக்கும் எசல பெரஹரவில் பத்தினி அம்மன் சிலையும் ஊர்வலமாய் இன்றும் எடுத்துச் செல்லப்படுகிறது அந்தக் கிராமத்தில் கண்ணகி அம்மன் கோவில் இருந்ததால் அந்தக் கிராமத்துக்கு கண்ணகிபுரம் என்ற பெயர்வந்தது .அதோடு தோற்று நோய்களால் ஊர் வாசிகள் பாதிக்கப் படவில்லை. அற்புதம் நிறைந்த பெண் தெய்வம் அது காலப் போக்கில் அக் கோவிலுக்கு போட்டியாக அவ்வூரில் பெண்களை வெறுக்கும் திலீபன் இயக்கத்தால் சுடலைமாடன் கோவில் தோற்றுவிக்கப் பட்டு, அக்கோவிலுக்கு கிராமத்தில் முக்கியத்துவம் கொடுக்க கட்டாயப் படுத்தப் பட்டது. அப்படியிருந்தும் , குழந்தை

வரம் வேண்டி கிராமத்துப் பெண்கள், பல ஆண்களின் எதிர்ப்புக்கு எதிராக, கண்ணகி அம்மன் கோவிலுக்கு பொங்கிப் படைத்தனர்.

ஆணாதிக்கம் உள்ள அந்த கிராமத்தில் . பெண்களின் உரிமைகள் பல பறிக்கப் பட்டன . அக்கிராமத்தில் உள்ள பெண்கள் அனேகர் படிப்பறிவு இல்லாதவர்கள். அக்கிராமத்தில் உள்ள பாடசாலை, மாணவர்களுக்கு மட்டுமே என்றால் எவரும் நம்ப மாட்டார்கள்

. பிற்போக்கு எண்ணம் உள்ள திலீபன் இயக்கம் அக்கிராமத்தில் இயங்கி வந்தது . அந்தக் குழுவின் தலைவன் திலீபன் . அந்த இயக்கம் வைத்தது தான் அக் கிராமத்தில் சட்டம். பிற்போக்கு கொள்கை கொண்ட அக் குழு, அக்கிராமத்தில் நடை முறைப் படுத்திய சட்டங்கள் பெரும்பாலும் பெண்களின் உரிமைகளைப் பாதித்தவையாகவே இருந்தன. முக்கியமாகப் பெண்கள் படிக்கக் கூடாது. ஒரு குடும்பத்தில் இரு குழந்ததைகளுக்கு மேல் பெண்கள் பிறக்கக் கூடாது. அப்படி பிறந்தால் பிறந்த பெண் குழந்தைக்குக் கள்ளிப் பால் கொடுத்துக் கொன்று விட வேண்டும் பகலில் பெற்றோரின் அனுமதி இன்றி வெளியில் வயது வந்த பெண்கள் போகக் கூடாது. அவர்கள் ஆடம்பரமான ஆடை அணியக் கூடாது. திருமணத்துகுப் பின் வேறு ஆடவரோடு பேசக் கூடாது. சொல்லப் போனால் காதலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்படி மீறி ஆணும் பெண்ணும் காதலித்தால் பஞ்சாயத்தில் பெண்ணுக்கு தண்டனை அதிகம். பெற்றோர் பொருத்தம் பார்த்துச் செய்து வைத்த திருமணத்தையே அக்குழு அனுமதித்தது . விதவை திருமணம் தடை செய்யப்பட்டது, ஆனால் ஆண்கள் சின்னவீடு வைத்திருக்க அனுமதிக்கப் பட்டது. பெண்கள் வேறு கிராமங்களுக்கு பயணம் செய்யக் கூடாது. தற்காலத்தில் மற்றைய கிராமங்களோடு தொடர்பு குறைந்த கிராமம் கண்ணகிபுரம் விவசாயத்தையும், கைத்தொழிலையைம் நம்பி வாழும் கிராமம் கண்ணகிபுரம். அதில் விவசாயத்தில் நாற்று நடுவது. களை பிடுங்குவது, சாகுபடி செய்வது போன்ற தொழிலுக்கு பெண்கள் பாவிக்கப்பட்டார்கள் . கைத்தொழில்,

தையல். கைப்போருள்கள் செய்வது , கிடுகு பின்னல் போன்ற தொழிலுக்குப் பெண்கள் பாவிக்கப் பட்டனர் . அத் தொழில் செய்யும் போது அவரகள் இடையே பேசுவது குறைவு. அவர்களை மேற்பார்ப்பது ஆண்கள் . பெண்கள் வேலை செய்யும்இடத்தில் ஆண் ஆதிக்கம் தலை தூக்கி நின்றது

****

வீரலட்சுமி பிறக்கும் முன்பே வீட்டில் அவளுக்கு அவ்வளவு வரவேற்பு இருக்கவில்லை. காரணம் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே ஸ்கான் செய்து பார்த்த போது பெண்குழந்தை என டாக்டர் சொன்னது அவளின் பெற்றோருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. “பெண்ணாகப் பிறந்தால் கிராமக் திலீபன் இயகத்தின் எதிர்ப்புக்கு எதிராக வேண்டி வரும் . நல்ல காலம் முதல் இரண்டு ஆண் குழந்ததைகளுக்குப் பின் பிறந்த முதல் பெண் என்பதால் அவளின் உயர் தப்பியது .

“என் மகன் இந்த கிராமத்தில் முருகேசு இவளை வளர்க்க என்ன பாடு படப் போறானோ” என்று முருகேசுவின் தாய் தெய்வானை ஆச்சியின் முணு முணுப்பு வேறு. டாக்டரிடம் கருவைச் சிதைக்க யோசனை முருகேசு கேட்டார். மாதங்கள் கூடிவிட்டபடியால் கருவைச் சிதைத்தால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்றார் டாக்டர்.

முருகேசுவின் மனைவி தனலக்ஷ்மிக்குப் பெண் குழந்தையென்றால் கொள்ள ஆசை. தான் பிறந்த பிறகு தான், தன் தகப்பனுக்கு வழக்கில் நீண்ட காலம் இழுபறி

பட்டுக்கிடந்த கிளிநொச்சியில் முப்பது ஏக்கர் வயலும் யாழ்ப்பாணத்தில் வீடுவளவும் கிடைத்தது என்று அடிக்கடி சொல்லி பெருமைப்பட்டுக் கொள்வாள். தன் மூத்த இரண்டு பெடியன்களும் வீட்டை தலைகரணமாக்குவதையும் அவர்களை தன்னால் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதையும் அவள் நினைத்துப் பல தடவை மனம் வருந்தியிருக்கிறாள். “நீங்கள் கொடுத்த செல்லத்தில் இரண்டு பெடியன்களும் என்றைச் சொல்லுக்கு மதிப்பு கொடுக்குதுகள் இல்லை” என்று முருகேசிடம் அடிக்கடி குறைபட்டுக் கொள்வாள் தனம். ஆசிரியாரான முருகேசு கல்வியை மதிப்பவர. அவருக்கு திலீபன் இயகத்தின் கொள்கை பிடியாது ..

சித்திரை மாதத்தில், மூலநட்சத்திரத்தில் ,வீரலட்சுமி பிறந்தபோது தெய்வானை பெத்தாச்சிக்கு அதிர்ச்சி. ஊர் சாஸ்திரி சதாசிவம், குழந்தையின் குறிப்பைப் போட்டுவிட்டு மூக்கில் விரலை வைத்தபடி யோசித்தார்.

“என்ன சாத்திரியார். என் மகளின் குறிப்பு எப்படியிருக்கு?” ஆர்வத்துடன் கேட்டார் முருகேசு.

“பெண் மூலம் நிர்மூலம். வேறு என்ன சாஸ்திரியார் சொல்லப் போறார் “ என்று பக்கத்தில் இருந்து பல்லி சொன்ன மாதிரி சொன்னாள் தெய்வானைப் பெத்தாச்சி.

“எனேய். நீ வாயை வைத்துக் கொண்டு சும்மாயிரு. உனக்குத்தான் ஜென்மத்துக்கு பொம்பிள்ளைப் பிள்ளைகள் எண்டால் பிடியாதே. “ என்றாள் தனம் .

“பிள்ளைக்கு என்ன பெயர் வைக்க யோசித்திருக்கிறியள் “? சாஸ்திரியார் குறிப்பைப் பார்த்து விரல்களால் எண்ணியபடி கேட்டார்.

“இவருடைய அம்மாவிடை பெயர் வீரம்மா. என்றை அம்மாவின்றை பெயர் லஷ்மி. இரண்டையும் சேர்த்து வீரலக்ஷ்மி எண்டு பெயர் வைக்க யோசிச்சிருக்கிறோம்” என்றாள் தனம்.

“அது நல்ல பெயர். பெண்ணின் சாதகம் நல்ல கலையம்சம் உள்ள சாதனை படைக்கக் கூடிய சாதகம். புதன் நல்ல இடத்திலை ஆட்சி பெற்றுப் போயிருக்குது. வருங் காலத்தில் படித்துப் புகழும் தனமும் பிள்ளைக்குக் கிட்ட வாய்ப்புண்டு. ஆனால்…” தான் சொல்ல வந்ததை முடிக்கமுடியாமல் இழுத்தார் சாஸ்திரியார்.

“ஆனால் என்ன? உண்மையை மறைக்காமல் சொல்லும்.” முருகேசு சாஸ்திரியாரைக் கிண்டினார்

“சொல்லுறன் எண்டு தப்பா நினைக்காதையள். பிள்ளைக்கு ஏழிலைச் செவ்வாய். சனி பார்வை வேறு. பத்து வயசு மட்டும் கொஞ்சம் கவனமாயிருக்க வேண்டும். ஒரு தத்துக்கும் இடமுண்டு. ஒவ்வொரு சனிக்கிழமையும் செவ்வாய்கிழமையும் தாய் சரி, தகப்பன் சரி விரதம் இருந்து கண்ணகி அம்மனை வேண்டிபூஜை செய்தால் நல்லது.”

சாஸ்திரியார் சொன்னது முருகேசுவின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்ட மாதிரியிருந்தது. முருகேசுவின் மனதுக்குள்

குழந்தை அற்ப ஆயுசுடன் போனால் என்ன?. கருவிலை தான் நினைத்த மாதிரி போயிருந்தால் என்ன எல்லாம் ஒண்டு தான் என நினைத்தார். பிள்ளை பிறந்த காலமோ என்னவோ அந்த வருடம் அவர் வயலில் விளைச்சல் அதிகம்.

வீரலட்சுமி வளரும் போதே வர்ண ஓவியங்களை கண்வெட்டாமல் பார்ப்பாள். பசியால் அழுகிற சமயம், வர்ணப்படம் ஒன்றை கையில் கொடுத்தால் போதும். பேசாமல் அதையே கண்வெட்டாமல் பார்த்து இரசித்தபடி இருப்பாள். ரேடியோவில் பக்தி பாடல்கள் போகும் போது காது கொடுத்து அசையாது கேட்டுக் கொண்டிருப்பாள். தன் சின்ன சிறு கைகளால் கை தட்டி இரசித்துச் சிரித்து மகிழ்வாள். மூன்று வயதைத் தாண்டியவுடன் அவளுடைய நடவடிக்கை எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக இருந்தது, வானொலியில் கேட்ட பக்திப்பாடல்களை ஒருவருடைய உதவியுமின்றி தானாகவே இனிமையான குரலில் பாடத் தொடங்கினாள். தனத்துக்குத் தன் மகளைப் பற்றி பெருமை . அடிக்கடி கணவனுக்குச் சொல்லி மனதுக்குள் பூப்படைவாள். இசையுடன் ஓவியம் வரைவதிலும் வீரலட்சுமி ஆர்வம் காட்டினாள். இரு அண்ணன்மாரின் புத்தகங்களை எடுத்து வாசிக்க முயற்சிப்பாள். அவள் கிராமத்து பாடசாலைக்குப் போய் கிராமத்தின் விதிகள் படி படிக்க முடியவில்லை . ஆசிரியராக இருக்கும் முருகேசு, வீட்டில் வைத்து வீரலட்சுமிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.அவளின் புத்திக் கூர்மையைக் கண்டு வியந்தார். தன் மகளுக்குக் கல்வி மேல் உள்ள பற்றுதலைக் கண்டு பல மைல்களுக்கு அப்பால் உள்ள நகரத்தில் இருக்கும் மகளிர்

கல்லூரியில் பஸ்சில் தன் மனைவியோடு சென்று படிக்கக் கிராமத்தின் சட்டத்துக்கு எதிராகச் செயல் படத் தொடங்கினார். வீரலட்சுமி புத்திக் கூர்மையையும் ஓவியத்திறமையையும் இசைத்திறமையையும் கண்டு அவள் படித்த மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் வியப்படைந்தனர். ஒரு குழந்தைக்குப் படிப்போடு, இரண்டு கலைகளில் திறமை இருப்பது அபூர்வம். அதுவும் பத்து வயதில் குழந்தைக்கு இசையிலும் ஓவியத்திலும் இவ்வளவு திறமையிருப்பது கடவுளின் வரப்பிரசாதம் எனப் பலர் பேசியது தனத்துக்கு தலை கால் தெரியாத சந்தோஷம்.. அந்த மாவட்டப் பள்ளிக் கூடங்களுக்கு இடையே நடந்த ஓவியப் போட்டியில் "தாயன்பு" என்ற தலைப்பில் ஒரு கால் முடமான கன்றுக் குட்டி தாயிடம் பால் குடிப்பதைத் தத்ரூபமாக வரைந்து முதல் பரிசை வீரலட்சுமி எட்டு வயதில் தட்டிக் கொண்டு போனது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. அதவுமில்லாமல் மாவட்டத்தில் நடந்த பாட்டுப் போட்டியிலும் அவளுக்கே முதல் பரிசு. கண்ணகி மான் கோயில் திருவிழாவில் குழந்தை வீரலட்சுமியின் தேவாரங்களையும், பாரதியார் பாடல்களையும் கேட்பதற்கே ஒரு தனிக் கூட்டம். பத்திரிகைகளில் பாராட்டி வீரலட்சுமியின் படத்துடன் அவள் வரைந்து பரிசு பெற்ற ஓவியம் பிரசுரமானது பலர் கவனத்தை ஈர்த்தது. இந்த சிறு வயதில் எங்கள் ஒரு பெண்ணுக்கும் இவ்வளவு திறமையா? என்று ஊர் கதைத்தது.

சில வருடங்களுக்கு முன் சதாசிவத்தார் தன் மகளின் குறிப்பைப் பார்த்துச் சொன்னது தனத்துக்கு நினைவில் வந்தது. மறு நிமிடம்

*அவர் எச்சரித்த "தத்தை" பற்றி நினைத்த போது அவள் மனம் பயத்தால் படபடத்தது.*

*"கண்ணகி அம்மா இவ்வளவு திறமையுள்ள ஒரு பெண்குழந்தையை எனக்குக் கொடுத்துவிட்டுப் பறித்துக் கொண்டு போகாதே" எனத் தினமும் தன் குல தெய்வமான கண்ணகி அம்மனை வேண்டினாள். விதி யாரைவிட்டது? வீரலக்ஷ்மியின் திறமை மேல் பொறாமை கொண்ட திலீபன் இயக்கம் கிராமத்தின் சட்டத்துக்கு எதிராக அவள் நடந்ததுக்கு அவளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத் தீர்மானித்தது . ஒரு நாள் கோயிலில் வீரலக்ஷ்மி பாடிவிட்டுத் திரும்பியபோது அவளைச் முக மூடி அணிந்தவர்கள் அவளைத் தாக்கினார்கள். தாக்குதலிலிருந்து பலத்த காயங்களுடன் அவள் உயர் தப்பியது அவள் செய்த புண்ணியம் .*

*நடந்ததை அறிந்த திருமணமாகாத நகரத்து மகளிர் கல்லூரி தலமை ஆசிரியை ஆனந்தி, முருகேசுவினதும் தனத்தினதும் சம்மதத்தோடு வீரலட்சுமியை நகரத்தில் தன் வீட்டில் தங்க வைத்து கல்லூரியில் படிப்பிக்கத் தீர்மானித்தாள். முருகேசு தம்பதிகள் தங்களின் திறமைசாலியான மகள் கண்ணகிபுரம் கிராமத்தில் வாழ்ந்தால் அவளின் உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம் எனத் தெரிந்து தலைமை ஆசிரியை ஆனந்தியின் வேண்டுகோளுக்குச் சம்மதம் தெரிவித்தனர் . வீரலட்சுமி கிராமத்தில் வாழாமல் நகரத்தில் வாழ்ந்து படிப்பைத் தொடர்ந்தாள். திலீபன் குழுவினால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. திலபன் இயக்கத்துக்கு தெரியாமல்*

வீரலட்சுமி கண்ணகிபுரத்துக்கு வந்து பெற்றோரை பார்த்து செல்வாள்.

****

காலம் உருண்டோடியது., வீரலட்சுமி கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்து அறிவியல் துறையில் முதல் நிலையில் பட்டம் பெற்றாள். பல்கலைக் கழகத்தில் அவளுக்கு விரிவுரையாளர் பதவி கிடைத்தும் அவளின் முழு நோக்கமும் தன் கிராமத்தில் வாழும் பெண்களைக் கிராமத்து ஆண் ஆதிக்கத்திலிருந்து மீட்க வேண்டும் என்பதே. அதனால் அரச பரிபாலன சேவை பரீட்சைக்குத் தோன்றி, சித்தி அடைடந்தவர்கள் பட்டியலில் முதலாவதாக வந்தாள். அவளின் நோக்கம் அறிந்த அரசும் சில பெண் இயக்கங்களும், அரசியல்வாதிகளும் கண்ணகி கிராமம் உள்ள மாவட்டத்துக்குப் பரிபாலன அதிகாரியாக நியமித்தனர்.

பதவி ஏற்று ஒரு வருடத்துக்குள் பெண் அரசியல் வாதிகள் ஆதரவைப் பாவித்து கண்ணகிபுரத்தில் ஒரு போலீஸ் நிலையமும், பெண்கள் பாடசாலையும் அமைத்தாள் .அதோடு இசை, நடனம் ஆகியவற்றைப் பெண்கள் கற்க ஒழுங்குகள் செய்தாள். அக் கிராமத்தில் வசிக்கும் படிக்காத ஐந்து வயதுக்கு மேல் உள்ள பெண்கள் கட்டாயம் கல்வி பயில வேண்டும் என்று கிராமத்தில் பல காலம் பெண்களுக்கு இருந்து வந்த கட்டுப் பாடுகளை நீக்கினாள். அவள் செயல்களால் திலீபன் இயக்கத்தின் ஆதிக்கம் தகர்த்தப் பட்டது. நாட்டின் சட்டத்துக்கு அமையக் கிராமம் இயங்கத் தொடங்கியது. பெண்களின்

குழந்தை பேறுக்கு கிராமத்தில் மருத்துவ வசதி வீரலட்சுமி செய்து கொடுத்தாள். பெண்களின் கைத் திறமையைப் பாவித்து வருமானம் தேட கைத்தொழிற்சாலை ஒன்றையும் உருவாக்கினாள். பெண்கள் பொங்கி வணங்கிய கிராமத்து கண்ணகிஅம்மன் கோவிலுக்கு அரசின் உதவியோடு புது கட்டிடமும் கோபுரமும் கட்டினாள், கோவில் கும்ப அபிசேகத்துக்கு நாட்டின் இந்து மத அமைச்சின் மந்திரி போயிருந்தார் .

வீரலட்சுமி சாதனைகளைக் கண்ட முருகேசு தம்பதிகளும், இனத்தவர்களும், ஏன் கிராமமே, பெருமைப் பட்டது . அவளின் சேவையையும் திறமையையும் கண்ட அரசு, வியந்து அவளின் மேல் படிப்புக்ககான புலமை பரிசு கொடுத்து, இங்கிலாந்துக்கு அனுப்பியதுமன்றி அவளுக்கு காமன்வெல்த் நாட்டு பெண்கள் சேவை விருதுக்கு சிபார்சு செய்தது .

முடிவுரை. பாகிஸ்தானில் இருந்த தலீபான்களுக்கு (Taliban) எதிராகப் பெண் கல்விக்காக போராடிய வென்ற மஹாலா (Mahala) என்ற பாக்கிஸ்தானிய சிறுமியின் கதையை இலங்கை சூழலில் கருவாக வைத்து புனைவும் கலந்து எழுதப் பட்ட கதை)

****

## *கதை 9*

## *என் காணி நிலம் வேண்டும்*

*(முகவுரை: மனித உரிமை மீறல்களில். மக்களுக்கு உரிமையான பாரம்பரிய காணிகளை அரசு ஆக்கிரமிப்பது உரிமை மீறலே. இக் கதை அதைக் கருவாக கொண்டது)*

*"காணி நிலம் வேண்டும் பராசக்தி ..." என்ற பாரதியாரின் உரிமைப் பாடல் கேப்பாப்புலவு குக்கிராமத்தில் உள்ள ஒரே ஒரு தேநீர் கடையில்1975 ஆம் ஆண்டில் ஒலித்துகொண்டிருந்த காலம் அது. இராசா என்ற இராசையாவின் தேனீர் கடையில் இருந்து வரும் இசையைக் கேட்க சில கிரமத்தவர்கள் வருவார்கள். பசுப்பாலும், ஆட்டுப் பாலும் கலந்த தேனீரும் , சுடச்சுட உளுந்து வடையும்m சுண்டலும் அக்கிரமத்தில் கிடைக்கும் இடம் ராசாவின் தேநீர் கடை ஒன்றே. கதலி. இதரை வாழைக் குலைகள் இரண்டு எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும். மூன்று போத்தல்களில் இனிப்புப் பண்டங்கள். தேனீர் விரும்பாதோர் தாகத்தைத் தீர்க்க கடையில் தொங்கும் செவ்விளனியை வாங்கிக் குடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும். புகைப்போருக்கு த்ரீ ரோஸ் சிகரெட். சோக்கலால் பீடி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட வை.சி.சி.கு சுருட்டு கூட அக் கடையில் இருந்தது, அவைற்றை கடைக்கு முன் போடப்பட்டிருந்த இரு வாங்குகளில் இருந்து மக்கள் சுவைப்பார்கள்*

*உழைப்பாளிகளுக்கும். விவசாயிகளும் . மீன்பிடி தொழிலாளிகளும். ஆடு மாடு மேய்போரும் வசிக்கும் கிராமம் கேப்பாப்புலவு. நந்திக் கடலோரத்தில் கடல் காற்று வீசும் கிராமம். வீரன் பண்டாரவன்னியன் வழிவந்த வன்னியர்கள் வாழும் முல்லைத்தீவு பிரதேசத்தில் அமைந்த கிராமம்.*

*அக்கிராமத்தின் குலதெய்வம் இரு மைல் தூரத்தில் தென் கிழக்கு திசையில் உள்ள வரலாறு படைத்த வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில். பல அற்புதங்களைச் செய்தவள் அப் பத்தினி தெய்வம். கஜபாகு மன்னன் சேரநாட்டில் இருந்து மாதகல் வழியாக நந்திக் கடல் என்று அழைக்கப்படும் வாவிக்கு அருகே தோற்றுவித்த கோவில் வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு பத்தாவது கோவில். பளை என்பது இருப்பிடத்தைக் குறிக்கும். 8.7 மைல்கள் நீளமும் 3.1 மைல்கள் அகலமும் உள்ள நந்திக் கடல் கரையோரத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் இறுதி ஈழப்போர் நடந்தது. அக்கிராமத்தில் சுமார் 140 குடும்பங்கள் 500 ஏக்கர் காணியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தனர்.*

*அமைதியாக வாழ்ந்த மக்கள் தாம் ஈழத்து இறுதி போரில் சிக்குப் படுவோம் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. பலர் போரின்போது உயர் இழந்தனர். தமிழ் ஈழத் தலைவர் நந்திக் கடல் ஓரத்தில் மரணத்தைத் தழுவினார் என்று சிங்கள அரசு சொன்னாலும் அதற்கு போதிய ஆதாரம் இல்லை என்கிறார்கள் ஈழத்து அனேக மக்கள் .*

*போர் 2009 இல் முடிந்ததும் சுமார் 60,000 வன்னி வாசிகள் பிறந்த நாட்டில் அகதிகளாய் வவுனியாவுக்கு அருகே உள்ள*

செட்டிக்குளத்தில் அமைந்த திறந்த வெளி மனிக் பண்ணையில், இராணுவத்தின் பார்வையில் வைக்கப் பட்டனர் அகதிகளுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பு இருந்ததா என பலரை குறுக்கு விசாரனை செய்தது இராணுவம்.

கேப்பாப்புலவில் தேனீர் கடை வைத்திருந்த ராசாவின் குடும்பமும் அகதிகள் முகாமில் போருக்குப் பின் வாழவேண்டி வந்தது. ராசாவின் குடும்பம் இராணுவதால் தீவிர விசாரனைக்கு உற்படுத்தபட்டார்கள்

ராசாவை குறுக்கு விசாரனை செய்த இராணுவக் கேப்டன் மதும பண்டார கேட்ட கேள்விகளுக்கு ஒளிவு மறைவு’ இன்றி தைரியமாக ராசா பதில் சொன்னான்.

“உன் பெயர் என்ன? அதிகாரத்தோடு கேப்டன் பண்டாரவின் முதல் கேள்வி ராசாவை பார்த்து பறந்தது

“இராசையா சேர்”

“உண்டை குடும்பத்திலை எத்தினை பேர்”?

“நானும் மனைவியும், மூன்று பிள்ளைகள். எல்லாம் ஐந்து பேர். ”

“குடும்பத்தில் எல்லோரும் இந்த முகாமிலா?

“இல்லை சேர். நானும் என் மனவியும் எனது இரு மகள்மார் மட்டுமே உயரோடு இந்த முகாமில் இருக்கிறோம். மகன் எங்களோடு இல்லை”

*“உன் மனைவி பெயர் என்ன”?*

*“பார்வதி”*

*உனக்கும் உன் மனைவிக்கும் என்ன வயசு”*

*“எனக்கு வயசு அறுபது. என் மனைவிக்கு வயசு ஐம்பத்தி ஆறு.”*

*“உன் பிள்ளைகள் பெயர்கள் என்ன”?*

*“மூத்தவன் சேரன். அடுத்தது நாச்சியார் கடைசி மகள் நல்லம்மா”*

*“உண்டை மகன் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து போரிட்டு இறந்தானா?*

*“அது எனக்குத் தெரியாது சேர். சேரன் குடும்பத்தை விட்டுப் போய் எட்டு*

*வருடங்களாகி விட்டது“*

*“எதற்காக அவன் வீட்டை விட்டு போனான்”?*

*“அவன் படிக்காததுக்கு நான் ஒரு நாள் கண்டித்தேன். கோபத்தால் வீட்டை விட்டு ஓடிப்போனான்”*

*“நீ உண்டை கிராமத்தில் என்ன வேலை செய்தனி”?*

*“தேனீர் கடை வைதிருந்தனான்”*

*“நீ போராளிகளுக்கு உணவு கொடுத்ததாக உன்னைப்பற்றி விசாரித்த போது எங்களுக்குத் தெரியவந்தது. அது உண்மையா?*

*"என் கடைக்கு பலர் வருவார்கள் போவர்கள். அதில் போராளிகள் யார் என்று அடையாளம் கண்டு நான் வியாபரம் செய்யவில்லை"*

*"எவ்வளவு காலம் அந்த கிராமத்தில் வாழ்கிறாய்"?*

*"எனது பரம்பரை பல ஆண்டுகளாக வாழ்ந்தவர்கள். எனது பூட்டனார் வீரத்தேவன், வன்னி மன்னன் பண்டார வன்னியனின் படையில் இருந்தவர். அவரின் சேவைக்காக மன்னன் கொடுத்தது கேப்பாப்பிலவு கிராமத்தில் மூன்று ஏக்கர் வயல் காணி. காலம் தொட்டு அந்த கிராமத்தில் அந்த காணியில் விவசாயம் செய்து, இரண்டு அறைகள் உள்ள வீட்டில் வாழ்ந்து வருகிறோம்".*

*"நீ வேறு தொழில் செய்தனியா"?*

*"வியாபரம் மட்டுமல்ல என் காணியில் என் மகள்மாரின் உதவியோடு காய்கறித் தோட்டம் செய்தனான். ஆடு> மாடு வளர்த்தனான்"*

*"உன் மகள்மார் இருவரும் என்ன செய்கிறார்கள்"?*

*"இருவரும் முல்லைத்தீவில் ஒரு ஸ்கூலில் படித்தவர்கள். இப்ப போரினால் படிப்பை நிறுத்தி விட்டார்கள்"*

*"உன் மகளில் ஒருத்தியான நல்லம்மா நல்லாக தையல் வேலை செய்வாளாமே உண்மையா?*

*“என் கடையில் கிடைக்கும் வருமானம் போதாததால் தேடி வந்த கிராம மக்களுக்கு ஆடை தைத்து கொடுத்து சம்பாதிப்பாள்.”*

*“உன் கிராம மக்கள். யாழ்ப்பாணக் குடா நாட்டில் இருந்து வந்து குடியேறியவர்களா”?*

*“இல்லை. என்னை போல் வன்னியர் வம்ச வழி வந்தவர்கள். பாரம்பரியமாக காணியில் வாழ்ந்து வருபவர்கள்”.*

*“நாங்கள் விசாரித்ததில் உன் மகள் நல்லம்மா போராளிகளுக்கும் யுனிபோர்ம் தைத்துக் கொடுத்ததாக அறிந்தோம். உண்மையா”?*

*“பிஸ்னஸ் என்று வரும் போது எந்த தையல் வேலை வந்தாலும் குடும்ப வருமானத்துக்காக அவள் செய்திருக்கலாம்”*

*“விசாரணையின் போது தெரியவந்தது உன் மனவியும் இரு மகள்களும் புலிகள் இயக்க போரளிகளுக்கு உணவு தயாரித்து கொடுத்தார்கள் என்று. அது உனக்குத் தெரியுமா”?*

*“விருந்தோம்பல் தமிழர் கலாச்சாரம். பசி என்று வீடு தேடிவந்தால் உணவு கொடுக்காமல் அனுப்புவது என் குடும்பத்தின் பழக்கமில்லை”*

*“உன்னை உன் சொந்த காணியில் மீள் குடியமர்த்தாமல் பக்கத்தில் உள்ள பகுதியில் சகல வசதிகளோடு நவீன கிராமத்தில் உன் சொந்தக் காணியை விட கூடிய பரப்பு உள்ள காணியில் குடியமர்த்தினால் போய் வாழ உனக்கு சம்மதமா”?*

''எங்களுக்கு நாங்கள் பாரம்பரியமாக வாழந்து வந்த காணி நிலம் தான் வேண்டும். என் பூட்டனாருக்கு வன்னி மன்னன் பண்டார வன்னியன் கொடுத்த விலை மதிக்க முடியாத காணி அது. அதை எங்களிடம் இருந்து பறிக்காதீர். பிரிட்டிஷ் ஆண்ட போது எங்கள் காணியை அவர்கள் எடுக்கவில்லை''

''திரும்பவும் உங்கள் காணிக்கு போவதில் அங்கு புலிகள் இயக்கத்தால் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று உனக்குத் தெரியுமா?

''எந்த ஆபத்தையும் நாம் எதிர்கொள்ள நாம் தயார். எனக்கு என் காணி நிலம் வேண்டும் திருப்பித் தாருங்கள். எங்களை எங்கள் சொந்த நாட்டில் அகதிகலாய் வைதிருக்காதீர்''

''நீ சரியான பிடிவாதக்காரனாக இருக்கிறாயே. உன் காணிக்கு அதன் மதிப்புக்கு கூடுதலாக அரசு பணம் கொடுத்தால் அதை நீ அரசுக்கு விற்கத் தயாரா?

''அரசு எவ்வளவு கோடி பணம் கொடுத்தாலும் என் பாரம்பரியக் காணியை நான் விற்கப்போவதில்லை. எங்கள் குல தெய்வம் வற்றாப்பளை அம்மன் எங்களைக் கைவிடமாட்டாள். சிங்களவர்களை போல் எங்களுக்கு பத்தினி தெய்யோ மேல் நம்பிக்கை உண்டு '' உறுதியாக ராசா சொன்னான். கலுபோவிலவுக்கு அருகே உள்ள நவகமுவைச் சேர்ந்த பண்டார ராசாவின் பதிலைக் கேட்டு அதிர்ந்து போனான். காரணம் அவனது கிராமத்தில் உள்ள பத்தினி கோவிலின் பக்தன் அவன்.

****

ஐநா சபையின் அழுத்தம் காரணமாக 2015 இல் பெரும்பாலோர் மீள் குடியேற்ற பட்டனர். கேப்பாப்பிலவு 140 குடும்பங்கள் தமது பரம்பரையாக வாழந்த காணிகளில் மீள் குடியேற்றம் செய்யப் படாமல் அருகே புதிய மாதிரி கிராமம் அமைத்து அதில் குடும்பங்களை அரசு குடியேற்றியது. பரம்பரையாக மக்கள் வாழ்ந்த கேப்பாப்புலவு 500 ஏக்கர் காணியை இராணுவம் அபகரித்து கண்ணி வெடிகளைச் சாட்டாக வைத்து காணிகளை திருப்பிக் கொடுக்க காலம் தள்ளிப் போட்டது. அக்காணிகளைக் கொடுக்காதுக்கு வேறு காரணமும் இருந்தது. எங்கே அந்தக் காணியில் புலிகள் இயக்கம் போரில் மடிந்த தம் மாவீரர் நினைவாக கல்லறைகள் அமைத்து விடுவார்களோ என்ற அச்சம் சிங்கள அரசுக்கு இருந்தது. ஒருபோதும் இல்லாத ஒரு புத்த கோவில் அக்கிராமத்தில் சிங்கள இராணுவதால் அமைக்கப்பட்டது. மீள்குடியேற்றம் தொடர்பில் தொடர்ந்தும் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகள் தரப்படாமல் ஏமாற்றப்பட்டு வருவதாக மக்கள் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர். என்று தோன்றும் அவர்கள் வாழ்வில் விடிவெள்ளி?

****

***(உண்மையும் கற்பனையும் கலந்து உருவாக்கப் பட்டது)***

## *கதை 10*

## *குறிப்பும் புளிய மரம்*

## *(ஒரு நில அளவையாளரின் அனுபவம்)*

*நான் இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் (Surveyor General Department) வேலை செய்த ஒரு நில அளவையாளன். முப்பது வருட அனுபவம் எனக்கு .*

*இலங்கையில் பல காடுகளில் நில அளவை வேலை செய்ததால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தாராளமாகப் பேசுவேன். வடக்கில் உள்ள வன்னிக் காட்டில் மூளை முடுக்குகள் எல்லாம் எனக்கு அத்துப்படிப் பாடம் நிலஅளவை செய்வதுக்கு எனக்கு உதவியாளர்களாக நால்வரும் , ஒரு சமயல்காரனும் அரசு நியமித்துள்ளது. நால்வருக்கு தனி கூடாரத்தில் அவர்களே சமைத்து சாப்பிடவேண்டும். எனக்கும் என் சமையல்காரனுக்கும் தனிக் கூடாரம். காடுகளை அளப்பது அவ்வளவு இலேசான காரியம் இல்லை.*

*அக்காட்டில் யானைகள் போன்ற மிருகங்கள், பாம்புகள் தாக்குதல்களை எதிர் நோக்க வேண்டி வரும். பல தடவைகள் யானைகள் என் கூடாரத்துக்கு அருகே வந்து பிளிறி, என்னைப் பயமுறுத்திப் போகும். வன்னியில் A9 பாதை ஓரத்தில் உள்ள மரத்தில் தானாகவே தோன்றிய முருகண்டிப் பிள்ளையார் கோவில் ஐயருக்கு என் யானைப் பிரச்சனையை சொன்னபோது அவர் எனக்கு ஒரு சிறு பிள்ளையார் சிலையைத் தந்து நான்*

இருக்கும் கூடாரத்துக்குள் சிலையை வைத்து வணங்கும் படிச் சொன்னார் . அதன் படி செய்தேன். கூடாரத்துக்குள் ஒரு பிள்ளையார் சிலை வைத்து பூஜை செய்து வந்த காரணமோ என்னவோ யானைகள் என் கூடாரத்தைத் தாக்கவில்லை என்பது என் நம்பிக்கை.

வன்னிக் காட்டில் பாம்புகளுக்கு குறைவில்லை . அதனால் பல நாக தம்பிரான் கோவில்கள் வன்னியில் உண்டு பலர் பாம்பு கடித்து இறந்துள்ளார்கள். எனது உதவியாளர் ஒருவரை ஒரு நாள் பாம்பு தீண்டியது . நாங்கள் இருந்த கிராமத்தில் உள்ள பாம்பு கடி வைத்தியரிடம் உடனே அவரை கூட்டிச் சென்று காட்டிய போது, அவர் பாம்பு தீண்டிய இடத்தில ஒரு கருப்பு நிறக் கல்லை சில நிமிடங்கள் வைத்து எதையோ வாயுக்குள் முணுமுணுத்து, அதன் பின் மூலிகை இலைகளின் சாறு அவருக்கு குடிக்கக் கொடுத்து குணப் படுத்தினார். சிலர் பாம்பு கடித்த இடத்தில் வாயால் கடித்து, இரத்தத்தை உறிஞ்சு எடுத்து பல தடவைகள் துப்புவார்கள் . அதன் பின் வைத்தியசாலையில் வைத்தியம் நடக்கும் .

காட்டில் வேலை செய்த போது சுவைத்து உண்ட. காட்டு சேவல் , மான், காட்டு பன்றி இறைச்சிகளை இன்றும் என்னால் மறக்க முடியாது . நான் குளித்தது குளத்தில் . உணவு உண்டது தாமரை இலையில் . சுவைத்த சோற்றின் நெல் வன்னி வயல்களில் விளைந்தவை . வன்னிப் பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவலாகக் காணப்படுகின்றன. ஏனென்றால் மக்கள் காட்டில் வாழ்வதால் நோயாளிகள் மலேரியா, காலரா போன்ற

நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு தடவை நுளம்பு கடித்து மலேரியா நோயால் பாதிக்கப் பட்டு மிக கசப்பான மருந்து அருந்திய அனுபவம் எனக்கு உண்டு. அதனால் மலேரியா நோயில் இருந்து என்னைப் பாதுக்காக்கும் தெய்வம் கொசு வலை மட்டுமே. என்னை மலேரியா நோயில் இருந்து காப்பாற்ற கொசு வலைதொன்றை அரச செலவில் கட்டிலோடு எனக்கு வாங்கிக் கொடுத்திருந்தது

வன்னியில் பிரதான ஆஸ்பத்திரி கிளிநொச்சியில் அமைந்துள்ளபோதும் அங்கு சத்திர சிகிச்சைகளுக்கான வசதிகள் கிடையாது

****

வன்னியில் வேலை செய்த காலத்தில் பல ஊர்வசிகளை சந்தித்தேன் அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள். ஒரு காலத்தில் இலங்கையின் நெற் களஞ்சியமாக வன்னி திகழ்ந்தது . அந்த வன்னிவாசிகளில் ஒருவன் முத்தையன் என்ற ஒரு விறகு வெட்டி. வேட்டையும் ஆடுவான் . அவனைக் ''முத்தன்'' என்று வன்னிவாசிகள் அழைத்தனர் . அவனுக்கு முத்து போன்ற பற்கள், அதோடு காட்டில் உள்ள பழங்களையும். மயில் இறகுகளையும் தாமரை இலைகளையும் பறித்து வாரம் இரு முறை கூடும் கிராமச் சந்தையில் விற்பவன். அது தான் அவனின் தொழில். கிராமச் சந்தையில் முத்தனை ஒரு நாள் நான் சந்திக்க நேரிட்டது

“என்ன முத்தன் எனக்கு ஒரு கட்டுத் தாமரை இலையும், கிழங்கும், பாலப் பழமும் தரமுடியுமா “? நான் முத்தனைக் கேட்டேன்.

“இதோ எடுத்துக் கொள்ளுங்கள ஐயா”; விலையைச் சொன்னான்.: நான் பேரம் பேசாமல் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்தேன், கரணம் அவனிடம் வன்னிக் காட்டைப் பற்றி எனக்கு பல விஷயங்கள் அறியவேண்டி இருந்தது

“முத்தன், வன்னிக் காடு அடர்த்தியானது. நீ அக்காட்டில் ஒரு பாதை வழியே போனால் எப்படி சரியான் பாதயில் வீடு திரும்புவாய்”?

“போகும் பாது இலை கோப்புகளை கொய்சு அடையாளமாக நிலத்தில் போட்டு செல்வேன். திரும்போது அதை பார்த்து வீடு திரும்புவேன் :

“காட்டில் உன்னை பாம்பு கடித்த்துண்டா””

“அது ஒரு தனி அனுபவம் ஐயா. ஒரு சமயம் நாக பாம்பு ஏன்னைக் கடித்து நான் உயிர் தப்பியது நாக தம்பிரான் கிருபை. விறகு வெட்டி களைத்து ஒரு மரத்தடியில் தூங்கி விட்டேன். நான் நித்திரையாக இருக்கும்போது ஒரு நாக பாம்பு என் காலில் தீண்டி விட்டது . என் அதிர்ஷ்டம் நான் படுத்த இடதிற்கு அருகே ஒரு கட்டேறும்பு புற்று இருந்தது எனக்குத் தெரியவில்லை. அந்த புற்றில் உள்ள எறும்புகள் என்னைக் கடித்து என்உடலில் உள்ள விஷம் எல்லாம் போய்விடது ,என் உயர் தப்பியது. பாவம் எறும்புகள் இறந்து கிடந்தன”

*"நீ விறகு வெட்டுபபவன் ஆயிற்றே. உனக்கு வன்னிக்க காட்டில் தெரியாத மர வகைகள் இல்லை அப்படி தானே'' .*

*''பல விதமமான் மரங்கள் உண்டு காட்டில், முதிரை, பாலை. காட்டு வேம்பு. நாவல்.. வில்வ மரம், பூவரசு, அருமையாக சில கருங்காலி . ஆலமரம். இலுப்பை . புளியமரம். பனை ஆகியவற்றை சொல்லலாம்."*

*''நான் விரும்பி உண்ணும் வன்னிக்காட்டு பழம் மிகவும சுவையானமஞ்சள் நிற பாலைப் பழம் அந்தப் பழத்தை தரும் மரத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லேன்''.*

*''இலங்கையில் பாலை மரங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் வட மத்திய பகுதிகளிலும் தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களிலும் காணப்படுகின்றன.*

*இலங்கையில் தொடர்வண்டி சேவை தொடங்கியக் காலங்களில் பாலை மரப்பலகைகளைப் பயன்படுத்தியே தொடர்வண்டி செல்வதற்கான தண்டவாளங்களுக்கான படுக்கைக் கட்டைகள் இட்டனர். ஆங்கிலேயர் இதனை "இலங்கை இரும்பு" (Ceylon Steel or Ceylon Iron wood) என்றும் அழைத்தனர். இருப்பினும் ஆங்கிலேயர் காலங்களில் போட்ட படுக்கைக் கட்டைகள் இன்றும் உக்கிப்போகாமல் உறுதியுடன் இலங்கையில் பல்வேறு தொடர்வண்டிப் பாதைகளிலும் காணப்படுகின்றன.*

இலங்கையின் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற கட்டிடங்களின் கூரையின் தேவைக்கு பெரும்பாலும் பாலை மரப்பலகைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை நூற்றாண்டுகளாக உக்கிப்போகாமல் உழைக்கக்கூடியன.

இலங்கை வடக்கு கிழக்கு காடுகளில் வளரும் பாலைமரங்களை தறிப்பதற்கு அனுமதிப் பத்திரம் பெறவேண்டும். ஆனால் அனுமதிப் பத்திரம் பெறாமல் பாலைமரங்களை தறித்து கடத்தலில் ஈடுபடுவோர் உள்ளனர். இதனை கட்டுபடுத்துவதற்கு பொறுப்பான காட்டு இலாகா அதிகாரிகள் தடுத்து நிறுத்த முனைந்தாலும், இந்த கடத்தல்கள் தொடர்ந்த வண்ணமே இருகிறது “

“அதுசரி உனக்குத் தெரிந்த உயரமான மரம் எது"? நான் கேட்டேன் .

“இது தெரியாதா ஐயா உங்களுக்கு? குளத்தருகே உள்ள “குறிப்பம் புளிய மரம்.

பெரிய பரந்தனில் நூறாண்டுகள் நிறைந்த, பனைகளை விட உயர்ந்த புளியமரம் ஒன்று உண்டு. காட்டில் எங்கிருந்தாலும் ஒரு சிறிய மரத்தில் ஏறிப்பார்த்தால் அம்மரம் தெரியும். அதன் திசையை நோக்கி நடந்தால் எவரும் தவறாது வீடு போய் சேரலாம்.. நாள் வழிகாட்டும் மரம் குறிப்பம் புளியின் அருமை

உணர்ந்தவர்களைப் பேய் பிடிப்பதில்லை என்ற நம்பிக்கை ஊர்வசிகளுக்கு உண்டு.

ஒரு புளியமரம் சராசரி 80 அடி உயரத்துக்கும் 40அடிகளுக்கு பரந்து வளரக் கூடியது. சுமார் ஆறு ஆண்டுகளில் காய்க்தத தொடங்கி விடும் 300ஆண்டுகுகு மேல் வாழக் கூடியவை. இந்த குறிப்பம் புளிய மரம் பாண்டர வன்னியன் காலத்து மரம்" என்று கருப்பன் சொன்னான் .

எனது கணிப்பின் படி கருப்பன் காட்டிய மரத்தின் உயரம் நூறு அடி மட்டில் இருக்கும். ஒரு பெரிய அரக்கனை போல் அது காட்சி கொடுத்தது"

முத்தன் மேலும் சொன்னான் "பலருக்கு நிழல் கொடுக்கும் மரம் அது . அம்மரத்தைத் தழுவி செல்கிறது இரு கிரவல்பாதை அந்த மரத்தில் இலை தெரியாமல் காய்க்கும் புளியங் காயை ஊர்வாசிகள் சமையலுக்குப் பாவிப்பார்கள் , அந்த மரத்தின் கீழ் ஒரு வைரவர் உண்டு. பக்கத்தில் உள்ள வயலில் வேலை செய்யும் பெண்கள் அந்த மரத்தில் சேலையில் ஏணைகட்டி தம் குழந்தைகளை தூங்க வைப்பர். காட்டில் நடந்து செலவோரை பேய் பிடிக்காமல் இருக்கும் காவல் தெய்வம். வைரவருக்கு வருடத்துக்கு ஒரு தடவை ஊர்வசிகள் பொங்கிப்படைப்பார்கள் ஒரு குளத்துக்கு அருகே இருப்பதால் சில காலங்களில் வெளி நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வரும் வெள்ளை நிற பறவைகள் அந்த மரம் முழவதையும் ஆக்கிரமித்துக் கொள்ளும்".அதனால் அந்த பச்சைநிற மரம் வெள்ளை நிற மரமாகக் காட்சி தரும்.

*“அது என்ன கையில் என்ன வைத்திருக்கிறாய்’?*

*“இது ஈச்சங்குருத்து. இது மிகவும் ருசியானது மாசி, பங்குனி மாதங்கள் ஈச்சங்குருத்து வெட்ட உகந்த காலமாகும். “*

*“அது சரி மான் பன்றி இறைச்சி வேட்டைஆடி கொடுக்கிறாயே உன்னிடம் துவக்கு இருகிறதா”?*

*அவன் சிரித்தபடி, “விதானையாரின் லைசன்ஸ் உள்ள துவக்கை சிலசமயம் அவருக்கு இறைச்சி தேவை படும்போது வேட்டையாடக் கொடுப்பார்” என்றான் முத்தன்.*

****

*அரசசேவையில் இருந்து நான் ஓய்வு பெற்று சில வருடங்களுக்குப் பின்னர் பரந்தனுக்கு சென்ற போது என்னை ஒரு காலத்தில் கவர்ந்த குறிப்பம் புளிய மரத்தை பாரக்க சென்ற போது எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. மரம் இருந்த இடத்தில ஒரு இராணுவ முகாம் இருத்தது. அந்த முகாமை சுற்றி முள் வேலி. கிரவல் பாதை இராணுவத்தின் வாகனம் வசதியாக போய் வர அகண்ட தார் போட்ட பாதையாக மாறி இருந்தது. புலம் பெயர்ந்த பறவைகளையும், வைரவரையும் காணவில்லை. புளிய மரம் இருந்tத இடத்தில சுமார் இரண்டடி உயரமுள்ள அரசமரமும் , ,அதன் கீழ் புத்தர் சிலையும் இருந்தது பக்கத்தில் உள்ள வயல்கள் கவனிப்பார் அற்று கிடந்தன. அரச இராணுவத்தின் ஆக்கிர்மிப்பால் அந்த இயற்கையின் அழகு சீரழிந்து கிடந்தது .பேயுக்கும், மிருகங்களுக்கும் பயந்த*

*ஊர்வாசிகள் இப்போது இராணுவத்துக்குப் பயப்படவேண்டி இருந்தது.*

***(யாவும் உண்மையும் புனைவும் கலந்தது)***

****

## *கதை 11*

## *அரசமரத்து ஆவி*

*இயற்கையின் சக்திகள் பசுமையான மரங்களில் குடி கொண்டிருப்பதாக மனிதன் நம்புகிறான். கனடா பூர்வகுடி மக்கள் மரங்களை தெய்வமாக வழிபடுகிறார்கள். இது இந்தியாவிலும் இலங்கையிலும் மர வழிபாடாய் மலர்ந்தது. நீங்கள் எந்தத் தெய்வக் கோயிலுக்குச் சென்றாலும் அங்கு அந்தத் தெய்வத்திற்கென்று ஒரு மரம் இருப்பதைக் காணலாம். இம்மரம் தலவிருட்சம் என்று கூறப்படும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு மரம் உண்டு. சிவனுக்கு ஆலமரம். கணபதிக்கு அரசு. அம்மனுக்கு வேம்பு.*

****

*திருகோணமலையில் இருந்த தென் மேற்கே சுமார் 50 கிமீ தூரத்தில். உள்ள கிராமம்" பதவிய". 6400 எக்கர் பரப்பு அளவுள்ள பதவிய குளம் மகாசேன மன்னனால் கிமு 3 ஆம் நூற்றாண்டில் கட்டப்பபட்டது. சோழர் இலங்கையை ஆண்ட 11ஆம் நூற்றாண்டில் செழித்து இருந்த பகுதி. ஒரு காலத்தில் தமிழர்கள் அதிகமாக' வாழந்த ஊர். பதவிய. 1948 ஆம் ஆண்டுக்குப் பின் சிங்கள குடியேற்றத்தால் கிராமமாக மாறிது. அதனால் பதிவாவி ( வாவி இருக்கும் ஊர்_ என்ற தமிழ் பெயர் மாறி பதவிய என்ற சிங்களப் பெயராயிற்று வடக்'கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் எல்லைகள் சந்திக்கும் ஊர்.*

அவ்வூர் வன்னியில் அமைந்ததால் அவ ஊர் மக்கள் பிள்ளையாரை தெய்வமான வழிபடுபவர்கள். யானைகளின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கவே அரசமரத்து பிள்ளையார் என நாமம் சூட்டி வழிபட்டனர் .

அக்கிராம்ந்தில் இருப்பது ஒரே' ஒரு நாற்சந்தி. அதன் இடது பக்கத்தில் பாதை' ஒரமாக ஓங்கி வளர்ந்த அரசமரம். ஆரம்பத்தில் அக்கிராம இந்துக்கள் அரசமரத்தின் கீழ்யுள்ள கணபதி கற்சிலை பதவிய குளத்தில் கண்டேடுத்தாகவும், சோழர் காலத்தில் பதவியாவில் கட்டிய கோவில், போர்த்துகேயர் கோவிலை கொள்ளை அடித்த போது, கோவில் குருக்கள் பாதுகாப்பு கருதி பிள்ளையார் சிலையை குளத்துக்குள் வீசி இருக்கலாம் என்று மக்கள் பேசிக் கொண்டனர்,

பௌத்தர்களான சிங்களவர்கள் ஒரு புத்தர் சிலையை பிள்ளையாருக்கு துணையாக, ஐம்பது அடி தூரத்தில் வைத்து புத்தரையும் கணபதியையும் வணங்கினர் .

ஒற்றுமையாக பதவியாவில் வாழ்ந்த இரு இனங்களுக்கிடையே வதந்திகளால் இனக்கலவரம் 1958 இல் வெடித்தது. அக் கிராமத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்த தொழில் அதிபர் சுந்தரமூர்த்தி சிங்களவன் ஒருவன் வெட்டி பிள்ளையாருக்கு முன் கொலை செய்தான்.. அப்போது புத்தர் சிலை அரசமரத்தின் கீழ் இருக்கவில்லை. இருந்திருந்தால் அவர் கண்ணீர் விட்டிருப்பார். அந்த அரசமரத்தைச் சுற்றி சலவை கற்கள். அதில் இருந்து வம்பு பேச உகந்த இடமாக இருந்தது. இரவில் அக்கற்களில் தூங்குபவர்களும் உண்டு அப்படித் தூங்கிய

சிங்களவன் ஒருவன் காலையில் விழித்து எழும்பவில்லை. அரசமரத்தில் உள்ள சுந்தரமூர்த்தியின் ஆவி அவனைப் பழி வாங்கிவிட்டது என்று வதந்தியை ஊர் ஜனம் பரப்பி' விட்டது. அந்த மரணத்தின் பின் அக் கற்களில் இருந்து வம்பு பேசவோ அல்லது தூங்கவோ பின் ஊர் வாசிகள் வாங்கினார்கள். அனால் பிள்ளை வரம் வேண்டி அரசமரத்தை தமிழ். சிங்கள பெண்கள் சுற்றி வரத் தயங்க வில்லை.

****

அன்பழகன் (அன்பு) தாவர இயல் பட்டதாரி, 20 வருட ஆசிரியர் அனுபவம் உள்ளவர். எதையும் அறிவியல் ரீதியாக சிந்திப்பவர். திருகோணமலை. கிண்ணியா. மூதூர் வவுனியா ஆசிய இடங்களில் உள்ள கல்லூரிகளில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றி, பதவியாவில் உள்ள கல்லூரிக்கு வந்தவர். தலமை ஆசிரியராக பதவி உயர்வு கிடைத்தபடியால் மாறுதலை அவரால் நிராகரிக்க முடியவில்லை. அவரோடு ஆசிரியராக வேலை செய்த குணத்திலக்கா (குணா ) என்ற பட்டதாரி சிங்கள ஆசிரியர், வெகு விரைவில் அன்பழகனின்' நண்பரானார். இருவரும்' மாலை நேரங்களில் பதவியா கிராமத்தின் இயற்கையை' இரசித்தவாறு இரு மைல்கள் வாவிக் கரைமீது நடப்பார்கள். நடந்த களைத்துப் போய் அரசமரத்து அருகே உள்ள தேனீர் கடையில் இளநீர் குடித்து விட்டு அரசமரக் கற்களில் வந்து' அமர்ந்து தமது வேலை அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள். ஓங்கி சடைத்து வள்ர்ந்த அரசமரம், அதன் அருகே உள்ள பிள்ளையார், புத்தர் சிலைகள்

அன்பழகனின் கவனத்தை ஈர்த்தது. அவரை சிந்திக்க வைத்தது. இரு சிலைகளையும் பார்த்து அன்பழகன் கெக்கட்டம் விட்டு சிரித்தார்

“என்ன அன்பு சிலைகளைப் பார்த்து ஏன் சிரிக்கிறீர்”? குணத்திலக்க கேட்டார்.

“இல்லை குணா இந்து, பௌத்த மதங்களுக்கு இடையே எவ்வளவு ஒற்றுமை பார்த்தீரா? குணா இந்து’ மதத்தில் இருந்து பிறந்தது தான் பௌத்தம். இரண்டும் கர்மாவை பற்றியும், ,மறு பிறப்பு பற்றியும் சொல்கிறது. இந்து மதத்தின் படி கணபதியின் மாமன் விஷ்ணு’. விஷ்ணுவின் மறு அவதாரமே புத்தர் என்று என் அம்மா சொல்லிக் கேள்விப் பட்டனான். இந்த அழகிய சடைத்த அரச மரத்தின் நிழலில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ரசித்து கொண்டு இருக்கிறார்கள். சில பெண்கள் மரத்தை சுற்றி வந்து கணபதிக்கு பால் வார்த்து, புத்தருக்கு தாமரை பூ வைத்து கும்பிட்டு செல்கிறார்கள். என்ன தமிழர் சிங்களவர் ஒற்றுமை பார்த்தீரா, உம்மையும் என்னையும் போல்"

“அன்பு, நான் இந்த’ ஊர் வாசி. நீரோ திருகோணமலை வாசி உமக்கு இந்த மரத்ததின் சரித்திரம் தெரியாது. இந்த; மரத்தின் கீழ், இரு நூறு வருடங்களுக்கு’ முன் பதவிய குளத்தில் கண்டு எடுக்கப் பட்ட கணபதி தெய்யோவின் சிலை இது . அதன் பின்பு தான் அரசமரத்துக்கு’ கீழ் புத்தர் வந்தவர். இந்த சந்தியில் 1958 இல் நடந்த இனகலவரத்தின் போது’ பதவியாவில் இருந்த பிரபல பிஸ்னஸ்மன் சுந்தர் மூர்த்தி, வெட்டிக்’ கொலை செய்யப் பட்டார். அவர் என் நண்பர். நல்ல மனுசன். அதன் பின்; இந்த

*அரச மரத்தில் அவரின் ஆவி குடிபுகுந்து விட்டது'' குணா கவலையோடு சொன்னார்.*

*''நீர் அந்த வதந்தியை நம்புறீரா குணா''? அன்பு குணாவைக் கேட்டார்.*

*''என் இல்லை. இனக்கலவரம் நடந்து சில மாதங்களுக்குப் பின்; ஒரு நாள் இந்தக் கல்லில் இரவில் படுத்திருந்த ஒருவர் காலையில் எழும்பவே இல்லை. அவர் மரணத்துக்கு இந்த அரசமரத்தில் உள்ள சுந்தரமூர்த்தியின் ஆவிதான் காரணம் என்ற வதந்தி பரவத் தொடங்கியதால் இந்த கல்லில் இரவில் ஒருவரும் தூங்குவது கிடையாது'' என்றார் குணா.*

*''நான் இந்த ஆவி கதையை நம்பவில்லை குணா''*

*''. நீர் தான் தாவர அறிவியலில் நிபுணராச்சே. விளக்கம் சொல்லுமன்''*

*''மரங்களில் முக்கியமான மரம் அரசமரம் அம்மரத்தை வணங்ககுவதற்கு பல காரணங்கள் உண்டு அரச மரத்தின் வேரில் இருந்து அதன் இலைகள் வரை மருத்துவ பயன் உள்ளது; பல விதமான நோய்களை குணமாக்கக் கூடியது. அரச மரத்தின் முக்கியத்துவத்தை நமது பழங்கால முனிவர்கள் அறிந்திருந்தனர். காரணம், இதை தேவதாரு மரம், கடவுளின் தெய்வம். என்று வணங்கினர். கிமு 1300 இல் இருந்த இந்து நதி பல்லத்; தாக்கு நாகரீகம் பற்றி கேள்வி படிருப்பீரே''*

*''ம் ..வாசித்தனான்.. மேலே சொல்லும் அன்பு''*

*"அந்த நாகரீகத்தின் அகழ்வாய்வின் போது அரசமரத்தின் பயன் கண்டறியப் பட்டுள்ளது.. தமிழ் மொழியில் அரசமரம் என்றும் ஆங்கிலத்தில் பீப்பல் (Peepal) என்று அழைக்கிறார்கள் மரத்தை வணங்குகின்றனர். குழந்தைள் இல்லாத பெண்கள் சுற்றிச் சுற்றி வந்து அதன் ஆசீர்வாததைப் பெற்றால் விரும்பிய காரியமோ அல்லது குழந்தைகள் பெற முடியும் என்பது தோண்டு தொட்டு இருந்து வரும்' நம்பிக்கை.. விஞ்ஞான ரீதியாக, அந்த மரத்தின் சாறு குழந்தையை வயிற்றில் சுமக்கும் பலத்தை கொடுக்கிறது. இந்த அற்புதமான மரத்தின் மிக முக்கியமான மதிப்பு என்ன வென்றால், பாம்பு கடியால் இறக்க இருக்கும் ஒருவரை குணப்படுத்த முடியும். அரச மரம் சிறந்த மாற்று மருந்தாக இருப்பதாக அறிவியல் ஆராய்ச்சி கூறுகிறது நீர், காற்று, சத்தம் மாசுபாட்டை மரம் நீக்க வல்லது*

*"அதுசரி அன்பு இரவில் இந்த; மரத்தின்' கீழ் தூங்க கூடாது என்கிறார்களே?"*

*பகல் நேரத்தில், சூரிய ஒளியின் போது தாவரங்கள் கரியமில வாயுவை (Carbon diooxide) பயன்படுத்துகின்றன மற்றும் ஒளிச்சேர்க்கை ( Photo synthesis) செயல்பாட்டில் கரியமில வாயுவை உள் எடுத்து பிராணவாயுவை (Oxygen) வெளியிடுகின்றன. ஆனால் இரவில், தாவரங்கள் ஒளிச்சேர்க்கை செய்யாது, அதனால் அவை கரியமில வாயுவைப் பயன்படுத்த முடியாமல் போகலாம், இது மேலும் காற்றில் உள்ள கரியமில வாயுவை அதிகரிக்கும். இரவு நேரங்களில் மரங்கள் பிராணவாயுவை உள் எடுத்து கரியமில வாயுவை*

*விடுவிக்கின்றன. அரசமரத்தின் கீழ் தூங்கினால், காற்றில் கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கும். அகவே அது நிட் சயமாக ஆரோக்கியத்தை பாதிக்கும். எனவே இரவில் மரங்கள் கீழ் தூங்குவதை தவிர்க்க வேண்டும். அரசமரத்தின் கீழ் படுத்த. அவர் மூச்சுத்திணறல் பாதிக்கப்பட்டிருக்கிறார்.. அவர் மார்பு மீது அதிக எடையை உணர்ந்து ஹார்ட் அட்டாக் ஏற்பட்டிருக்கலாம். அரசமர ஆவிக்கும் அவர் மரணத்துக்கும் தொடர்பு இல்லை. இந்த சம்பவத்தை, சில கிராமப்புற மக்கள் கற்பனை செய்து, அரசமரம் அல்லது ஆல மரங்கள் கீழ் தூங்கினால் பேய்கள் வந்து தங்கள் மார்பில் உட்கார்ந்து விடும் என அஞ்சுகின்றனர். இது தான் அறிவியல் விளக்கம். இதை புரியாது பேய்; ஆவி, முனி கதைகளை பரப்புரார்கள் "இரவில் கூட பிராண வாயுவை வெளிப்படுத்தும் ஒரே மரம் அரச மரமாகும்." அன்பு அறவியல் விளக்கத்தை சொன்னார்.*

*"அரச மரத்துக்கும் ஜோதிடத்'துக்கும் தொடர்பு உண்டு என்கிறார்கள் அது உண்மையா அன்பு"?*

*"எனக்கு ஜோதிடம் பற்றி அவ்ளவுக்கு தெரியாது. என் அம்மா சொன்னவ அரச மரம் வியாழன் கிரகத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. என்று. நன்மதிப்புள்ள பெரிய கிரகம் வியாழன். அதனால் வியாழ சுகம் உண்டு என்பார்கள். அரச மரமும் நல்ல பயன்களைத் தரும் பெரிய மரம் அதனல் இரண்டுக்கும்' தொடர்பிளது என்று கருதுகிறார்கள். அரச மரத்தின் சுவாரஸ்யமான அம்சம் இது எங்கும் வளரும் மரம்,"*

*"கௌதம புத்தர் அரசமரத்தின் கீழ் முக்தி பெற்றதால். புத்த சமையத்தவர்கள் மரத்தை தெய்வமாக கருதுகிறாராகள்'' என்றார் குணா*

*''அது தெரியும் குணா அதனால் தான் இலங்கையில் அரசமரம் வளர்ந்த இடமெல்லாம் புத்தர் சிலையை அதன் கீழ் வைத்து விடுவார்கள். எல்லாம் நம்பிக்கை. சரி இருட்டு படுகுது. இங்கை இருந்தால் ஒரு வேளை உமது நண்பர் சுந்தர மூர்த்தியின் பேய் எங்களையும் பிடித்து விடும், வாரும் நாங்கள் வீட்டுக்குப் போவோம்.'' என்று நக்கலாக சொல்லியபடி அன்பழகன். குணதிலக்காவை அழைத்துக் கொண்டு அரசமராத்தை விட்டுப் புறப்பட்டார்.*

****

## *கதை 12*

## *கொல்லி வாய் பிசாசு*

*வன்னியில் மணியம் குளம்., அக்கராயன் குளத்துக்கு மேற்கே, அடர்ந்த ஈச்சம் காட்டைத் தழுவிய ஒதுக்குப் புறக் கிராமம். அக்கிராமத்தின் மேற்கு திசையில் உள்ள; அடர்ந்த காட்டில் சடைத்து வளர்ந்த முதிரை, கருங்காலி, பாலை, காட்டு வேம்பு மரங்களுக்கும் ஈச்சம் பற்றைகளுக்கும் குறைவில்லை.. அந்த மரங்களின் அடர்த்தியான மரச் சோலையில் ஒரு வைரவர் கோவில். அக்கோவிலுக்கு இரு நூறு யார் தள்ளி ஒரு சுடலை. அதில் தகனத்துக்கு முன், பிரேதத்தைவைத்து கிரிகைகள் செய்வதற்கு சரிந்த நிலையில் ஓரு கொட்டில். அந்தச் சுடலை, மணியம் குளம் வாசிகளினதும். அருகில் உள்ள கிராம வாசிகளினதும் இடுகாடாக இருந்தது அந்த சுடலைக்கு வைரவர் காவல் தெய்வம் என்பதால் அவருக்கு "சுடலை வைரவர்" என்று நாமம் சூட்டி, அடிக்கடி பொங்கி படைப்பார்கள் ஊர் வாசிகள்.*

*வைரவர் கோவிலுக்கு அருகே உள்ள ஆலமரம் கிராமவாசிகளின் பேச்சில் அடிக்கடி அடிபடுவதற்கு ஒரு காரணம் இருந்தது. ஒன்று அந்த கிராமத்தில் உள்ள ஒரே ஒரு ஆலமரம். என்றபடியால் அதன ஆலம் விழுதுகளை கிராமவாசிகள் பல் துலக்க பாவித்ததாலோ என்னவோ அந்த கிராமத்தில் உள்ள எண்பது வயது கிழவர்களின் பற்கள் விழாமல் உறுதியாக இருந்தது. ஆலமரத்ததுக்கு அருகே சுடலையை நோக்கி சடைத்து வளர்ந்த ஈச்சம் பற்றைகள்*

*ஊடாகச் செல்லும் ஆறடி அகலம் உள்ள கிரவல் பாதை. அதன் ஓரமாக யாரோ ஒரு புண்ணியவான் உருவாக்கிய சுமைதாங்கியில். புகையிலை, வெங்காயம், ஆடு மாடு வியாபாரம் செய்து வருவோர் சற்று தம் போதிகைகளை வைத்து இளப்பாறி, அருகில் இருந்த குளத்தில் நீர் அருந்திச் செல்வது' வழக்கம்,. குளத்துக்கு அருகே சதுப்பு நிலம். அங்கு தமது கிராமத்து. கழிவுகளை கொண்டு போய் கொட்டுவார்கள் மணியம்குளம் கிராம வாசிகள். அந்த. சதுப்பு நிலம் சில உயிர்களைப் பலி வாங்கியதால் " இது சதுப்பு நிலம். இங்கு கால் வைத்தால் உயிருக்கு ஆபத்து" என்ற எச்சரிக்கை பலகையை மணியம்குளம் கிராமசபை வைத்திருந்தது.*

*அந்த கிராமத்துக்கு மின்சாசரவசதி கிடையாது. தினம்' காலை ஒன்றும் பின்னேரம் ஒன்றுமாக அக்கரையான் குளத்தில் இருந்து பஸ் கிராமத்துக்கு வந்து போகும். . இரவில் வெளியே போவதென்றால் அரிக்கன் விளக்கு அல்லது தீப்பந்தத்தை நம்பி வாழ்ந்தார்கள். ஊர் மக்கள் சுமார் 500 குடும்பங்கள் வாழும் அக் கிராமத்தில் ஒரு டிச்பென்சரியைத் தவிர வேறு கடுமையான வருத்தங்களுக்கு கிளிநொச்சி அல்லது துணுக்காய் வைத்தியசாலைகள் தான் கதி.*

*சிவராசா அபோதிக்கரியாக துணுக்காயில் இருந்து அந்தக் கிராமத்துக்கு மாற்றலாகி போய் மூன்று வருடங்கள் உருண்டோடியது. 10 வருடங்களுக்கு மேல் வேலை செய்த அபோதிக்கரிகளை டாக்டர் பட்டம் சூட்டி அழைப்பது இலங்கையில் வழக்கம். டாக்டர் சிவராசாவுக்கு மூன்று வருட*

மணியம்குளம் வாழ்க்கை எதோ கனவு போல் இருந்தது. அந்த காலத்துக்குள் கிராமத் தலைவர் பொன்னையா, விதானையார் விசுவலிங்கம், அக் கிராமத்து பள்ளிக்கூட தலமை ஆசி;ரியர் அருள், தேனீர் கடை வைத்திருக்கும் சிங்கராசா ஆகியோரின் அறிமுகம் கிடைத்து, டாக்டர் சிவராசாவின் நண்பர்களானார்கள்.,

சிவராசா மூட நம்பிக்கைகளை முற்றாக வெறுப்பவர். முற்போக்கான சிந்தனையுள்ளவர் அறவியலில் ஆர்வம் உள்ளவர். தான் படித்து டாக்டராக வேண்டும் என்று கனவு கண்டவர். முடியாததால் அப்போதிக்கரி என்ற உதவி டாக்டரானார். வன்னியில் பல கிராமங்களில் வேலை செய்தவர். அவரின் அவரது பூர்வீகம் வடக்கில் உள்ள பருத்தித்துறை. அவர் படித்தது ஹார்ட்லி கல்லூரி. அவரின் பொழுது போக்கு, அறிவியல் நூல்களை வாசிப்பது. அவரும் நண்பர்கள். அடிக்கடி தேனீர் கடையில் கூடி அரசியல். நாட்டு நிலவரம். கிராமத்தில் நடப்பவை, வியாதிகள், அறிவியல் போன்ற பல தரப்பட்ட விஷயங்களை பற்றிப் பேசுவது அவர்களின் பொழுது போக்கு.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தேனீர் கடைக்கு முன் இருந்த பெஞ்சில் இருந்து தங்கள் அரட்டையை நண்பர்கள் ஆரம்பித்தார்கள்.

‘‘என்ன பொன்னையர் உங்கடை கிராமசபை எச்சரிக்கை பலகை போட்டும் ஒரு சிறுவனை சதுப்பு நிலம் பலி எடுத்து விட்டுதாம். நீர் கேள்வி பட்டனீரே’’ டாக்டர் சிவராசா கேட்டார்.

''இறந்த சிறுவன் மாடு மேய்க்கும் சிறுவன். ஏழை. பாவம் படிப்பு அறிவு இல்லாதவன்.. அவனுக்குப் படிப்பு அறிவு இல்லாததால், பலகையில் என்ன எழுதி இருக்கிறது என்று வாசித்து அறியஅவனுக்குத் தெரியாது'' பொன்னையர் சொன்னார்.

''அது இல்லை பொடியனின் மரணத்துக்கு காரணம். சுடலை வைரவருக்கு இந்த வருஷம் பொங்கி படைக்க சற்று தாமதமாகி விட்டது. அதுதான் வைரவர் பலி வாங்கி விட்டார். உதுபோல தான் அந்த ஆலமரத்திலை தூக்குப் போட்டு ஒருத்தி போன வருஷம் செத்துப் போனாள்,'' தேனீரை கொண்டு வந்து சிவராசவிடம் கொடுத்தபடி செய்தி சொன்னார் சிங்கராசா,

''ஊர் சனங்கள் கதைக்குதுகள் சுடலை பக்கத்தில் உள்ள ஈச்சம் பற்றைக் காட்டில், கொல்லி வாய் பிசாசு இருக்குது எண்டு'' விதனையார் விசுவலிங்கம் ஊர் செய்தி சொன்னார்.

''கொல்லி வாய் பிசாசா? அது என்ன புதுப் பெயராக இருக்குது. . எனக்கு பிசாசு கதைகளில் நம்பிக்கை இல்லை. எனக்கு தெரிந்தது பணப் பிசாசுகள் மட்டுமே '' டாக்டர் சிவராசா சிரித்தபடியே நக்கலாக சொன்னார்.

''டாக்டர் நீர் சயன்ஸ் படித்தவர். அதுதான் உப்படி சொல்லுறீர். உமக்கு இந்த ஊர் சனங்ககளின் பேச்சில் நம்பிக்கை இல்லை. நான் கூட ஒரு கிழமைக்கு முந்தி அக்கரையன்குளம், கிராமத்துக்குப் போய் திரும்போது, பஸ்சை' தவறவிட்டு சுடலை வழியாக இரவு நேரம் நடந்து வந்தேன் பாரும். அப்போ

யாரோ தீப்பந்தத்தோடு என் முன்னே போவதைப் பார்த்தனான். யாரடா அங்கே போகிறது என்று சத்தம் போட்டு கேட்ட போது, பதில் இல்லை. நான் நடக்க, அந்த தீப்பந்தம் என்னை விட்டு விலகி விலகைச் சென்றது'' என்றார் ஆசிரியர் அருள்.

''என்ன மாஸ்டர் சயன்ஸ் படித்த நீங்கள் கூட இந்த கொல்லி வாய் பிசாசு கதையை நம்புறீர்களா? அது சரி உந்த பிசாசு கதையை ஊரிலை யார் ஆரம்பித்து வைத்தது?'' டாக்டர் சிவராசா கேட்டார்.

''வேறு யாரும் இல்லை, வேலை இல்லாமல் இருக்கும் ஒரு கூட்டம் தான். அவர்களுக்கு பொழுது போக வேண்டுமே. கதையைக் கட்டி விட்டிருக்குறார்கள். அதில் அவர்களுக்கு எதோ உள் நோக்கம் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் நான் கெதியிலை அது உண்மையா போய்யா என்று கண்டு பிடிக்கிறேன் '' விதனையார் தன் அதிகாரத் தொனியோடு சொன்னார்.

''விதனையார் நீங்கள் சொல்வது ஓரளவுக்கு உண்மை. மூன்று நாளைக்கு முன், வேலை இல்லாமல் இருக்கும் சண்முகமும் அவனின் இரு நண்பர்களும் எண்டை கடைக்கு தேனீர் குடிக்க வந்த போது இந்த கொல்லி வாய் பிசாசை பற்றியே அவர்கள் பேச்சு இருந்தது. தாங்கள் பல தடவை கண்டதாக சொன்னார்கள். கொல்லி வாய் பிசாசு இரவில் உலாவுமாம். மனித ரத்தத்தைத் தேடுதாம். எனக்கு அந்த வேலை இல்லாமல் இருக்கும் அந்த மூவரின் பேச்சில் நம்பிக்கை இல்லை''

“ஏன் அப்படி சொல்லுகிறீர் சிங்கராசா” விதானையார் கேட்டார்.

“விதானையார். அவன் சண்முகம் தேனீர் குடித்து, வடை சாபிட்டுவிட்டு போகும் போது ஒரு நூறு ரூபாய் நோட்டை என்னிடம் நீட்டினான், மிகுதி காசை கொடுத்தபோது என்னை அதை வைத்திருக்கும் படி சொல்லி போய்விட்டான். வேலை இல்லாத அவனுக்கு எப்படி அவ்வளவு காசு? அதோடு மட்டமில்லை கொல்லி வாய் பிசாசா தங்கள் கண்டதாகவும், அது ரத்தம் குடிக்க ஈச்சம் பற்றை பக்கம் அலைந்து திரிவதாக அவர்கள் சொன்னார்கள்” ஒரு குண்டைத் தூக்கி போட்டார் சிங்கராசா.

“அப்படியா. இது கவனிக்க வேண்டிய விஷயம் தான்” விதானையார் சொன்னார்.

“அது சரி மாஸ்டர் நீர் இந்த கொல்லி வாய் பிசாசை எங்கை பார்த்தனீர்.

“நான் கண்டது அந்த குப்பைகள் கொட்டும் சதுப்பு நிலத்துக்கு அருகாமையில்”

“அப்படி சொல்லுமென். எனக்கு இப்ப கொல்லி வாய் பிசாசை நீர் கண்டதன் காரணம் புரியுது”

“என்ன உமது அறிவியல் விளக்கத்தை சொல்லும் கேட்பம்” ஆசிரியர் அருள் கேட்டார்

“மீத்தேன் வாயுவை (Methane gas) பற்றி கேள்விபட்டிருப்பீரே. அந்த வாயு பிராணவாயுவோடு கலந்தால், வெகு விரைவில் தீ

*பற்றிக் கொள்ளக் கூடியது. அனேகமாக சதுப்பு நிலப் பகுதிகளில் குப்பைகளின் சிதைவால் அதிகமாக மீதென் வாயு வெளியேற வாய்ப்புண்டு. அது சரி நீர் சதுப்பு நிலத்தின் அருகே நடந்து வரும் போது சிகரெட் ஏதும் பற்ற வைத்தீரா''.*

*''ம்... அது எப்படி உமக்குத் தெரியும் டாக்டர்.?''*

*''நீர் சிகரெட் பற்ற வைத்த நெருப்பில் உமக்கு முன் இருந்த மீதென் வாயு தீ பற்றிக் கொண்டது. நீர் நடக்கும் போது அந்த வாயுவானது உம்மிடம் இருந்து விலகிச் சென்றது. அது வாயு என்றபடியால் நீர் கூப்பிடும்போது அது பேசவில்லை. அதுக்கு வாயும் இல்லை கால்களும் இல்லை'' என்றார் சிரித்தபடி சிவராசா.*

*''நல்ல அறிவியல் விளக்கம் டாக்டர். அனால் இதைப் பாவித்து வதந்தியை கிளப்பிய காரணத்தை நான் கண்டு பிடிக்காமல் விடப் போவதில்லை'' என்றார்' விதானையர் விசுவலிங்கம்*

****

*இரு வாரங்களுக்குப் பின் ஒரு நாள் போலீஸ் ஜீப் மணியம்குளம் கிராமத்துக்கு வந்தது. எல்லோருக்கும் அது' ஒரு'புதுமை. ஒரு போதும் போலீஸ் கிராமத்துக்கு வந்ததில்லை சதுப்பு நிலத்துக்கு அருகே உள்ள ஈச்சம் காட்டுப் பக்கமாக விதானையாரும் இரண்டு போலீஸ்காரர்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் போய் வந்ததை அவதானித் சிங்கராசா.'' என்ன விதானையார் என்றுமில்லாதவாறு கிராமத்துக்கு போலீஸ் வந்திருக்கு.''? என்று கேட்டார்..*

*“சிங்கராசா, நீர் சொன்னதை; வைத்து பொலீசும் நானும் சண்முகத்தின் வீட்டையும் அவனின் கூட்டாளி இருவரின் வீட்டையும் சோதனை செய்த போது கட்டு கட்டாகப் பணம் இருந்தது. கள்ளச்சாராயம் காச்சியதுக்கான தடயங்கள் கிடைத்தது. என்னால் நம்ப முடியவில்லை. போலீஸ் அவர்களுக்கு நாலு அடி போட்டதும் உண்மையை கக்கி விட்டார்கள். அவர்கள் உழைத்த பணம், கள்ளச்சாராயம் காச்சி விற்று சேர்த்த காசு ”*

*” நாலு போலீஸ் அடிக்குப் பின் என்னவாம் அவர்கள்’?*

*“வேலை இல்லாததால் ஈச்சங் காட்டுப் பக்கத்தில் இரவில் கள்ளச்சாராயம் காச்சினார்களாம். ஊர் வாசிகள் அந்தப் பக்கம் வராமல் இருக்க கொல்லி வாய் பிசாசு வதந்தியை ஊரில் பரப்பி விட்டார்களாம். போலீஸ் அவர்களைக் கைது செய்து கூட்டிப்போய் விட்டது. குறைந்தது மூன்று வருஷம் ஜெயிலும் அபராதமும் அவர்களுக்கு கிடைக்கும். இனியாவது ஊர் மக்கள் வதந்திகளை நம்பாமல் இருக்கட்டும்” என்றார் விதானையார்.*

****

## *கதை 13*

## தூமகேது

*சூரிய கிரகணம் நாம் அழைக்காமலே அழையா விருந்தாளியாக இரண்டரை நிமடங்கள் அமெரிக்கர்களை வந்து ஆகஸ்ட்2017 இல் தரிசித்துப் போய் விட்டது. வின்கல் மழை தங்கள் சொரிவைக் அடிக்கடி காட்டிப் போகும். வால் நடசத்திரம் என்ற தூமகேது தன் நீண்ட வாலின் அழகைக் காட்டி சில மாதங்களில் மறைந்துவிடும் இந்த பிரபஞ்சத்தில் உள்ள குடும்பங்களில் அன்றாடம் நடக்கும் பல நிகழ்ச்சிகளுக்கு, காதும் மூக்கும் வைத்து, பல கற்பனைக் கதைகள் வேதத்தில் உருவாகி இருக்கிறது. அதை உண்மை என்று நம்பியவர்கள் பலர். ஹாலியின் வால் நட்கத்திரம் (Haley's Comet) என்ற தூமகேது, சுமார் 76 ஆண்டுக்களுக்கு ஒரு தடவை வந்து தன் அழகை உலக வாசிகளுக்கு காட்டி மறையும். அப்படி 2013 இல் ஐஸ்சொான் (ISCON) என்ற தூமகேது வந்து போகும் போது நடந்த மூடநம்பிக்கை உள்ள ஒரு கிராமத்தின் கதை இது.*

****

*தமிழ் நாட்டில் உள்ள ஸ்ரீ ரங்கத்தைப் பிறப்பிடமாக கொண்ட ஹரிகரன் (ஹரி) ஸ்கொலர்ஷிப் பெற்று, லண்டன் சென்று. வான் இயற்பியல் (Astro Physics) துறையில் பட்டம் பெற்றவர் லண்டனில் உள்ள குயீன் மேரீஸ் பல்கலை கழகத்தில் விரிவுரையாளராக வேலை செய்பவர். அவர் முனைவர் பட்டம்*

பெறுவதற்கு தூமகேது என்ற வால் நட்சத்திரங்களின் தோற்றமும் வரலாறு பற்றியும், அதனால் பூமிக்கு ஏற்படும் விளைவுகள் பற்றியும் ஆராய்ச்சி செய்தவர். பாலசுந்தரத்தோடு நண்பரானார். ஹரிகரன்- பாலசுந்தரம் நட்பு குயீன் மேரீஸ் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டது.

பாலசுந்தரம் (பாலா), . ஈழத்து வன்னியில் உள்ள முல்லைத்தீவில் பிறந்தவர். வன்னியில் உள்ள ஒட்டுசுட்டானில் சில வருடங்கள் ' வரலாறு ஆசிரியராக கடமையாற்றியவர். ஈழத்து போர் நிமித்தம் அவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து' லண்டனுக்கு புலம் பெயர்ந்த பலரில் பாலாவும் ஒருவர். வன்னி மக்களின் கலாச்சாரம், வரலாறு பற்றி நன்கு அறிந்தவர். பாலாவும், ஹரிகரனும் திருமணமாகாதவர்கள்.

அன்று விடுமுறை. ஹரிகரன் தயாரித்த தோசை, இட்டலி, சாம்பார் உணவை சுவைக்க பலா .ஹரியின் வீட்டுக்கு அவர் அழைப்பில் போயிருந்தார்.. போசனத்துக்குப் பின்' இருவரும் ஹாலில் இருந்து உரையாடிக் கொண்டு இருந்தார்கள்.

"ஹரி, நான் இன்னும் ஒருமாதத்தில் என் ஊருக்கு பெற்றோரைப் பார்க்க போக இருக்கிறேன். உமக்கு வன்னியை ஆண்ட பண்டார வன்னியனை பற்றி' ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அவர் பிரிட்டிஷ் இராணுவத்தோடு போர் புரிந்த இடம் கற்சிலைமடு. அக்கிராமம் ஒட்டுசுட்டனில் இருந்து மேற்கே சுமார் 2 மைல் தூரத்தில் உள்ளது . ஈழத்து வரலாறு பற்றி அறிய ஆவல் உள்ள நீர்' என்னோடு ஒட்டுசுட்டானுக்கு வர விருப்பமா?. அந்த' வரலாறு உள்ள கிராமத்துக்குப்' போய்' நாம்

*அந்தக் கிராரமத்தின் மக்களை சந்தித்திதுப் பேசலாம். என் பாட்டனர் முத்தையா என்பவர் தொண்ணூறு வயதாகியும் பல் விழாமல் அங்கு வாழ்கிறார். அவரையும் சந்திக்கலாம். என்ன சொல்கிறீர்''?*

*''அது சரி பாலா, நீர் வன்னி வரலாறு அறிந்தவராயிற்றே அந்த கிராமத்துக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது? சிலை ஏதும் உண்டா''*

*''ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பிறபகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தின் முற்பகுதியிலும். வன்னிராச்சியத்தை ஆண்ட மன்னன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன்.*

*வெள்ளையரிற்கு அடிபயணியாது வன்னிராச்சியத்தை ஆண்டு வந்ததான். முல்லைத்தீவு கோட்டையில் வெள்ளையர்களிடம் இருந்து மீட்டு பிரங்கிகளை கைப்பற்றிய முதல் மன்னன் கற்பூரபுல் வெளியில் ஒரே வாழ் வீச்சில் 60 பேரை கொன்ற வரலாற்று நாயகன்தான் பண்டாரவன்னியன்.*

*கற்சிலைமடுக் கிராமத்தில் 1803 ஆண்டில் மன்னன் பண்டாரவன்னியன் ஆங்கிலேய தளபதி கப்டன் றிபேக்குடன் ஏற்பட்ட மோதலில் தோல்வி அடைந்தாதாக குறிப்பிட்டு, குறித்த நினைவுக்கல் அதே காலப்பகுதியில் அமைக்கப்பட்டது. இதுவரை காலமும் அந்தப் பகுதி மக்களால் புனிதமான சிலையாக பாதுகாக்கப்பட்டு வந்தது. குறிப்பிட்ட நினைவுக்கல்லே வன்னியின் தொன்மையையும் பண்டாரவன்னியனின் சிறப்பையும் வெளி உலகிற்கு*

வெளிப்படுத்தக்கூடிய ஆதாரபூர்மான ஒரே ஒரு நினைவுக்கல்லாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே தனியான சுண்ணக்கல்லால் ஆக்கப்பட்ட இந்த நினைவுக்கல் அமையப் பெற்றமையால்த்தான் அது அமைந்துள்ள கிராமம் கற்சிலைமடு என பெயர் பெற்றது.

*"அப்போ ஈழத்து போரில் சிலை தப்பி விட்டதா"?*

*"எங்கே தப்பியது. தமிழர் வரலாற்றுச் சின்னங்களை அழிப்பதில் தாம் போர்துக்கேயருக்கு குறைந்தவர்கள் இல்லை என்று காட்டி விட்டது சிங்கள இராணுவம்.".*

*"இதுவே என்னை அந்த கிராமத்தைப் பார்க்க வேண்டும் போல் மேலும் என் ஆவலைத் தூண்டுக்கிறது. நான் ஈழம் சென்றதில்லை. வன்னியைப் பற்றி கேள்வி பட்டிருக்கிறேன். ஈழத்து இறுதிப் போர் நடந்த நந்திக் கடலையும் அதன் அருகே உள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலையும்' பார்க்க வேண்டும் போல் இருக்குது. நானும் உம்மோடு ஒட்டுசுட்டானுக்கு' வருகிறேன். அழைப்பிற்கு நன்றி' பாலா", ஹரிகரன் சொன்னார்.*

*"அங்கு வரமுன் உமக்கு ஒரு எச்சரிக்கை. சில வன்னி கிராம வாசிகள் பழைய மூட நம்பிக்கையில் ஊறியவர்கள். அவர்களோடு பேசுவது கவனம்"*

*"பாலா, உமக்கு அசௌகரியம் தராமல் நடப்பேன். அது உறுதி"*

*"அது சரி ஹரி நீர் ஒரு பிராமணன். அதோடு வான் இயற்பியலில் முனைவர் பட்டம் பெற்றவர். ஏன் வால் நட்சத்திரத்தை*

*தூமகேது என்றும் அழைக்கிரார்கள்?. எதற்கு எதாவது காரணம் உண்டா''*

*''இராக் தேசத்தின் கெமிக்கல் அலி (Chemical Ali) என்பவரை பற்றி கேள்விபடிருப்பீரே. அவர் சதாம் ஹுசைனின் கட்டளைப் படி குர்திய மக்களின் கிளர்ச்சியை அடக்க  இரசாயன ஆயுதம் பாவித்தார் என்பதற்காக தூக்கில் இடப்பட்டார். இரசாயனப் போர் முறை (Chemical warfare) பற்றி வேத காலத்து கதை ஒன்று உண்டு. விநாயகரின் 16 முக்கிய பெயர்களில் ஒன்று தூமகேது. இந்த சம்ஸ்கிருதச் சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள்  உண்டு: ஒன்று .வால் நட்சத்திரம், இரண்டாவது .விநாயகப் பெருமான். அவருக்கும் வால் நட்சத்திரத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை.*

*''மேலும் சொல்லும்''*

*''விகுதி என்ற ஒரு அரசன் இந்திரன் பதவி மீது ஆசை கொண்டான். அதைப் பொறுக்காதோர் அவனைச் சபிக்கவே அவன் தூமாசுரன் என்ற புகை அசுரனாகப் பிறந்தான். தூமம் என்றால் புகை என்று பொருள். அவனிடம் விஷப் புகை (Weapons of Mass Destruction) ஆயுதங்கள் இருந்தன. அதை அவன் ரிஷிகள் மீதும் நல்லோர் மீதும் பிரயோகித்தான். அவனைக் கொல்ல சுமுதை என்பவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை உதவும் என்று ஒரு அசரீரி கேட்டது. ஆகவே சுமுதை கணவருடன் காட்டுக்குச் செல்ல, அங்கு விநாயகரே அவர்களுக்குக் குழந்தையாக வந்து அவரிடம் வளர்ந்தார்.*

*தூமாசுரன் செயல்களைப் பிள்ளையார் கேள்வி கேட்கவே. அவன் கோபம் கொண்டு அவர் மீது புகை ஆயுதங்களைப் பிரயோகித்தான். பிள்ளையார் அத்தனை புகையையும் உள்வாங்கி. தூமாசுரன் மீது அந்த விஷப் புகையைக் கக்கவே அவன் சேனைகளுடன் அழிந்தான். ஆகவே பிள்ளையாருக்கு தூமகேது என்று பெயர் வந்தது. அது தான் கதை. இந்தக் கதையை ஏன் பாலா கேட்டனீர்''*

*''கற்சிலை மடுவில் என தாத்தாவை சந்திக்கும் போது நான் கேட்ட காரணம் அறிவீர் ஹரி''.*

****

*இரு நாட்கள் பயணத்தின் பின் கொழும்பு ஊடாக ஒட்சுட்டானை இருவரும் வந்தடைந்தார்கள். வாடகை' கார் ஒன்றை கொழும்பில் இருந்து பாலசுந்தரத்தின் நண்பன் ஒருவன் ஒழுங்கு செய்திருந்ததால் சுமார் 200 மைல் பயணத்தின் பின், முதலில் முல்லைதீவில் உள்ள பாலாவின் பெற்றோரிடம் இருவரும் ஆசி பெற்றனர். அதன் பின் நந்திக் கடல். வற்றாப்பளை அம்மன் ஆகிய இடங்களை பார்வையிட்டு ஒட்டுசுட்டானைப் போய் அடைந்தனர். போகும் வழியில் காடுகளை அழித்து,. எரித்து. சாம்பலை உரமாகக் கொண்டு சேனை விவசாயம் வன்னியில் செய்வதாக பாலா. ஹரிக்கு சொன்னார். தான ஒட்டுசுட்டானில் ஆசிரியராக தடமையாற்றிய பாடசலைக்குப் போன போது; தன்னோடு ஒன்றாகப் படிப்பித்த மகாதேவன் என்பவரை தலைமை ஆசிரியராக தான் காண்பேன் என்று பாலா எதிர்பார்கவில்லை;*

ஒட்டுசுட்டனில் இருந்து ஏ34 பாதையில் மேற்கே 2 மைல் பயணத்தின் பின்; கற்சிலைமடு கிராமத்தை இருவரும் போய் சேர்ந்தனர். அக்கிராமத்தில் பண்டார வன்னியனினின் சிலைக்கு மரியாதை செலுத்தி, பாலாவின் பாட்டனர் முத்தையா வீட்டுக்குப் போய் சேர்ந்தனார். அந்த வயதிலும் அவர் சுறு சுறுப்பாக தன் மனைவி நாச்சியாரோடு இயங்குவதைக் கண்டு ஹரி ஆச்சரியப்பட்டார். இந்த முதுமையிலும் அவர்கள் ஒற்றுமையைக் கண்டு வியந்தார்.

அன்று அக்கிராமத்து பிள்ளயாருக்கு பொங்கிப் படைத்தனர் கிரம வாசிகள். ஒரே கூட்டம். கிராமத்தில் மூத்தவர் என்பதால் முத்தையாவுக்கு அவ் விழாவில் பிரதம அதிதி என்ற மரியாதையை கிராமவாசிகள் கொடுத்தனர்.

“தாத்தா இப்படி அடிக்கடி பிள்ளயாருக்கு இந்த ஊர் வாசிகள் பொங்கிப் படைப்பார்களா? ஹரி கேட்டார்

“கிராமத்தில் 1986 இல் தெரிந்த வால் நட்சத்திரத்தால் ஆபத்து வராமல் இருக்க பண்டாரவன்னியன் ஆட்சி காலத்தில் தோன்றிய பிள்ளையாருக்கு பொங்கி படைத்தனர். இந்தப் பிள்ளையார் ஊர் வாசிகளை யானைகளின் தாக்’குதலில் இருந்தும், வால் நடச்திரத்தின்

பாதிப்பில் இருந்தும் காப்பாற்றும் தெய்வம் என்ற மக்களின் நம்பிக்கையால் இந்த பொங்கல் விழா“ விளக்கம் கொடுத்தார் முத்தையா.

*“வால் நட்சத்திரம் 1986 இல் எப்படியான பாதிப்பை கிராமத்துக்கு கொடுத்தது தாத்தா” ஹரி கேட்டார்.*

*“வால் நட்சத்திரம் வந்து போன பின், இராணுவத்தின் தாக்குதலினால் இந்தக் கிராமத்தைச் சுற்றி உள்ள காடுகள் தீ பற்றி எரிந்தன. சில குடிசைகளும் எறிந்தன . சிலர் இறந்தனர். விவசாயப் பயிர்கள் நாசமாயிற்று.” : கவலையோடு சொன்னார் முத்தையா.*

*“அப்போ இந்த பொங்கல் எதற்கு”?*

*“இந்த பொங்கல் 2’013 இல் கார்த்திகையில் தோன்றவிருக்கும்’ மிகப் பெரிய வால் நடச்சதிரம் கக்க இருக்கும் விஷப் புகையில் இருந்து கிராமத்தைக் காப்பாற்றவே இந்தப் பொங்கல் பிள்ளையாருக்கு” என்றார முத்தையா,*

*.”’ இதை நீங்கள் நம்புகிறீர்களா தாத்தா?”*

*“ஊரே நம்பும் போது நான் மட்டும் நம்பாமல் இருக்க முடியாது. இந்த ஊர் பூசாரியும். சாத்திரியும் அதைத் தான் சொன்னார்கள். அவர்கள் சொன்னது போலவே முந்தி நடந்திருக்கிறது” என்றார் உறுதியோடு தாத்தா.*

*“ஹரி உமது ஆய்வின் படி எப்போது வால் நட்சத்திரம் தோன்றும்?*

*“வால் நட்சத்திரம் ஐஸ்சொன் (ISON) 2013 ஆண்டு நொவம்பரில் தெரியும். அதாவது. இன்னும் மூன்று மாதங்களில் பார்க்கலாம். அதன் கரு சூரியனை விட 12 மடங்கு பெரிது. வால்*

*நட்சத்திரத்தின் கருவானது தூசி. வாயு, பனிக்கட்டிகலால் உருவாகியது. சூரியனின மையத்தில் இருந்து 1,860,000 கிமீ தூரத்தில் வரும்' போது எம் கண்களுக்கு புலப்படும் 400,000 வருடங்களுக்கு ஒரு தடவை பூமிக்குத் தெரியும். 14-15 ஜனவரி 2014 இல் ISON இன் சுற்றுப்பாதைக்கு அருகே பூமி கடந்து செல்லும போது, சூரியனின் கதிர்வீச்சால் வீசிய மைக்ரான் அளவிலான தூசி துகள்கள் விண்கல் மழை அல்லது தூசிகள் நிறைந்த மேகங்களை ஏற்படுத்தும் எனக் கணிக்கப்படுகிறது. வால் நட்சத்திரம் ISON இன் சுற்றுப்பாதைக்கு அருகே மட்டுமே வால் நட்சத்திரம் பூமியை கடந்து செல்லும் போது, வால் வழியாக, விண்கல் மழை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அரிதாக இருக்கும். இதுவரை அது நடந்தாக பதிவாகவில்லை. சிறிய துகள்கள்களை சுற்றுப்புற பாதையில் விட்டுச்செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. -. இத்தகைய சூழ்நிலைகளில் கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் எதுவும் இல்லை. இந்த தூமகேதுவுக்கு இவர்கள் பயந்து பூஜை செய்கிறார்கள் பயப்படத் தேவையில்லை. இருந்தும் இந்தக் கிராம வாசிகள் எதிர்பார்க்கும் வால் நட்சத்திரத்தில் இருந்து நச்சு வாயுவோ அல்லது. நெருப்போ பூமியை தாக்காது." என்று விளக்கம்' கொடுத்தார் ஹரி.*

*இரு கிழமை இலங்கை பயணத்தின்; பின்' இருவரும் லண்டன்; திரும்பினார்கள்.*

****

*அன்று 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 12அம' திகதி டிவி யில் இலங்கையில் வட மாகாணத்தில் உள்ள வன்னியில் ஏற்றப்பட்ட காட்டுத் தீ பற்றி டிவியில் காட்டியதைக் கண்டு பாலாவும் ஹரியும் அதிர்ச்சி அடைந்தனர்.*

*"கேட்டீரா ஹரி செய்தியை... கிராமவாசிகள் பயந்தது போல் நடந்து விட்டது நல்ல காலம் கற்சிலைமடு கிராமத்தில் காட்டு தீ நடக்கவில்லை அவர்கள் கிரமத்தில் இருந்து. சுமார் மேற்கே 30 மைல் தூரத்தில் உள்ள காட்டில் காய்ந்த மரங்களை மின்னல் தாக்கியதால் காட்டுத் தீ உருவாகி, சில கிராமங்களை அழித்து இருக்கிறது.. வால் நட்சத்திரம் தோற்றமும். காட்டுத் தீ உருவாகியதும்' தூய தற்செயல். அது போதும் கிராமவாசிகளுக்கு. அவர்கள் பிள்ளயார் மேல் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை:" என்றார் பாலா.*

*"எல்லாமே இயற்கையின்' செயல் பாலா", பதில் சொன்னார் ஹரி.*

****

## *கதை 14*

## முல்லைத்தீவு போராளி

*யாழ்ப்பாணக் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில், பாக்கு நீரணையைத் தழுவி உள்ள கடலோரக் கிராமம் மயிலிட்டி. அக் கிராமம் தமிழ் நாட்டில் உள்ள கோடியக்கரையில் இருந்து' தேற்கே 22 மைல் தூரத்தில், பாக்கு நீரணையின் இலங்கை கரை ஓரத்தில் அமைந்த கிராமம் என்பதால் அடிக்கடி அவ்வூர் மக்கள் தமிழ் நாட்டுக்குச் சென்று வருவதுண்டு. ஒருகாலத்தில் இலங்கையின் பிரசித்தமான மீன்பிடி துறைமுகங்களில், இரண்டாம் துறைமுகமாய் திகழ்ந்த இடம் மயிலிட்டித் துறைமுகம். பாலாலி இராணுவ முகாமுக்கு அருகே இருந்ததால் 27 வருடங்கள் இராணுவத்தின் பாதுகாப்பு வலயத்துக்குள் மயிலிட்டி வந்தது. அமைதியாக வாழ்ந்த அவவூர் மக்கள் தமது காணி, வீடுளை விட்டு வேறு இடங்களுக்குப் புலம் பெயர வேண்டி இருந்தது. கடலோரக் கிராமம் என்பதால் மயிலிட்டி சுறா மீனுக்கு தனி மதிப்பு. அவ்வூர் மக்களின் பிரதான தொழில் மீன் பிடித்தல். அதற்கும் பலத்த கட்டுப்பாடுகள்.*

*மாவீரர்கள் பலர் பிறந்த ஊர் என்பது அதன் தனிச் சிறப்பு. மயிலிட்டிக்கும் தமிழ் நாட்டுத் தலை நகர் சென்னையில் உள்ள மயலாபூருக்கும் ஒருகாலத்தில் தொடர்பிருந்ததாக வரலாறு சொல்கிறது. அங்கிருத்து மயிலிட்டி கிராமப் பகுதிக்கு; வந்த; நரசிங்கத்தேவன் என்ற சோழ அரச அதிகாரிக்கு பாதுகாப்பாக இருந்த ஈட்டிப் படையின் இலட்சணை மயில்.. ஆகவே அதில்*

இருந்து மயிலும் ஈட்டியும் இணைந்து மயிலிட்டி என்ற பெயர் கிராமத்துக்கு மருவி இருக்கலாம். வீரமாணிக்கதேவன். பெரியநாட்டுத் தேவன் பெயர் கொண்ட சோழ அரசின் தளபதிகள் இதன் அருகே சில பகுதிகளை ஆட்சி செய்ததாக வரலாறு சொல்கிறது. இதில் இருந்து இவ்வூர் மக்களின் இரத்தத்தில் வீரம் செறிந்துள்ளது என்பது தெரிகிறது அந்த வீரம் கலந்த மண்ணில் பிறந்தவன் மாணிக்கத்தேவன் (தேவன்). அவனின் பாட்டனார் மகாதேவனும். தந்தையான சுந்தரதேவனும் மீன் பிடி தொழிலை பல வருடங்களாச் செய்து வந்தவர்கள். சுந்தரம் ஒரு' மோட்டார் படகுக்கு உரிமையாளன். அவனுக்கு உதவியாக இருவர். வங்களா விரிகுடாவில் அடிக்ப்கடி தோன்றும் புயலால் பாக்கு நீரணை பாதிக்கபடும். அதனால் மீன் பிடி தோழிலில் ஆபத்து நிறைந்தது என்பதை அறிந்த சுந்தரம் தன் ஒரே மகன் தேவனை தன் தொழிலில் ஈடுபட வைக்காமல், படிப்பித்து ஊடகத் துறையில் பட்டதாரியாக்கினார். யாழ்பாணத்தில் இருந்து வெளி வரும் பிரபல தினப் பத்திரிகையின் அரசியல் செய்திப் பகுதிக்கு உதவி ஆசிரியராக தேவன் வேலை செய்தான்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்து தமிழ் இலக்கியத் துறையில் பட்டம் பெற்ற கமலாதேவியின் (தேவி) கவிதையிலும் இசையிலும் மயங்கிய தேவன், தேவியைக் காதலித்து பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்தான். தேவி பிறந்த'ஊர் மயிலிட்டிக்கு கிழக்கே 10 மைல் தூரத்தில் உள்ள தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கம் தோன்றிய கடலோரக் கிராமம் வல்வெட்டித்துறை.

தேவன் - தேவியின் மணவாழ்க்கையின் சின்னமாக ஒரு மகனும் மகளும் பிறந்தார்கள். வல்வெட்டித்துறைக்கு கிழக்கே 2 மைல் தூரத்தில் உள்ள பருதித்துறை. மகளிர் கல்லூரியில் ஆசிரியையாக தேவி வேலை செய்தாள். மண்வாசனையோ என்னவோ தேவியின் ரத்தத்தில் தமிழ் உணர்வு பொங்கியது. அவளது பாடல்களும் இசையும் மக்களின் தமிழ் உணர்ச்சியை தூண்டிவிடக்கூடியவை. அவளைப் போல் தேவனும் புனைப்பெயரில் தமிழ் ஈழம் பற்றி பல அரசியல் கட்டுரைகள் எழுதினான். ஜாடிக்கு எற்ற மூடி போல் தேவன் தம்பதிகள் தமது அறிவுத் திறமையை தமிழ் ஈழ விடுதலைக்குப் பயன் படுத்தினர்.

இரு தடவை வல்வெட்டிதுறை கிராமம் இராணுவத்தின் படுகொலக்கு உற்பட்டது. 1985 இல் இலங்கை இராணுவம் 70 மக்களை நூலகத்துக்குள் வைத்து படுகொலை செய்தது. அதை தொடர்ந்து 1989 இல் இந்திய அமைதிப்படை 64 வல்வெட்டித்துறை மக்களை பலி வாங்கும் நோக்கத்தோடு படு கொலை செய்தது. இந்த இரு சம்'பவங்களும் தேவனையும் தேவியையும் முழு மூச்சாக தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கத்தோடு இணைய காரணமாக இருந்தன. இரு பிள்ளைகளையும் பெற்றோர் பொறுப்பில் விட்டு விட்டு தேவனும் தேவியும் போராளியானார்கள். பெற்றோர்கள் எவ்வளவோ தடுத்தும் அவர்கள் தங்கள் முடிவை மாற்றவில்லை

****

விடுதலை புலிகள் இயக்கத்தில் அவர்கள் இருவரின் திறமைக்கு ஏற்றவாறு. வேலைகள் கொடுக்கப்பட்டது தேவன் ஊடகத் துறைக்கும், தேவி செய்தி அறிவிப்பாளராகவும்; வேலை செய்தார்கள். இயக்கத்தின் எழுச்சிப் பாடல்களை தேவி தன் இனிய குரலில் பாடினாள். அவளது குரலுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இருவருக்கும் கெரில்லா பயிற்சி கொடுக்கப் பட்டது. தேவை படும்போது போரில் அவர்களின் சேவை பாவிக்கப் பட்டது.

ஒரு முறை ஆனையிறவு போரில் தேவன் ஈடுபட வேண்டி இருந்தது. அதுவே அவனின் முதல் போர் அனுபவம். மனித உயர்களை மதிக்கும் சுபாவம் உள்ள தேவனுக்கு துவக்கு ஏந்தி, தனக்கு' அறிமுகம் இல்லாத மூவரை சுட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதில் ஒருவன் ஒரு குழுவின் கோப்பரேல். அவர்கள் திருப்பிச் சுட்டதில் தேவனின் இடது கால் சிதைந்தது. இது போல் பலரின் குருதி மண்ணோடு கலந்தது. அதுவே அவனின் வீரச் செயலுக்கு அவனுக்குக்; கிடைத்த பரிசு. தேவனின் ஆயுள் கெட்டி என்பதால் அவன் உயர் தப்பினான். முடமான தேவனை அதன் பின் நடந்த போரில் ஈடுபட இயக்கம் விடவில்லை. அவன் இயக்கத்தின் ஊடகச் செய்திகளை எழுதுவதில் முழு நேரத்தையும் செலவு செய்தான். இயக்கத்தில் அவனைப் போல் ஒரு கையை இழந்தவன் வவுனியாவைச் சேர்ந்த முரளி. அடுத்தவன் ஒரு காலை இழந்த மன்னாரைப் பிறப்பிடமாக கொண்ட அந்தோனி. இருவரும் தேவனின் நண்பர்களானார்கள். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்களாக இருந்தும் அரசின் தரப் படுத்தல் என்ற கல்விச்' சட்டத்தால்

படிப்பைத்; தொடரமுடியவில்லை.. இருவரினதும் குடும்பங்கள் இராணுவத்தின் மனித உரிமை மீறல்களுக்கு உற்பட்டதால் முரளியும் அந்தோனியும் இயக்கத்தில் சேர்ந்ததாக தேவனுக்கு சொன்னார்கள். இருவரும் குறி பார்த்து சுடுவதில் திறமைசாலிகள். ஆணையிறவு போரில் இருவரும் குறைந்தது பத்து எதிரிகளை கொன்றிருப்பார்கள். அதனால் இயக்கத் தலைவரின் பாராட்டை பெற்றார்கள். அவர்கள் சுட்டு இறந்தவர்களில் இராணுவக் கேப்டனும்',. ஒருவன். இராணுவம் இதை நன்கு அறிந்திருந்தது. அவர்கள் இருவரையும் பலி வாங்கக் காத்திருந்தது

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்திலும் தேவன் பங்கு கொள்ளவில்லை. அந்த போரில், பல பிற நாடுகளின் உதவியோடு இலங்கை அரசுக்கு வெற்றி கிட்டியதால் பல மக்களும் போராளிகளும் போர்க்கைதியானார்கள். அக் கைதிகளில் தேவனும், தேவியும் அடங்குவர்

வவுனியாவுக்கு மேற்கே பத்து . மை\ல் தூரத்தில் செட்டிக்குளம் கிராமத்தில் மணிக் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டது. சுமார் 60,000 அகதிகளை கொண்ட முகாம் அது. போராளிகளுக்கு பிரத்தியேக கண்காணிப்பு அதோடு குறுக்கு விசரணையும் சித்திர வதைகளும். தேவனுக்கும் தேவிக்கும் வாழ்க்கை போதும் போதும் மேன்றாகிவிட்டது

அன்று முகாமில் உள்ள நீரோடையில் இரு பிரேதங்கள் காயங்களோடு கிடப்பதைக் கண்டு ஓலம் இட்டனர். முகாமில் உள்ள அகதிகள். தேவன் போய் உடல்களை பார்த்த பொது அப்

பிரேதங்கள்; முரளியினதும் அந்தோனியினதும் என்று கண்டு அதிர்ச்சி அடைந்தான். இதே நிலை ஒரு நாள் உங்களுக்கும் ஏற்படலம் என்று தேவி தேவனை எச்சரித்தாள். தேவனையும் தேவியையும் அடிக்கடி விசாரணைக்கு அழைத்து இராணுவம் மிரட்டியது அவர்கள் செய்த குற்றம், போராளிகளாக இயக்கத்தில் இருந்தது மட்டுமே.

வெளி நாடுகளின் அழுத்தம் காரணமாக முகாம் மூடப்பட்டு பல அகதிகள் தம் ஊருக்குத் திருப்பி அனுப்பப் பட்டார்கள்.. ஆனால் தேவனும் தேவியும் போராளிகளாக இருந்ததால் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பப் பட்டனர். அங்கு மீண்டும் இரு வருடங்கள் சிறை வாசம் கழித்தபோது தங்களின் பூர்வீக மயிலிட்டி காணியை வீட்டையும் இராணுவம் ஆக்கிரமித்ததைப் பற்றி தேவன் அறிந்தான். புனர்வாழ்வு மையத்தில் இருந்து தங்களுக்கு விடுதலை கிடைத்தால் போய் வாழ இடம் இல்லை என்பது தேவன் தம்பதிகளுக்கு தெரிந்தது. .தங்கள் பிள்ளைகள் இருவரும் தேவியின் சகோதரியோடு மட்டக்களப்பில் வாழ்வதை அறிந்து அவர்கள் மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது

****

தேவன் தம்பதிகள், விடுதலையாகி இரு பிள்ளைகளோடு புது வாழ்வை முல்லைதீவில் ஆரம்பித்த பின் அவ்விரு போராளிகளின் மறு வாழக்கை போராட்டம் ஆரம்பமாகியது. அவர்கள் வாழ்ந்த பகுதி வாசிகள் போரில் ஈடுபட்ட இவர்கள் இருவரையும் பயங்கரவதிகளாக பார்த்தது அவர்களோடு

பேசுவதை குறைத்தனர் தேவன் குடும்பத்தை ஏதோ பிற நாட்டவர்கள் போல் நடத்தினார்கள் அவர்களின் இரு பிள்ளைகளோடு தம் பிள்ளைகள் பழகுவதை அவர்கள் விரும்பவில்லை. ஏதோ பெரும் குற்றம் செய்து விட்டு சிறை சென்று வந்தவர்களாக அவர்களை சமூகம் பார்த்தது, அரசு கொடுத்த உபகார பணத்தோடு அவர்கள் வாழ்க்கை, போராட்டம் நிறைந்த வாழ்வாக இருந்தது. சிறு கோழிப் பண்ணை வைத்து இரு பசுகளையும் வாங்கி முட்டையும் பாலும் விற்று குடும்பம் நடத்தினார்கள்\ .

ஒரு நாள் தேவி முல்லைதீவி உள்ள கண்ணகி அம்மன் கோவிலுக்கு சென்று மனம் உருகி கண்களில் நீர்வழிய பாடினாள். அவளின் குரல் கேட்டு பலர் மைய்மறந்து நின்றனர. இப்படியும் ஒரு குரலா என்று பலர் பெசிக்கொண்டனர் . கோவில் ஐயர் தினமும் வந்து அவளைப் பாடும் படியும். அதற்கு பக்தர்கள் தரும் பணத்தில் ஒரு பகுதியை தருவதாகவும் சொன்னார். தேவி அதற்கு “ ஐயா உம்கள் யோசனைக்கு நன்றி எனக்கு கடவுள் தந்த குரல் இறைவனுக்கே” என்று பணம் வாங்க மறுத்து விட்டாள்.

ஒரு கால் இல்லாத தேவனுக்கு ஓடி ஆடி வேலை செய்வது கடினமாக இருந்தது. தன் நேரத்தின் பெரும் பகுதியை, இயக்கத்திலும். அகதிகள் முகாமிலும் புனர்வாழ்வு மையத்திலும் தன் அனுபவத்தை கருவாக வைத்து நாவல் ஒன்றை எழுதத் தொடங்கினான். அதன் முதல் அத்தியாயத்தை தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் “ மக்கள் விடுதலை” என்ற

வாரப் பத்திரிகை ஒரு போராளியின் போராட்டம் “ என்ற தலைப்பில் முதல் அத்தியாயத்தை அனுப்பினான். அப் பத்திரிகையின் ஆசிரியர் அதை வாசித்து விட்டு தேவனை தொடர்ந்து எழுதும் படி சொன்னார். அதற்காக வெகுமானம் தருவதாக பதில் எழுதினார். தேவனின் நாவலால் பத்திரிகை விநியோகத்தின் எண்ணிக்கை அதிகரித்தது.

தனது ஊடகத் துறை அனுபவத்தைப் பற்றி ஆசிரியருக்கு தேவன் எழுதியபோது அவர் ஆச்சரியப் பட்டார். தயக்கமின்றி மாதச் சம்பளத்தில் இலங்கையின் அரசியல் செய்தி நிருபராக தேவனை நியமித்தார். இதை அறிந்த கானடா இணையத்தளப் பத்திரிகை ஒன்றும் தேவனின் எழுத்துக்கு மதிப்பு அளித்து அவனை தங்கள் இணையத்தளப்; பத்திரிகைக்கு எழுதும் படியும் அதற்கு தகுந்த சன்மானம் தருவதாக அறிவித்தனர் இரு ஊடகங்களில் இருந்து வந்த பணம், ஏழ்மையில் இருந்த தேவன் குடுமபத்துக்கு பெருதும் உதவியது

தேவி ஊர் பிள்ளைகளுக்கு இசை கற்றுக் கொடுத்துப்’ பிழைத்தாள். ஒரு போராளி குடும்பதத்தின் போராட்டம் நிறைந்த வாழ்;வை அறிந்த வட மாகாண அரசு அவர்கள் வாழ கிளிநோச்சியிள்; ; இரு அறைகள் கொண்ட வீடு ஒன்தறி கொடுப்பதுக்கு தேனோடு தொடர்பு கொண்டது. வாடா வட மாகாண முதல்வர் சார்பில் தன்னை சந்திக்க வந்திருந்த அதிகாரியிடம் தம் மனம. விட்டுப்’ பேசி தங்கள் கோரிக்;கையை தேவனும் தேவியும் சொன்னார்கள்

*“ஐயா எமக்கு மயிலிடியில் உள்ள எமது பூர்வீக காணி நிலமும் வீடும் வேண்டும். அதை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து எமக்குப் பெற்று தாருங்கள் அது போதும். எமது திறமையை வைத்து நாம் பிழைத்துக் கொள்வோம்: என்றார்கள்.*

*அதிகாரி வாயடைத்துப்; போனார். அதே நேரம் அரசியல் சூல்நிலை மாறியதால் 27 வருடங்களுக்கு பின் மயிலிட்;டியை விட்டு இராணுவம் வெளியேறியது. .போராளி தம்பதிகளின் போராட்டம் வெற்றி நடை போட்டது . தனது வீட்டில் இருந்தே தேவன் ஊடக செய்தியாளனாக வேலை செய்தான் . தேவி இசைக் கல்லூரி நடத்தினாள்.*

*அன்று தேவனுக்கு எதிர்பாராதவாறு தொலை பேசி அழைப்பு ஒன்று வந்தது. பேசியது தமிழ் நாட்டுப் பத்திரிகை மக்கள் விடுலைப்’ பததிரிகையின் ஆசிரியர*

*“என்ன தேவன் எப்படி போகுது உமது போராட்டம் நிறைந்த வாழ்க்கை” ஆசிரியர் கேட்டார்*

*“எதோ எங்கள் இருவரினதும் கல்வியும், திறமையும் எமக்கு கை கொடுக்கிறது எனது மயிலிட்டி கிராமத்தில் உள்ள என்பூர்விக வீடும் காணியும் திரும்பி கிடைத்து விட்டது ஐயா” தேவன் சொன்னான்;*

*“அப்படியா? மகிழ்ச்சியான செய்தி. இன்னொரு மகிழ்ச்சியான செய்தியும் உமக்குச் சொல்லப் போகிறேன் தேவன்” ஆசிரியர் சொன்னார்*

*“என்ன செய்தி ஐயா”?*

''நீர் எமது பத்திரிகைக்கு எழுதிய ஒரு போராளியின் போராட்டம் என்ற தொடர் நாவலை தொகுத்து எமது பிரசுரம் எமது சொந்த செலவில் வெளியிட்டது. அதற்குத் தமிழ் நாட்டு அரசின் இலக்கியத்துக்கு முதல் பரிசாக ஒரு இலடசம் இந்திய ரூபாய் உமக்கு கிடைத்துள்ளது. இதனால் எமது பத்திரிகைக்கும் உமக்கும் பெரும் பெருமை'' என்றார் ஆசிரியர்.

''என்ன ஐயா சொல்லுகிரீர்கள் உண்மையகவா'' தேவன் கேட்டான்

''ஆமாம் உண்மை தான் சொல்லுகிறேன் தேவா. இது ஒரு ஈழத்து எழுதாளருக்கு தமிழ் நாட்டு அரசின் இலக்கியத்துக்கு கொடுத்த முதல் பரிசு. நீர் குடும்பத்தோடு இங்கு வந்து பாராட்டையும் பரிசையும் பெறுவதற்கு எமது பத்திரிகை ஆவன செய்யும். நீர் செலவைப் பற்றி கவலைப் படத் தேவை இல்லை.'' என்றார் பத்திரிகை ஆசிரியர் தேவனும் தேவியும் திகைத்து நின்றனர்.

****

## கதை 15

## போர்க் கைதி

இலங்கையில் உள்ள "பூனகரி" கிராமம் யாழ்குடாநாட்டையும் தெற்கில் உள்ள வன்னிப்பகுதியையும் இணைக்கும் வாசல். பழைய இடிந்த போரத்துக்கேயர் கோட்டை அங்குண்டு. அக்காலத்து அரசர்கள் உலாப்போகும் காலத்தில் பந்தலிட்டு, தோரணமைத்து, பூக்களினால் அலங்காரம் செய்து வரவேற்குமிடமாதலால் பூதுாக்கி என்ற பெயருடயதாகவும் பின்னர் பூனகரியாக மருவியதாக முதலியார் செ இராசநாயகம் அவர்கள் , "யாழ்ப்பாணச் சரித்திரம் " என்ற தன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். பூனநகரி என்ற பெயர் வருவதற்கு வேறு விளக்கமுண்டு. ஏரிகளும், பூந்தோட்டங்களும் நிறைந்திருந்த. பூனகரிப் பகுதியில் இருந்து மன்னாருக்கு தெற்கே இருந்த குதிரைமலையில் அரசாண்ட அல்லி இராணியின் அரண்மனைக்கும், மற்றும் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரண்மனைக்கும், கோயில்களுக்கும் பூக்களும் மாலைகளும் சென்றதாக வரலாறு சொல்கிறது . அதனால் அப்பெயர் பெற்றதென்பர் பலர்.

பௌத்தனாக மாறிய அசோக சக்கிரவர்த்தி, தன் மகள் சங்கமித்தை மூலம் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையை இலங்கை மன்னன் தேவநம்பியதீஸனுக்கு அனுப்பிவைத்தான். மாதகலுக்கு அருகேயுள்ள சம்புகோளம் என்ற துறைமுகத்தில் வந்திறங்கி, விழாக்கொண்டாடி,

கோலகாலத்தடன் பூனகரியூடாக அனுராதபுரம் சென்றாள் சங்கமித்தை.

பூ + நகர்+ஏரி என்ற மூன்று சொற்களின் சேர்கையைப் பூனகேரி என்பதாகும். ஏரிகளும் வயல்களும் நிறைந்தயிடமாகையால் விவசாயத்துக்கு குறைவில்லை. பச்சைப்பெருமாள், மொட்டைக்கருப்பன் ,நாலுமொழி , முத்துச்சம்பா, ஐஆர்8 போன்ற பலதரப்பட் பேயர்களைக்கொண்ட நெல்கள் விளைந்தன. மொட்டைக்கருப்பன் என்ற பெயரையுடைய அரிசிக்கு தனி மதிப்பு இருந்தபடியால் அவ்வரிசி விளையும் வயல்கள் விலை கூடியதாகவும் இருந்தன.

இலங்கையில் உள்ள "பூனகரி" என்றவுடன் கடந்த தசாப்தத்தில் அவ்வூரில் நிகழ்ந்த சம்பவங்கள் நம்மனதை விட்டு அகலாது. நிற்பவை பல, 1991ம் அண்டு இராணுவம் பூனகரி நுலை வாசலில் அமைதியான சூழ்நிலையில் வாழ்ந்த பூனகரிப் பகுதி மக்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனையிறவு, மண்டைதீவு , கொழும்புத்துறை ஆகிய இடங்களிலிருந்த இராணுவ முகாம்களிலிருந்து விடப்பட்ட ஏவுகணைகள் நல்லூர் , சித்தர்குறிச்சி, ஞானிமடம் , செட்டியகுறிச்சி போன்றப் பகுதிகளைத் தாக்கின. அதனால் உயிரிழந்தோர் பலர். வெட்டுக்காடு, கௌதாரி முனை, கறக்காய்தீவு பகுதிகளில் செழித்து வளர்ந்த பெரும் தென்னந்தோட்டங்கள் ஏவுகணைகளால் எரிக்கப்பட்டுச் சிதைந்தன. இதுவே பூனகரி மக்கள் பகுதிகளை விட்டு பாதுகாப்புத் தேடி இடம்பெயர

வேண்டிய நிலை ஏற்பட காரணமாகயிருந்தது. 1993 ஜனவரியில், நடந்த கிளாலி படுகொலைகள் பிறநாடுகளில் எதிரொலித்தது.

1993 நவம்பரில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட "தவளைப் பாய்ச்சல" தாக்குதலால், பூனகரி ஞானிமடத்துக்கு வடக்கேயிருந்த நாகதேவன் இராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் பழியானர்கள். பலர் விடுதலைப் புலிகளால் சிறை படிக்கப்பட்டனர். 1995 ம் ஆண்டு ஒக்டொபர் மாதம் "சூரியகதிர்" என்ற இராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி பூனகரியில் உள்ள கிலாலி வாவியினூடாக ஆயிரக்கணக்கில் வன்னிப் பிரதேசத்துககு, புலம் பெயர்ந்த யாழ்ப்பாண குடாநாட்டு மக்களின் இடப்; பெயர்ப்பை எவராலும் மறக்க முடியாது. இது தற்காலத்து சரித்திர வரலாற்றுச் சம்பவங்கள். இதனால் எங்கையோ கணிப்பாரற்று இருந்த பூனகரியின் பெயர் பிறநாட்டு ஊடகங்களில் அடிக்கடி தோன்றலாயிற்று. பூனகரிப் பகுதி வன்னிப் மாவட்டத்துக்குள் அடங்கும்.

பூனகரிபோரில் விடுதலைப்புலிகளிடம் கைதான இருநூற்றுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் அனைவரும் சிங்களவர்கள். இருபத்தி ஆறு வயதான சுமணதிஸ்ஸவும் அப் போர்க் கைதிகளில் ஒருவன். குருநாகலில் இருந்து 8 கி.மீ தூரத்தில கொழும்புக்குப் போகும் பாதையில் உள்ள பொத்துஹெர கிராமத்தைச் சேர்ந்தவன். இங்கு வாழ்பவர்கள் பெரும்பாலும் சிங்கள பௌத்த மதத்தவர்கள். சுமணதிஸ்ஸவின் தந்தை உபதிஸ்ஸ ஒரு விவசாயி. ஐந்து ஏக்கர் வயற்காணியை நம்பி

வாழ்பவன். சுமணதிஸ்ஸவின் தாய் வீடுகளில் சமையல் வேலை செய்து குடும்ப வருமானத்துக்கு உதவியாக இருந்தாள். சுமணதிஸ்ஸ பிறந்து மூன்று வருடங்களுக்குப் பின்னர்; அவனது சகோதரி தாமரா பிறந்தாள். ஒரே சகோதரி என்றபடியால் தாமராமேல் சுமணா அன்பைப் பொலிந்தான்.

பத்தாம் வகுப்புக்கு மேல் சுமணாவால் படிப்பைத் தொடர முடியவில்லை. தாமரா படிப்பில் கெட்டிக்காரி. அவள் படித்து பட்டம் பெற வேண்டும் என்பது சுமணாவின் ஆசை. குடும்ப வருமானத்துக்கு உதவ ஆரம்பத்தில் தென்னந்தோட்ட முதலாளியொருவரிடம் டிரைவராக சுமணா வேலை பார்த்தான். அந்த வருமானமும் உபதிஸ்ஸவின் குடும்பத்துக்குப்; போதவில்லை. அந்த சமயம் அரசாங்கம் இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்த்தபடியால் பொத்துஹெரவில் உள்ள புத்தவிகாரை ஒன்றின் பிரதம பிக்குவினதும், பாராளுமன்ற உறுப்பினரதும் ஆலோசனைகள் படி இராணுவ வீரனாக இராணுவத்தில் சுமணா சேர்ந்தான். அதில் கிடைத்த ஊதியமும் சலுகைகளும் தாராகாவின் மேல் படிப்பிற்கு உதவியது.

சுமணதிஸ்ஸ இராணுவத்தில் சேர்ந்து இரண்டாம் வருடமே வடக்கு மாகாணத்துக்கு விடுதலைப் புலிகளோடு போர் புரிய அனுப்பப்பட்டான். அவனுக்கு உயிர்களை அழிப்பதில் அவ்வளவுக்கு விருப்பமில்லை. என்ன செய்வது? இராணுவத்தில் சேர்ந்தால் கடமையைச் செய்தாக வேண்டுமே. பூனகரி நாகதேவன் இராணுவ முகாமுக்கு மாற்றலாகி சென்று மூன்று மாதத்தில் விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதல்

முகாமின் மேல் நடந்தது. இராணுவ முகாமில் இருந்த பல இராணுவத்தினர் உயிர் இழந்தனர். சிலர் போர்க் கைதிகளாயினர். இராணுவ முகாம் தரைமட்மாக்கப்பட்டது. விடுதலைப் புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட போர்க் கைதிகளில் சுமணதிஸ்ஸவும் ஒருவன்.

பூனகரி போருக்கு முன்னர் தனது சகோதரி தாமரைக்கு மார்பகத்தில புற்றுநோயென்ற துயரமான செய்தி சுமணாவுக்கு கிட்டியது. லீவு எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய் சகோதரியைப் பார்க்க முடியாத நிலை அவனுக்கு . போர் முடிநதபின் போகலாம் என்று கெப்டன் சொன்னதை அவனல் மீறமுடிவில்லை. அதன் பிறகு அவன் எதிர்பாராதவாறு எல்லாம் நடந்து விட்டது.

****

1993ஆம் ஆண்டு நடந்த பூனகரிப் போரில் சுமணதிஸ்ஸ தனது வலது காலை இழந்தான். அவனுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்து போர்க் கைதியாக விடுதலைப் புலிகள் இயக்கம் வைத்திருந்தது போர்க் கைதிகளைக் காவல் செய்யும் பெண் போராளியின தோற்றம் சுமணாவுக்கு தன் சகோதரி தாமராவை நினைவுட்டியது. தன்னையறியாமலே அவனுக்கு அப்பெண் போராளி மேல் ஒருவிதப் பாசம் தோன்றியது. தமிழ் ஓரளவுக்கு பேசக் கூடியவன் சுமணா. பெண் போரளிக்குத் தான் எக்காரணத்தால் இராணுவத்தில் சேர்ந்தேன் என்பதை விளக்கி தன் சகோதரி மேல் தான் வைத்துள்ள பாசத்தை எடுத்துச் சொன்னான்.

"தங்கச்சி எனது சோகக் கதையைப் பொறுமையாகக் கேட்டதுக்கு மிகவும் நன்றி. உமது தோற்றம் என் தங்கச்சி தாமராவைப் போல இருக்கிறது. உம்மை பார்க்கும் போதல்லாம் தாமராவின் நினைவு தான் எனக்கு வருகிறது", தாழ்ந்த குரலில் பெண்போராளிக்குச் சொன்னான சுமணா.

"மன்னிக்வும். உமது கதையைக் கேட்டு எனது உணர்வுகளை நான் வெளிக்காட்ட முடியாத சூழ்லையில் இருக்கிறேன். அது எங்களுக்கு எமது இயக்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு. அப்படி நான் என் உணர்வுகளைக் காட்டினால் எனக்குப் அதனால் பிரச்சனைகள் ஏற்படலாம்", பெண் போராளி சுமணாவுக்ச் சொன்னாள்.

"எனக்குத் தெரியும் உங்கள் இயக்கம், கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் இயக்கமென்று. எனக்கு ஆர்மியில் சேர விருப்பமில்லை. என்ன செய்வது? எங்கள் குடுமபத்துக்கு வருமானம் போதாதாலும், எங்கள் ஊர் பௌத்த பிக்குவினதும் எம்பயினதும் வற்புறுத்தலாலும் நான் ஆர்மியில் சேர வேண்டியிருந்தது. எனது தந்தை என் சகோதரியின் வைத்திய செலவுக்காக வயல் காணியை அடைவு வைத்து 25,000 ரூபாய்க்கள் அதிக வட்டிக்கு கடன் வாங்கினார். அதைக் கொடுக்கமுடியாமல் கஷ்டப்படுகிறார். ஆர்மியில் நான் சேர்ந்த பிறகு தான் கடனை அடைக்க முடிந்தது. ஆர்மியில் இருக்கும் போது ஒரு தடவை தான் என் ஊருக்கு நான் போகக் கிடைத்தது"

"அரசியல் காரணத்துக்காக, அரசியல் வாதிகள் எல்லாளன் துட்டகைமுனு போரை உதாரணம் காட்டி தமிழர்கள் தமிழ்

நாட்டில் இருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் எனப் பிரச்சாரம் செய்து சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே பகைமையை வளர்த்தார்கள். இங்கு வாழும் தமிழர்களும் இலங்கையர்கள் தான். பிறகு ஏன் இந்த இனங்களுக் கிடையே வேறுபாடு. தமிழர்கள் கேட்கும் அவர்களது உரிமைகளைக் கொடுத்திருந்தால் போர் வந்திருக்காதே. பல உயிரகள் பலி ஆகியிருக்காதே'', பெண்போராளி சுமணாவுக்கு எடுத்துச் சொன்னாள்.

''தங்கச்சி நீர் சொல்வது உண்மை. வெளிநாடுகள் இலங்கையின் அபிவிருத்திக்கும் மக்களின் ஏழ்மையைப் போக்கவும் நிதி உதவி செய்ததாக கேள்விப்பட்டேன். அதில் கிடைத்த நிதியின் ஒரு பங்கை ஊழல் கலந்த அரசியல்வாதிகள் சூறையாடி விட்டார்கள். மிகுதிப் பணம் ஆயுதங்கள் வாங்கச் செலவு செய்யப்பட்டதாக பல இராணுவ வீரர்கள் காம்பில் பேசிக் கொண்டார்கள்'', என்றான் சுமணா.

''நீர் சொல்வது உண்மையாக இருக்கலாம். உம்மோடு நான் அதிகம் அரசியல் பேச கூடாது. எனது கடமை போர்க் கைதிகளை காவல் காப்பது. பூனகரி போரில் நீர் ஒரு காலை இழந்தீர். நீர் எங்கள் எதிரி என்று தெரிந்திருந்தும், தக்க சிகிச்சை செய்து உமது உயிரை எமது இயக்கம் காப்பாற்றியதை நீர் அறிந்திருப்பீர் என நினைக்கிறேன். இது ஒரு தமிழ் போராளிக்கு நடந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று தெரியும் தானே. 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை ஜெயிலில் 55 அரசியல் கைதிகள் மிருகத்தனமாக கொலை செய்யப் பட்டது உமக்குத் தெரியும்

தானே. அதைத் தொடர்ந்து களுத்துறை, பிந்துனாவெள ஜெயில்களில் தமிழ் அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் எமது இயக்கம் போர்க்கைதிகளான உங்களைக் கொலை செய்து பழிவாங்கவில்லை. போர்க் கைதிகளை எப்படி நடத்த வேண்டும் என்ற சர்வதேச சட்த்துக்கு ஏற்ப நடத்துகிறது'' பெண் போராளி சுமணாவுக்கு சுட்டிக்காட்டினாள்.

''உண்மை தங்கச்சி. நான் அரசின் பயங்கரவாதச் செயலை நினைத்து வெட்கப்படுகிறேன். போர் தொடர்ந்தால், அரசியல் வாதிகளின் செல்வம் பெருகும். படித்தவர்கள பலர் நம் நாட்டைவிட்டுப் வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள். எங்களுடைய எம்பிக்கு அம்பன்பொல என்ற ஊரில் ஒரு பெரிய கோழிப்பண்ணையும், பன்றிப் பண்ணையும் உண்டு. ஆர்மிக்கு கோழி முட்டையும், பன்றி இறைச்சியும் விநியோகம் செய்ய கொன்டிராக்ட் எடுத்திருக்கிறார். அவர் தன மகனின் பாதுகாப்பு கருதி மகனை மேல் படிப்பிற்கு வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டார்'', என்றான் சுமணா.

''உமது சகோதரிக்கு உள்ள பிரச்சனைப்பற்றி எங்களுடைய மேஜருக்கு உம்மை அவர் உம்மை குறுக்கு விசாரணை செய்தபோது எடுத்துச் சொன்னீரா? பெண் போராளி சுமணாவைக் கேட்டாள்,

''என் குடும்பத்தின் முழுக்கதையும் நான் போர்க் கைதியான போது உங்களது மேஜர் சந்திரன் என்னைக் குறுக்கு விசாரணை செய்த போது விபரமாய் சொன்னேன். என் தங்கை தாமரைக்கு

மார்பகத்தில புற்று நோய் என்றும், என் தந்தை வாங்கிய கடனைப் பற்றியும் சொன்னேன்''.

''அவர் அதுக்கு என்ன சொன்னார்''?

''அவர் மௌனமாக ஒன்றுமே பேசாது கேட்டுக் கொண்டிருந்தார். நான் போர்க் கைதியாக உங்கள் கட்டுப்பாடடுக்குள் வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. எப்போ எனக்கு விடுதலை கிடைக்கும் என்று தெரியாது. தமிழ் போர்க கைதிகள் சிலரோடு எம்மை பரிமாற்றம் செய்ய பேச்சு வார்த்தைகள் நடப்பதாக என்னோடு இருக்கும் மற்றைய போர்க் கைதிகள் சொல்லிக் கேள்விபட்டேன். அது உண்மையா? அப்படியிருந்தால் எனக்கு விடுதலை கிடைக்க வாய்ப்புண்டா? என் சகோதரியை நான் போய் பார்க்கலாமா?

''அது எனக்குத் தெரியாது. நடக்கப் போவதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்'' நான் உம்மிடம் வந்த காரணம் வேறு.''

''என்ன காரணம் தங்கச்சி''?

''உமக்கு உமது வீட்டில இருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அதை உம்மிடம் கொடுப்பதா வேண்டாமா என்று முதல் மேஜர் சந்திரன் யோசித்தார். கடிதத்தை வாசித்த பிறகு உம்மிடம் கடிததத்தைக் கொடுக்கச் சொன்னார்'' என்றாள், கடிதத்தைச் சுமணாவிடம் பெண்போராளி கொடுத்தபடியே.

சுமணா சிங்களத்தில எழுதி இருந்த கடிதத்தை வாங்கி வாசித்தான். அவன முகம் மாறியதை பெண்போராளி கண்டாள்.

*“என்ன ஏதும் உமது வீட்டில் இருந்து நற்செய்தியா?”*

*“ஆமாம் தமராவுக்கு இந்தியாவுக்கு சென்று சென்னை அப்பலோ வைத்தியசாலையில் மார்பக புற்றுநோயுக்கு வைத்தியம் செய்ய யாரோ பணம் கொடுத்து ஒழுங்கு செய்திருக்கிறார்களாம். அதிக செலவாகியருக்குமே என நினைக்கிறேன். யார் அந்த புண்ணியவானோ தெரியாது. வைத்தியத்தின் பின் பயமில்லாமல் இன்னும் பல வருஷங்கள் அவள் வாழலாம் என்று சென்னையில் வைத்தியர்கள் சொன்னார்களாம்”, என்றான் சுமணா.*

*“நல்ல செய்திதானே. நீ இனி உமது தங்கையைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை”.*

*“அதில்லை தங்கச்சி இவ்வளவு பணத்தை எந்த நல்ல மனசு உள்ளவன்; வைத்தியத்துக்கு கொடுத்திருப்பான் என யோசிக்கிறன். பெரும் தொகை செலவாகியிருக்குமே”*

*“நான் சொல்லக் கூடாது, நான் நினைக்கிறேன் உமது கதையைக் கேட்ட மேஜர், எங்கள் இயக்கத்தின் தலைவருக்கு உமது கதையைச் சொல்லியிருப்பார் என்று. எமது தலைவர் உமது தங்கையின் வைத்தியத்துக்கு ஒழுங்கு செய்திருக்கலாம் அல்லவா? சுமணாவின் முகத்தைப் பாராது சுமணாவுக்கு விளக்கம் கொடுதாள் பெண்போராளி;.*

*“உங்கள் தலைவர் அவ்வளவு இரக்கச் சுபாவம் உள்ளவரா? அவரைப்பற்றி தவரான கருத்து சிங்களவர்களிடையே நிலவுகிறதே. அவர் அப்படி உதவி செய்திருந்தால் அதுக்கு என்*

மனமார்ந்த நன்றி. அவர் நீண்ட காலம் வாழ வேண்டும்”, கண்களில் இருந்து நீர் வழிய இரு கரங்களையும் கூப்பி; புலிகள் இயக்கத்தின் தலைவரை நினைத்து போர்க் கைதி சுமணா கும்பிட்டான். பெண் போராளி ஒன்றுமே பேசாமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

****

## *கதை 16*

### *சுமை*

*வவுனியா வடக்கு பிரதேசத்தின் மாங்குளம் முல்லைத்தீவு பாதியில் ஒலுமடு கிராமத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் தமிழரின் பூர்விக பிரதேசமான (300 மீற்றர் உயரமுடையை) வெடுக்ககுநாரி மலை அமைந்துள்ளது ஒலுமடுவில் இருந்து 2 கி மீ தூரத்தில் வெடுக்ககுநாரி மரங்களாளில் சூழப்பட்ட குன்று ஒன்று உண்டு*

*குறித்த மலைப்பகுதியில் ஆதி லிங்கேஸ்வரர் என்ற சிவனுடைய லிங்கம் காணப்படுவதுடன் தமிழ் மக்களுடைய நாகர்களின் புராதான பிரமிய எழுத்துக்களும் காணப்படுகின்றன. கடந்த ஐந்து தலைமுறையாக அப்பகுதி மக்கள் குறித்த ஆலயத்திற்கு*

*பல விழுதுகளுடன் சடைத்து வளர்ந்த ஆல மரம் குன்றுக்கு போகும் பாதையோரத்தில் கம்பீரமாக காட்சியளித்தது. அதன் நிழலில் ஒரு சுமைதாங்கி, யாரோ ஒரு புண்ணியவான் தயவால், பல தசாப்தங்களுக்கு முன்னர் கற்களால் உருவாக்கப்பட்ட உபயமது. சுமைதாங்கியின் கற்களில் தமிழ் எழுதிப் பழகியிருக்கிறார்கள். பாவம் சுமைதாங்கி, ஏடாக மாறிவிட்டது போலும். எத்தனையோ வழிப்போக்கர்கள் தலையில் சுமந்து வந்த சுமைகளை அது கூலிபெறாமல் தாங்கிச் சேவை புரிந்தது. அச் சுமைதாங்கி 18ம் நூற்றாண்டில் மன்னர் ஒருவரால்*

தோற்றுவிக்கப்பட்டது என அதன் வரலாறு பேசினர் சிலர். சுமையை இறக்கிவைத்துவிட்டு வழிப்போக்கர்கள் ஆலமர நிழலில் இளப்பாறிச் செல்வதுண்டு . மரமும் சுமைதாங்கியும் இணைந்து செய்த சேவையை அவ்வூர் மக்கள் கவனித்ததாக இல்லை. பாதைக்கருகே இருந்த அந்தச் சுமைதாங்கியை பெயர்த்து எடுத்து பாதையை விரிவாக்க வழி விட வேண்டும். அப்பொழுதுதான் கிராமத்துக்கு பஸ் போக்கு வரத்து வருவதற்கும் கிராமம் முன்னேறவும் வசதியாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தார்கள் ஊருக்கு ஏதோ நல்லது செய்யப் போவதாக நினைத்த சில பணம் படைத்த அரசியல் பிரமுகர்கள். முதலில் சுமைதாங்கி, அதன் பின்னர் ஆல மரமா அவர்களது இலக்கு என்ற கேள்வியை எழுப்பினான்; முற்போக்குவாதியான ஒரு கிராமத்து இளைஞன். அத் திட்டத்தை முன் வைத்தவர்களுக்கு வாழ்க்கையில் பணம் கைநிறைய இருந்ததால் குடும்பச் சுமை, உழைப்பாளிகளின் பாரம் , சமூக சேவை போன்றவை முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பாதை ஓரமாக, ஆல மரத்துக்கு அண்மையில் ஓலைக் கூரையுடன் சிறு தேனீர் கடை வைத்திருந்த செல்லையா சுமைதாங்கியும் ஆல மரமும் செய்த சேவை பற்றி கதையாக சொல்லக்; கூடியவன். அது தேனீர் கடை மட்டுமல்ல சைக்கில் கடையும் கூட.

ஒரு சமயம் கடும் வெய்யிலில் தலையில் தனது உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பதற்காக வியர்க்க வியர்க்க சுமந்து வந்த விவசாயி ஒருவன் மூர்ச்சித்து கீழே விழாத நிலையில் அவனுக்கு கைகொடுத்தது அந்தச்

சுமைதாங்கி. கொண்டு வந்ததை அதில் வைத்துவிட்டு மயக்கம் கண்களைச் சுழட்ட கீழ் முச்சு பெரு முச்சு வாங்கியபடி சுமையை தாங்கி வந்தவன்; தூணில் சாய்ந்தபடி மயங்கிவிட்டான். அரை உயிரோடு இருந்த அம்மனிதனைக் கண்ட செல்லையா ஓடிப்போய், முகத்தில் தண்ணீர்; தெளித்து வரண்ட தொண்டை இதமாக இருக்க பானையில் இருந்த குளிர்ந்த தண்ணீரைக் கொடுத்து சுயநிலைக்கு அவனைத் திருப்பிக் கொண்டுவந்தான். பிறகு தான் தெரிய வந்தது தன்னைப் போல் பெரும் குடும்பச்சுமையையும் கடன் சுமையையும் அவ்விவசாயி சுமக்கிறான் என்று. அது போல் எத்தனையோ வழிப்போக்கர்களைச் செல்லையா சந்தித்து உறவாடியிருக்கிறான். அக்கிராமத்துக்கு வந்து போகும் வழிபோக்கர்கள் பலர் செல்லையாவின் ஆட்டுப்பால் கலந்த ஆடை மிதக்கும் தேனீரையும் கண்ணாடிப் போத்தல்களுக்குள் இருந்த சுடச் சுட வடையையும்,; இனிப்புப் பண்டங்களையும் சுவைத்துச் செல்லாதவர்கள் இல்லை. அதுவும் தன் கைப்பட தயாரித்த தேனீரும் இறால் வடைக்கும் ஒரு தனி மதிப்பு இருப்பது செலலையாவுக்குத் தெரியும். அந்த வடையின் சுவையை அனுபவிக்கவே வெகுதூரத்தில் இருந்து நேரே கள்ளுத்தவறணைக்குப் போக முன் பலர் வந்து வாங்கிப் போவதுண்டு. மாலை நான்கு மணிக்குள் தயாரித்த வடைகள்முடிந்து விடும் அளவுக்கு வியாபாரம் ஓரளவுக்குச் சிறப்பாக இருந்தது.

தேனீர் கடை மட்டுமல்ல சைக்கில்கள் வாடகைவிடுவது, பஞ்சரான டியூப்புகளை சில நிமிடங்கள் தேனீர் குடித்து

முடிப்பதற்குள் ஒட்டிக் கொடுப்பது, சைக்கில் சில்களை நெளிவெடுப்பது, புது டயர்கள் மாற்றுவது விற்பனைக்கு வந்த பாவித்த சைக்கில்களை நல்ல விலைக்கு விற்று கொமிஷன் பெறுவது செல்லையாவுக்கு கைதேர்ந்த கலை. ரலி , ரட்ஜ், ஹம்பர், பஜாஜி சைக்கில்களின் . தரம் , சூட்சுமங்களை முற்றாக அவன் அறிந்து வைத்திருந்தான். மரமும் சுமைதாங்கியும் செய்த சமூக சேவையில் தனக்கும் பங்குண்டு என்பதை அவன் அறியாமல் இல்லை. ஆனால் தான் செய்த சேவை வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதும் அவனுக்குத் தெரியும். இன்னும் சில வருடங்களில் மோட்டர் சைக்கில்களை திருத்துவதும், வாடகைக்கு விடுவதும் போன்ற தொழில் ஸ்தானத்துக்கு தான் உயர வேண்டும் என்பது அவன் தினமும் கண்டுகொண்டிருக்கும் கனா.

அவ்வியாபாரம் அவனது தந்தை விட்டுச் சென்ற முதுசம். அக்கடையில் தான் தன் தந்தையிடமிருந்து வேலை கற்றவன். எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவன் செல்லையா . படித்துப் பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாமல் திரிவதைக் கண்ட அவன் தன் குடும்பப் பாரத்தைச் சுமக்க தனக்குக் கைகொடுப்பது அக்கடைதான் என்பதை அவன் புரிந்து கொள்ள அதிக காலம் எடுக்கவில்லை. கடை அமைந்திருந்த காணி அவனுக்குச் சொந்தமில்லாவிட்டாலும் கடையின் உரிமை அவனுடையது. பாதை விரிவுத் திட்டத்தில் சுமைதாங்கியும் ஆலமரமும் மறைந்து விட்டால் தன் காணியும் கடையும் பறி போய் விடும் என்ற பயம் அவனுக்கு இருந்து வந்தது. தனது மனைவி, அவள் வயிற்றில் வளரும் குழந்தை அதோடு

*வளர்ந்தபிள்ளைகள் மூவர் இவர்களின் வருங்கால வாழ்க்கைச் சுமையைத் பல வருடங்கள் தானும் தன் சைக்கில் கடையும் தான் சுமக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்கு உதவியாக சில சமையங்களில் அவனது மூத்த மகன் செல்வராசு உதவியாக இருப்பான். தன் தொழிலை, நம்பிக்கை உள்ள ஒருவனுக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் தனக்குப் பின் தன்னைப் போல் கடையின் பொறுப்பை அவன் எடுக்கலாம் அல்லவா?*

*கடையிருந்த இடம் அவனுக்கு அதிர்ஷடத்தைக் கொடுத்தது. "சுமை தாங்கி சைக்கிள் கடை" என்றால் அவ்வூரில் தெரியாதவர்கள் இல்லை. கடைக்கு வந்திருந்து முன்னே போடப்பட்டிருந்த சுண்ணாம்பு கறைகள் படர்ந்த இரு பழைய வாங்குகள். கடையில் தொங்கிக் கொண்டிருந்த சுவையான கதலி வாழைக் குலை. போத்தல்களில் அலங்கரிக்கும் உணவுப் பண்டங்கள், தேனீர் தயாரித்து வழங்க உதவியாக இருக்கும் பித்தளைப் பாத்திரம். இவை முருகேசு கடையின் அடையாளச் சின்னங்கள். வாங்குகளில் அமர்ந்து பொழுது போக்க அரசியல் பேசுவது முருகேசுக்கு பிடிக்காத விடயம். அதற்காகவே கடையில் "வம்பும் வதந்தியும் வேண்டவே வேண்டாம்" என்ற இரத்தினச் சுருக்கமான வசனத்தை பலகையில் எழுதியிருந்தான். " கடன் நட்புக்கு பகை" என்ற வாசகம் கடன் கேட்பவர்களை கிட்ட நெருங்கவிடாது தடுத்தது. அரசியல் பேசுவதால் சண்டை உருவாகி சினிமாப் படங்களில் வரும் காட்சியைப் போல் தனது கடை பாதிப்படையக் கூடிய நிலையை அவன் தவிர்த்தான். இரு சினிமா நடிகைகளின் விளம்பரப் படங்கள் மட்டும் அவனது*

கடை மேல் வழிபோக்கரின் கவனத்தை ஈர்த்;தது. அதை இரசித்து விமர்சனங்கள் செய்பவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். படங்களை தன் கடையில் ஒட்டுவதற்கு முருகேசு பணம் கேட்காமல் இல்லை.

''வாழ்க்கையே ஒரு வியாபாரம்'' என்பது அவனது கொள்கை. வம்பு பேசி பிரச்சனை உருவாகாமல் தவிர்ப்பதற்காக தனக்குத் தெரிந்த ஒருவர் அன்பளிப்பாக கொடுத்துச் சென்ற பழைய வானொலி பெட்டி ஒன்றை அடிக்கடி தட்டிக் கொடுத்து பாட வைத்து வாடிக்கையாளர்களின் வீண் பேச்சை திசை திருப்பி விடுவான்.

சில சமயங்களில் செல்லையா தன் கடையை தன் பதினான்கு வயது மகனின் பொறுப்பில் விட்டு விட்டு தன் குடும்பச்சுமையை சைக்கிளில் சுமந்து செல்வான் பாடசாலைகளுக்கும் உள்ளூர் சந்தையில் பொருட்கள் வாங்குவதற்கும். அந்தப் பயணத்தை பார்த்து பலர் அதிசயித்ததுண்டு. எவ்வாறு முருகேசு தன் குடும்பத்தோடு சரிந்து விழாமல் சாதுர்யமாக சமநிலைபடுத்தி சைக்கிளில் சர்க்கஸ் வித்தை செய்பவன் போல் குடும்பத்தோடு பயணம் செய்கிறான் என்பது அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. மூன்று மைல் தூரத்தில் உள்ள அவனது குடிசை வீட்டுக்கும் நகரத்தில் உள்ள கடைகளுக்கும் போக அவனது ஐம்பது வயசுள்ள சைக்கில் தான் வாகனம். அவன் தந்தை பாவித்த ரெலி சைக்கிள் என்ற படியால் அதை தன் மனைவிபோல் கவனித்து வந்தான். யாரும் அதை களவெடுத்து செல்லாத வாறு இரண்டு

செயின் போட்டு, பெரிய ஆமை பூட்டு போட்டு செல்வது அவன் வழக்கம். தன் மகன் செல்வராசு கூட அதைப் பாவிப்பதை அவன் விரும்பியதில்லை. அவன் குடும்பத்தோடு சைக்கிலில் போகும் காட்சியைப் பார்த்து.

“அதோ பார் செல்லையாவின் குடும்பச் சுமையை சைக்கில் சுமப்பதை. பாவம் டவுனில் மட்டும் இக்காட்சியை பொலீஸ் கண்டால் நான்கு பேர் ஒரு சைக்கிளில் போன குற்றத்திற்காக வழக்கு தொடர்ந்து தண்டப்பணம் கட்டவைத்து விடுவார்கள்”, இது பலரின் விமர்சனம். பாவம் செல்லையாவின் ரலி சைக்கில். அதற்கு மட்டும் முறைப்பாடு செய்ய வாயிருந்தால் தன்னை சுமைதாங்கி போல்; முருகேசு குடும்பம் பாவிக்கிறது என்று மனித உரிமை மீறல் குழுவுக்கு முறையிட்டு செல்லையா மேல் நடவடிக்கை எடுத்திருக்கும். ஆனால் அப்படி செய்யாது தன் மேல் விசுவாசம் வைத்திருந்த காலம் சென்ற செல்லையாவின் தந்தை மீதும், தன்னைத் தினமும் பராமரித்து, துடைத்து அழகு படுத்தும் செல்லையாவுக்கும் அவமானத்தை கொண்டு வர அது விரும்பவில்லை. ஆலமரத்து சுமைதாங்கி போல் நான் இந்த பிறப்பில் இருக்குமட்டும்; சுமையை தாங்கி நல்ல கர்மாவை சேர்த்துவிட்டு அடுத்த பிறவியில் மோட்டார் சைக்கிளாகவோ அல்லது வாகனமாகவோ சரி பிறக்க மாட்டேனா என்ற நப்பாசை அதற்கு. தனது நீண்ட கால சேவயின் போது ஒரு தரமாவது நடுவழியில் முருகேசு குடும்பத்தை நட்டாற்றில் விட்டுவிடவில்லை அவ் ரெலி சைக்கிள்.

****

*தனது குடும்பத்தை வீட்டில் இறக்கிவிட்டு கடைக்கு திரும்பிய செல்லையாவுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு பிற நாட்டவர் அவனை சந்திப்பதற்காக காத்திருந்தார்.*

*“அப்பா இவர் பெயர் ஜோன். வெடுக்கநாரி மலையில் உள்ள நாகர்களின் புராதான பிராமிய எழுத்துக்களை பார்த்து படம் எடுக்க வந்திருக்கிறார் உங்களுக்காக கண நேரம் காத்திருக்கிறார்” என்றான் ஆங்கிலம் அறைகுறையாகத் தெரிந்த செல்லையாவின் மூத்த பிள்ளை செல்வராசு. பத்தாம் வகுப்பு வரை செல்வராசு வவுனியாவில் படித’தவன். மகன் ஆங்கிலம் பேசுவதை செல்லையா பெருமையாக பேசிக் கொள்வான்.*

*“வந்தவருக்கு தேனீரும் வடையும் கொடுத்தனீயா?” செல்லையா மகனைப் பார்த்து கேட்டார்.*

*“இல்லையப்பா நீங்கள் வந்தபின் கொடுப்போம் என்று விட்டனான்”.*

*வந்தவரின் தோளில் ஒரு கமெரா தொங்கிக் கொண்டிருந்தது. அவர் தமிழ் பேசியது முருகேசுக்கு வியப்பாக இருந்தது.*

*“நீர் தான் இநத கடைக்கு முதலாளி செல்லையாவா” என்று முதலில் ஆங்கிலத்தில் கேட்டார்.*

*தன் பெயரை ஒரு வெளிநாட்டவன் சொன்னவுடன் உடனே “ ஓம் சேர்” என்றான் பணிவுடன் செல்லையா. வந்வனின் வெள்ளைத் நிறத் தோலுக்குச் சேர் சொல்லி மதிப்பு கொடுத்தது. பிரித்தானிய ஆட்சியின் பிரதிபலிப்பு.*

*"யோசிக்காதையும் செல்லையை நான் தமிழ் கொஞ்சம் கொஞ்சம் பேசுவன். மொழிகள் பற்றிஆரய்ச்சி செய்பவன் உங்கள் மொழி தமிழ் மிக பழைய மொழி. நீர் உமது ரெலி சைக்கிள் நாலு பேரை சுமந்து செல்வதை என் நண்பர் எடுத்த ஒரு புகைப்படத்தில் பார்ததேன். பிரமாதமான படம். எப்படி அப்படி பலன்ஸ் செய்து கொண்டு குடும்பத்தோடு டிரவல் செய்கிறீர். ஏதும் அக்சிடென்ட் நடக்கும் என்ற பயமில்லையா உமக்கு?"*

*"எல்லாம் அனுபவம் தான் சேர். இது உறதியான சைக்கிள் பல வருடங்களாக பாவிக்கிறேன். பல வருடங்களுக்கு முன்பு, என் தந்தை;யார் இதைப் புதுசாக வாங்கி பாவித்தவர். அவர் இறந்த போது இது என் கையுக்கு வந்துவிட்டது அவர் நினைவாக."*

*"இப்போ இதன் வயது ஐம்பது வருடம் இருக்குமா"?*

*"அதுக்கு அதிகம் இருக்கலாம். என் அப்பா எப்போ வாங்கினார் என்று எனக்குத் தெரியாது"*

*சைக்கிலைப் பார்த்தால் அப்படி நாறப்து வருடத்துக்கு முன்பு வாங்கினதாக தெரியவில்லை. ஏதோ புதிய சைக்கிள் போல் அதை கவனித்து வருகிறீர் போல் தெரிகிறது".*

*"ஓம் சார். இதை நம்பித்தான் என் குடும்பம் இருக்கிறது. குடும்பத்தின போக்கு வரத்துக்கு இது தான் சேர் உதவுகிறது"*

*"புரிகிறது அந்தப்படத்தைப் பார்த்தபொது. ரலி சைக்கிள் கொம்பெனிக்காரர்களுக்கும், சஞ்சிகை ஒன்றும்; உமது சைக்கிலை சுமையோடு படம் எடுத்து, கட்டுரையொன்று எழுதி*

தங்களுக்கு அனுப்பும்படி கேட்டிருந்தார்கள். அது தான் உம்மை சந்தித்துப் பேசலாம் என வந்தேன்.''

அவர் சொன்னதைக் கேட்டதும் செல்லையாவுக்கு பெருமையாக இருந்தது. தன் ரலி சைக்கிலுக்கு அவ்வளவு மதிப்பா? செல்லையா நினைத்தான் .

''என்ன சேர் சொல்லுகிறீhகள். இந்த பழைய சைக்கிளுக்கு அவ்வளவு மதிப்பா?

'' சைக்கிளின் மதிப்பு அதன் தரத்திலும், உத்திரவாதத்திலும், வயதிலும் தங்கியுள்ளது. பழைய பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்லமதிப்பு அதை Antique Products என்பார்கள்.''

''அப்படி என்றால்''?

''பழமையான, கிடைக்க அருமையான பொருட்கள் என்பது அர்த்தம் அப்பா என்றான் மகன் செல்வராசா.

''ஆங்கிலத்தில், உமது சைக்கிள் கடை நான்; எழுதப் போகும் கட்டுரைக்கு துணை போகப் போகிறது. பின்னடைந்த நாடுகளில் போக்குவரத்துக்கு மாட்டு வண்டிலைப் போல் சைக்கில் தான் முக்கிய வாகனம். எல்லோராலும் காரும் . மோட்டார் சைக்கிலும் வாங்கும் வசதிகள் இல்லை. அதோடு பெற்றோல் விலை அதிகம். தேக நலத்துக்கும் நல்லது'', வந்தவர் சொன்னார்.

''உண்மைதான் சேர். இப்போ என்னிடம் ரிப்பெயருக்கு வரும் சைக்கில்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதில்

இந்தியாவில் தயாரிக்கப்படும் சைக்கிலை தான் பலர் விலை குறைவு என்ற காரணத்தால் வாங்குகிறார்கள். ஆனால் அவை ரெலி சைக்கிலின் தரத்துக்கு ஈடாகாது என்பது பலருக்கத் தெரியும். ரலி சைக்கிள்கள் இன்னும் பழைய ஒஸ்டீன் ஏ போர்ட்டி கார்களைப் போல் ஓடுகிறது பிரித்தானிய ஆட்சி நினைவாக. பள்ளிக்கூட மாணவர்கள் , விவாசாயிகள் , மீன் வியாபாரம் செய்பவர்கள், பல தொழிலாளிகள் எல்லோரினதும் சுமையைத் தாங்குவது இது போன்ற சைக்கில்கள் தான். அதோ தெரிகிறதே சுமைதாங்கி, அது போல என்று சொல்லுங்களேன்.

"நல்லது உம்மையும் உமது மகனையும் வைத்து கடைப் பின்ணணியில் சில படங்கள் எடுக்கப் போகிறேன். அதற்கு உமது சம்மதம் வேண்டும்"

"படமா? எதாவது உள்ளூர் பத்திரிகைக்கு அனுப்பப் போகிறீர்களா?

"இல்லை இது ஒரு பிரபல்யமான வெளிநாட்டு ஆங்கில சஞ்சிகையில் கட்டுரையுடன் வரப்போகிறது. பல நாடுகளில் வாசிப்பார்கள். அதோடு உமக்கு சஞ்சிகையில் இருந்தும் ரெலி சைக்கிள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனத்தில் இருந்தும் தகுந்த வெகுமதியும் உமக்கு டொலரில் கிடைக்கும்."

டொலரில் வெகுமதி என்றவுடன் முருகேசுவுக்கு தான் பட்ட கடன் தான் நினைவுக்கு வந்தது. அதை தீர்த்தால் தனது கடன் சுமையை குறைக்கலாம் என்று யோசித்தான்.

''என்ன யோசிக்கிறீர்? இப்படி ஒரு சந்தர்ப்பம் உமக்கு கிடைக்காது''.

''சரி உங்கள் இஸ்டம சார். இதனால் எனக்குப் பிரச்சனை வராமல் இருந்தால் சரி. இந்தப பணம் தரும் விஷயத்தை மட்டும் மற்றவர்களுக்குச் சொல்லவேண்டாம்.''

''சரி சரி. பயப்படாதையும். உமக்கு அதனால் பிரச்சனை வராது. உமது மகன் அந்த அழுக்கான உடுப்போடு காட்சிதரட்டும். நீரும் அப்படித்தான். படம் இயல்பாக இருக்கட்டும். அந்த சுமைதாங்கியையும்; ஆலமரத்தையும் சேர்த்து அதற்கு கீழ் உம்மையும் சைக்கிளையும் வைத்து ஒரு படம் எடுப்பேன்'' .

''அது நல்லது. அவைகளின் சேவையை ஒருவரும் கவனித்து கௌரவிப்பது கிடையாது. உங்கள் கட்டுரையும் படமும் இந்த சுமைதாங்கிகளை கௌரவிப்பதாக இருக்கட்டும். படம் எடுப்பதற்கு முன் எங்கள் கடையின் தேனீரையும் வடையையும் சுவைத்துப் பாருங்கள். அவைற்றின் தரம் அப்போது புரியும்'' என்று வந்தவருக்கு சொல்லிவிட்டு கடைக்குள் போனான் முருகேசு. கடைக்கு முன்னே போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்தபடி தனது கமெராவை எடுத்து தயார் செய்தார் வந்தவர். அதை ஆவலுடன் வேடிக்கை பார்த்தபடியே நின்றான் செல்வம்.

****